வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆவணி திங்கள் 13-ம் நாள் (29—8—1965) ஞாயிற்றுக்கிழமை ஐ.அவ் 1 | இதழ் 14

**முக்கிய அறிவித்தல்**

**மில்க் வைற் நீல சோப்**
தற்பொழுது புதிய ரசாயன பொருட்கள் சேர்க்கப்பட்டு
விற்பனை செய்யப்படுகின்றது.
**20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்**
கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.
இன்றே வாங்கி பரீட்சித்து பாருங்கள்.

# தனித் தமிழ் நாடு கோரிக்கை

## மீண்டும் ஒருமுறை தலையெடுக்கிறது

## இடதுசாரிகளின் புதிய யுக்தி

**தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கை மீண்டும் ஒரு முறை தலையெடுக்கப்போகிறது. தமிழ்த் தலைவர்கள் எவரும் இக்கோரிக்கையை விடுக்கப் போவதில்லை. சிங்களத் தலைவர்களே குரலெழுப்ப விருக்கின்றனர். தமிழரசாருக்கு தமிழ் பேசும் மக்களிடமுள்ள செல்வாக்கைச் சிதறடிக்கவும், தேசிய அரசாங்கத்துடன் தமிழரசார் உறவு கொண்டிருப்பதற்குப் பழி வாங்கவுமே இடதுசாரிகள் இத்திட்டத்தை தீட்டியுள்ளனர் என்று தெரியவருகிறது.**

வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஏனைய பகுதிகளிலிருந்து பிரித்து தனியான ஆட்சி நிறுவ வேண்டும் என்ற புதிய குரல் விரைவில் ஒலிக்கப் போகிறது. தமிழ் பேசும் மக்கள் இக்குரலை எழுப்பப் போவதில்லை. சிங்கள மக்கள் மத்தியிலேயே இக்குரல் முதன் முதலில் எழும் என்று நமக்குக் கிடைத்துள்ள தகவலிலிருந்து தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின்பால் தமிழ் பேசும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் குலைக்கவும், தேசிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை முறியடிக்கவுமே சில விஷமிகள் நாடு பிரிக்கும் கோரிக்கையை வேண்டுமென்றே பரப்பத்திட்டமிட்டுள்ளனராம். நாட்டில் இன்று உருவாகிவரும் சுமுகமான சூழ்நிலையினை சீர் குலைக்க இடதுசாரிகள் கடைப்பிடித்துள்ள புதிய உபாயம் இதுவாகும் என்று கருதவேண்டியிருக்கிறது.

அண்மையில் வடபகுதிக்குச் சென்றிருந்த ஒரு இடதுசாரித்தலைவர் தமது கட்சி முக்கியஸ்தர்களிடம் தங்களுடைய எதிர்காலத்திட்டங்களையிட்டு விபரித்தாராம். சிங்கள மக்களின் மத்தியில் குறிப்பிட்ட தலைவர் ஒருவர் 'தனித்தமிழ் நாடு பிரிபடவேண்டும்' எனக் குரல் எழுப்புவாராம். அப்போது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதற்கேற்றபடி எதிரொலிகளை உண்டாக்க ஏற்ற ஒழுங்குகள் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டாராம்.



சென்னை அரசாங்க நூல் வெளியீட்டுத் திணைக்களத் தலைவர் பேராசிரியர் அ. ச. ஞானசமபந்தன் இந்து மாமன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி 'நால்வர்' என்ற தலைப்பில் கொழும்பு சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் தொகுப்புரை நிகழ்த்துவதையும், விழாவில் கூடியிருந்த மக்களில் ஒரு பகுதியினரையும் படத்திற் காண்க.

## அருள்வாக்கியார் நூற்றாண்டு விழா வாழ்த்து

'ஈழம்வாழ் முஸ்லிம் பெருமக்களின் தமிழ்த் தொண்டிற்கும், இலக்கிய ஆக்கத்திற்கும் தலைமகனாய்த் திகழ்பவர் அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர். அவருக்காக எடுக்கப்படும் விழாவிற்கு எனது ஆசியை வழங்குவதில் பெருமகிழ்வேய்துகிறேன்.'

இவ்வாறு மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் நூற்றாண்டு விழாவை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

விழா தெல்தொட்டை என்கல் கொல்ல முஸ்லிம் மாவித்தியாலயத்தில் 30-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறுகிறது.



நீர்கொழும்பு நகர மக்கள் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் திரு. திருச்செல்வம் அவர்களுக்கும் ஒரு பொது வரவேற்பை நல்கினர். ஊர்வலம் ஆரம்பமாகு முன்னர் திரு. எஸ். தில்லைநாதன் தமிரசுத் தலைவர்களுக்கு சந்தனம் அளித்து வரவேற்றார். ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. வி. நவரத்தினம் சந்தனம் பெறுவதையும், தமிழரசுத் தந்தை, பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. எஸ். எம். மாணிக்கராசா முதலானோர் வீற்றிருப்பதையும் படம் காட்டுகிறது.

**நித்தம் குளித்து புத்தம் புது அழகினைப் பெற ஆசைப்படுகின்றீர்களா?**

அப்படியானல்

இன்றே

**ஒரு ஐந்து ரூபாய்**
அனுப்பிப் பெறுங்கள்

**"சருமலங்கார சஞ்சீவி தைலம்"**

(புராண இதிகாச சுவடிகளிலுள்ள அழகு லாவண்ய இரகசியங்கள் புகுத்தப்பட்டது)

**இலவச அழகுக் குறிப்பு விளக்கப் பிரசுரத்திற்கு இன்றே எழுதுங்கள்**

தயாரிப்பாளர்:

**கருணாவதி திசாநாயக்க,**
**208, கண்டி ரோட், கம்பளை.**

போன் : 454

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

## மலேயாவில் நடைபெறவிருக்கும்

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கமும்

**1966**-ம் ஆண்டு ஏப்ரில் மாசம் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் 'உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கமும்' பற்றி ஏற்கனவே பலரும் அறிந்திருக்கின்றார்கள்.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளிலுமிருந்து ஆராய்ச்சி அறிஞர்கள கலந்து கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பார்கள். அதைத் தொடர்ந்து கருத்தரங்கமும் நடைபெறும். மாநாட்டுக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகள் கீழ்க்காணும் பெருந் தலைப்புகளின் அடங்குவன வாக அமையவேண்டும். (1) தமிழ் இலக்கியத் திறனாய்வு (2) சமூக வரலாறு (3) தென் கிழக்கு ஆசியாவில் பண்பாடு (4) மொழி (5) மொழி பெயர்ப்பு (6) பிற மொழி இலக்கியங்கள் (மேற்குறித்த துறைகளுக்கு பயன் படக் கூடியவை).

### மாநாட்டுக்கான பண வசதிகள்

மாநாட்டுக்கான பண வசதி செய்து கொடுக்கப்பல நிறுவனங்களும், தனிப்பிரமுகர்களும் முன் வந்துள்ளனர். அமெரிக்காவிலுள்ள அமெரிக்க நிறுவனம் இருவரை அனுப்ப முடிவு செய்துள்ளது. வேறு கலாச்சாரத் தூதுகளில் ஈடுபாடுள்ள சங்கங்கள் நிறுவனங்களுடனும் மாநாட்டுச் செயற்குழு தொடர்பு கொண்டுள்ளது. இதுவரை கிடைத்திருக்கும் பதில்கள் நம்பிக் கையூட்டுவனவாக அமைந்துள்ளன. சென்னையில் உள்ள ஒரு வங்கி சென்னையிலிருந்து இருவரை அனுப்ப முன்வந்துள்ளது. எதிர்பார்க்கும் அளவுக்குப் பண வசதி ஏற்பட்டால் மாநாட்டுக் குழுவே ஆராய்ச்சி அறிஞர்களுக்கும், சில பார்வையாளருக்கும் பிரயாண வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்.

### மாநாட்டு வெளியீடுகள்

உருசியாவைச்சேர்ந்த தமிழறிஞர் மைக்கேல் ஆந்திரோனேவ் அவர்களுடைய 'திராவிட மொழியியல் நூன் மஞ்சரி' ஒன்றும், கலாநிதி ராம சுப்பையா அவர்களின் 'மலேசியாவின் கீழ்ப்பேராக்கின் பேச்சு வழக்குத் தமிழ் பற்றிய மொழியகரவரிசை ஆய்வும்', திரு. எஸ். சிங்காரவேலு அவர்களின் 'சங்க காலத் தமிழர் சமூகவாழ்வு' என்ற நூலும் மாநாட்டையொட்டி அச்சடிக்கப்படவிருக்கின்றன. இத்தோடு 16ம் 17ம் நூற்றாண்டுகளில் வெளிவந்த சில நூல்களின் நிழற்படப் பிரதியும் வேறு நிறுவனங்களின் உதவியுடன் பெற்றுக் கொள்ள முயற்சி நடக்கின்றது.

### மொழிபெயர்ப்பு

மலாய் மொழியிலும், சீன மொழியிலும் திருக்குறளை மொழிபெயர்க்க முயற்சிகள் நடக்கின்றன. அதேபோல மலாய் வரலாற்று நூலான 'சேஜாரா மேலாயு' என்பதை தமிழில் மொழி பெயர்க்கவும் முயற்சிகள் நடக்கின்றன. இவற்றை விற்று வரும் வருவாய் இந்த மாநாட்டுக்கும் பாவிக்கப்படும்.

### பிறநாட்டு நல்லறிஞர் வருகை

இந்த மாநாட்டையொட்டி மாநாடுச் செயலகத்துக்கு கவாய் பல்கலைக் கழக சமூகவியல் பேராசிரியர் சி. ஈ. கிளிக், சுவீடன் உபசாலா பல்கலைக் கழக ஒப்பியல் சமயப் பேராசிரியர் சி. ஜீ. டீஹ்ல், இலண்டன் பல்கலைக் கழக தென் கிழக்காசிய வரலாற்றுப் பேராசிரியர் சி. டி. கோவன், ஜெனீவா உலகப் பல்கலைக் கழகச் சேவைச் செயலாளர் திரு. சிதம்பரநாதன், யேல் பல்கலைக் கழகத் தென் கிழக்காசிய வரலாற்றுப் பேராசிரியர் திரு. ஒருன்னி லீ கற்லி ஆகியோர் வருகை தந்து மாநாடு பற்றிப் பேசி வேண்டிய உதவி நல்குவதாகக் கூறினர்.

### பொருட்காட்சி

இந்த மாநாட்டையொட்டி ஒரு பொருட்காட்சியும் இடம் பெறும். அதில் கலை, தொல் பொருள், கல்வெட்டு, நாணயங்கள், ஏடுகள், படங்கள், அரிய பழம் நூல்கள் முதலியன இடம் பெறும். இந்தப் பொறுப்பை கலாநிதி ராம். சுப்பையா கவனித்து வருகின்ருர். அயல்நாட்டு அரும் பொருட் சாலைகளிடமும் இவை தொடர்பான பொருட்களை இரவல் எடுக்கவும முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கிடைக்கவிருக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகள்

இந்த மாநாட்டில் வாசிப்பதற்காக இதுவரை கிடைத்த கட்டுரைகளின் விபரம் வருமாறு. இந்தத் தலைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(1) பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனுர்.

(அ) இலக்கியத் திறனாய்வு

(ஆ) பரணி இலக்கிய விளக்கம்.

(இ) தென்கிழக் காசியாவில் திருப்பாவை-திருவெம்பாவை.

(2) பேராசிரியர் மு. வரதராசன்

'தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்' (முற்காலம்)

(3) பேர்லின் பல்கலைக் கழகப் பேராசிரியர் செல்கா அரைன்

'பாரதியின் தேசியக் கருத்துக்கள்'

(4) வேர்சிங்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் யோன் ஸ்பெல்மன்

'திருவாங்கூர் தமிழ்நாட்டு இயக்கமும் கேரள உருவகமும்

(5) டென்மார்க் பல்கலைக் கழகப் பேராசிரியர் கே. கிளமன்

'தமிழர் - டேனியர் வணிகத் தொடர்புகள்'

(6) இலண்டன் கிங்ஸ் கொலிச் ஸ்பானிச மொழிப் பேராசிரியர் ஜேம்ஸ் கம்மிங்ஸ்

'தமிழ் -ஸ்பானிய இலக்கியங்கள்'

(7) சுவீடனைச் சேர்ந்த பேராசிரியர் காள் சசரால் டீஹ்ல்

'மானிட நூலியலும் தமிழ் இலக்கியமும்'

(8) சிங்கப்பூர் பல்கலைக் கழகப் பேராசிரியர் வில்லியம் வில்லெடிஸ்

'சோழர் காலத்தில் இந்தியாவில் சீனர் வணிகம்'

(9) மலேயாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சியத் காசின் அலி

'மலாய்ச் சேரிப்புற சமூக அமைப்பில் இந்திய முஸ்லிம்களின் சமூக பொருளாதார நிலை'

(10) தஞ்சாவூர் ஜி. சிவஞானம்

'கம்பன் கற்பனை'

(11) மலேசியத் தேசிய பொதுச் சுவடி நிலையப் பொறுப்பாளர் கலாநிதி வேர்காவன்

'ஒல்லாந்தர் மலாக்காவில் தமிழர்'

(12) லிஸ்பன் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஏ. டா. சில்வா ரேகோ

'போர்த்துக்கிசிய மலாக்காவில் தமிழர்'

(13) யேல் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருன்னி லீ கற்லி

'தமிழரும் தேசியமும்'

(14) மலேசியப் பல்கலைக் கழகப் பேராசியர் கமள சேன்டற்.

'மலேயாவில் இந்தியரும் நகர்புற அமைப்பும்.'

(15) காவாய் பல்கலைக் கழகப் பேராசியர் சி. ஈ. கிளிக்

'மலேசியாவில் இந்தியத் தலைமை.'

(16) கலிபோனியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் யூசின் ஏச்சிக்

'20ம் நூற்ருண்டில் சென்னையின் சமூக இயக்க வளர்ச்சி'

(17) பேராசிரியர் சி. இலக்குவனுர்.

'தமிழில்இலக்கியக் கோட்பாடுகள்'(முற்காலம்)

(18) மலேயாப் பல்கலைக் கழகப் பேராசிரியை திருவாட்டி ஆஸ்மா காஜி ஓமார்.

'மலே மொழியில் இந்திய இலக்கியங்கள்'

### ஈழத்திலிருந்து ......

(1) வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா.

(1) தமிழிலுள்ள கப்பற் துறைச் சொற்கள்'

(2) தற்காலத் தமிழ் இலக்கணத்துக்கான புதிய இலக்கணக் கோட்பாடுகள்.'

(2) பேராசிரியர் வில்சன் ஜெயரத்தினம்.

'19ம் நூற்றாண்டின் பிற் பகுதியிலும், 20ம் நூற்ருண்டிலும் இலங்கையின் அரசு யாப்பு,அரசியல் வளர்ச்சிக்கு ஈழத் தமிழர் பணி.'

(3) வித்துவான் வி. சி. கந்தையா.

(1) 'மட்டக்களப்புத் தமிழ் மக்களின் சமூக வரலாறு'

(2) 'வியாக்கியானத்திலும் சிறனாய்விலும் மரபு வழியும் தற்கால முறையும்'

(4) கலாநிதி ஜி. தம்பையாபிள்ளை.

(1) தமிழ் இலக்கியச் சான்றுகளில் இலங்கையின் புவியியல்'

(2) 'தமிழ் இலக்கியத்தில் புவியியற் கருத்துக்கள்.'

(5) திரு. கே. கணேஷ்

'தென் கிழக்காசியாவில் பத்தினி வணக்கம்—முக்கியமாக இலங்கையில்'

(6) கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை.

'தமிழில் பெயரடைச் சொற்கள்'

(7) திரு. சோ. செல்வநாயகம்.

'அறிவியற் சொல்லாக்கத்துக்கு தமிழின் இயைபு.'

### தமிழ் விழா

மாநாடு முடிந்ததும் மலேயாவின் பல தமிழ்ப் பகுதிகளிலும் பெரும் தமிழ்விழாக்கள் நடைபெறும்-ஆராய்ச்சி அறிஞர்கள் உரை நிகழ்த்துவார்கள். மலேசிய வானொலியிலும், தொலைக் காட்சியிலும் பேட்டிகளும், பேச்சுகளும் இடம் பெறும்.

### ஈழத்தறிஞர்களுக்கு...

மாநாட்டின் அடிப்படையில் ஈழத்திலிருந்து இன்னும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை மாநாட்டு அமைப்பாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். கட்டுரைகள் நான்காக மடித்த தாள் அளவில் இரட்டை இடைவெளிவிட்டு அச்சடித்த பிரதிகளையே எதிர்பார்க்கிறார்கள். தாளின் ஒரு புறத்தில் மட்டும் அச்சடிக்க வேண்டும். ஆறு பக்கம் மட்டில் இருந்தால் போதும். கட்டுரைத் தலைப்புகளை ஆகஸ்ட் 31க்கு முன்பதாகப் பதிவு செய்யவேண்டும்.

கட்டுரையின் அமைப்பு பற்றிய 50 சொற்களுக்கு மீருத விபரத்தை பதிவுக்கு விண்ணப்பிக்கும்போது இரண்டு பிரதிகளுடன் அனுப்பவேண்டும். கட்டுரை டிசம்பர் 31 க்கு முன்பு அனுப்பப்படவேண்டும். கட்டுரைகள் ஆங்கிலத்திலிருக்க வேண்டும். தமிழில் எழுதப்பட்டாலும் ஆங்கிலமொழி பெயர்ப்பும் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுரையை எழுதிய அறிஞர் தன் செலவில் செல்ல இயலாவிட்டால் மாநாட்டு அமைப்பாளர் பிரயாண வசதி செய்து கொடுக்கக்கூடும். பார்வையாளராகஇங்குள்ள ஒவ்வொரு தமிழ் தொடர்பான சங்கங்களும் ஒருவரையாவது அனுப்பிவைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிருர்கள். பார்வையாளர் உட்பட மொத்தம் 50 பிரதிநிதிகளையாவது இங்கிருந்து எதிர்பார்க்கிருர்கள். அவர்கள்தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உலகத் தமிழாராய்ச்சி இந்தியப்பகுதிக் கழகம், மலேயாப் பல்கலைக் கழகம், மலேசியா.

இலங்கையில்இந்தமாநாடு பற்றி மேலும் விபரம் பெற விரும்புவோர் கீழ்க்காண்போரின் உதவியை நாடலாம்.

(1) திரு. மு. வயிரவப்பிள்ளை, 50, சென்ற். லோறன்ஸ் வீதி, கொழும்பு-6.

(2) திரு. ஆ. தேவராசன், 19, பீற்றசன் ஒழுங்கை, கொழும்பு-6.

(3) வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா, அரசகரும மொழித் திணைக்களம், கொழும்பு.

[இந்தவிபரங்கள் 7-8-65ல் நாவலர் கழக மண்டபத்தில் அறிஞர் தனிநாயக அடிகள் நிகழ்த்திய உரையிலிருந்து தொகுக்கப்பட்டது].

## மறக்கப் போமோ?

**திருக்கோணமலைக் கவிராயர்**

கோணேசர் மணி ஒலியில் சோகஓசை
கோ... வென்ற கூக்குரல்கள் ஏகஓசை
மானெல்லாம் மருண்டோடும் போரி ஞேசை
மந்தியெலாம் தாவுகின்ற பயத்தி ஞேசை
"வீணல்ல இதுஎன்ன? சகுன மென்று"
விரைந்தோடி நண்பர்களைக் கேட்டேன், அன்ஞர்
சாவென்று வந்ததுவாம் உனக்கே என்று
சரைசரையாய் நீர்பொழிய முகத்தாற் சொன்ஞர்

நானேடி வருகையிலே உறங்கி விட்டாய்
நமனோடு உறவாடி இணைந்தும் விட்டாய்
வானேடு தேனுகக் கலந்தும் விட்டாய்
வானேடு தேனுகக் கலந்தும் விட்டாய்
வைத்த உடல்மீதில் வெண்மலராய் விட்டாய்
கோனுத திருக்கோண மலையின் மண்ணைக்
கொந்தளித்த கடலாக்கிப் போயே விட்டாய்
காணுதுதவிப் போர்க் காய்க் கனவிலேனும்
கருணையுருமுகம் காட்ட வருகு வாயா?

வீரம்சேர் கோணர் மண்ணில்
விளைந்தமுத் தெல்லாம் நோக்கி,
தானுமோர் முத்தே என்றும்
தமிழருள் வித்தே என்றும்
சீலமாய்ச் செத்தே னென்றும்
சிறந்தவை புரிந்து ணர்த்திக
காலமாய் விட்டார் எங்கள்
கருணைசேர் வரோத யரப்பா

எம்-பியாய் வந்தார் தங்கத்
தம்பியாய் மறைந்தார் இன்று
வெம்பிறைத் போலே விண்ஞேர்
எம்-பியை விடுவா ராமோ
தம்பி-நீ- அழாதே! ஐயா
தமிழர்கள் நெஞ்சில் நின்றே
அன்பிறைத் சிரிக்கின் ருரே
அவர்முகம் மறக்கப் போமோ?

பாரோர் போற்றும் பெரியார்கள்
செப்டம்பர் 5-ம் திகதி
'வளர்மதி'யில் ஆரம்பமாகின்றது




ஜேம்ஸ் செல்வா,
மட்டக்குளி, கொழும்பு-15.

கே: சில பெண்கள் காதலிக்க மனதிருந்தும் காதலிக்காமல் இருப்பதன் மர்மம் யாது?

ப: காதலிக்கத்தகுதியான காளை ஒருவன் கிடைக்காததால்.

கே: நீர் இன்னும் பென்சனுகவில்லையா?

ப: பென்சனுக நான் உத்தியோகமா பார்க்கிறேன்? உத்தியோக மென்பதை அடிமைத் தொழிலெனக் கூறுகிறவனுச்சே நான்!

ஃ

M. M. A. அப்துல்மசீது,
நொச்சாயகமம்.

கே: வாலிபர்கள் அதிகம் விரும்புவது எதை?

ப: பச்சை வாடை பிடிப்பதை.

கே: சில பெண்கள் சினிமாப் பார்க்கும்போது அழுகிறார்களே ஏன்?

ப: பெண்கள் அநேகரின் இதயம் மென்மையானது. சோகக் காட்சியைத் தாங்க முடியாததால்அழுகிறார்கள்.

ஃ

க. சகாதேவன், மண்டூர்.

கே: பரந்த நெற்றியும், வழுக்கைத் தலையுமுடையவர்களும், அறிவில் சிறந்தவர்களாக இருக்கிறார்களே!

ப: ஏன் இருக்கக்கூடாது? அறிவுக்கும் வழுக்கைத் தலைக்கும் என்ன சம்பந்தம்? பரந்த நெற்றி அறிவுக்குத் தடையாக இருக்க முடியாதே!

ஃ

'குமாரச்செல்வன்',
ஏழாலை மேற்கு.

கே: தேசிய அரசாங்கத்தின் சில முடிவுகள் தமிழ் மக்கள் மனதில் அவநம்பிக்கை கொள்ளச் செய்கின்றனவே?

ப: சற்று பொறுங்கள்! பெருங்காயச் சீசாவிலிருந்து பெருங்காயம் அகற்றப்பட்டாலும், சீசாவில் இன்னும் சற்று பெருங்காய வாடை இருக்கவே செய்கிறது. விரைவில் அதுவும் அகன்றுவிடும்.

கே: கௌமன், அனில் ஆகியோருக்கு நாளுக்கு நாள் 'பச்சை வகுப்புவாத சுரம்' தலைக்கு ஏறிக்கொண்டிருக்கிறதே! தேசிய வைத்தியசாலையில் சேர்த்தால் சுரம் நீங்குமா?

ப: 'பச்சை'அல்ல-'சிகப்பு' வகுப்புவாதம்! தேசிய வைத்தியசாலையில் சேர அவர்கள் மறுக்கிறார்களே! விரைவில் மக்களே அந்த சுரத்தை நீக்கிவிடுவார்கள்.

ஃ

குயுக்தி அபிமானி,
ஹொரவாபொத்தானை.

கே: தேசிய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப: சிறந்த திட்டம்! இத்திட்டம் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதின் மூலம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க வழி வகுத்துள்ளது. சனநாயகம் தழைக்கவும் இத் திட்டம் பயன்படும். தனியார்துறை வலுவடையும்போது அதனை அடிப்படையாகக் கொண்டு இயங்கிக்கொண்டிருக்கும் சனநாயகமும் வளர்ந்தோங்குமல்லவா?

இ. மு. சுல்த்தான், மூதூர்.

கே: மூதூர் 2-வது பிரதிநிதி மயித் தேசிய அரசாங்கத்தில் சேருவாரா?

ப: வரவு—செலவுத் திட்டத்தின் பின் அவரும், அரசாங்கத்தில் சேரலாமென பேச்சு அடிபடுகிறது.

ஃ

M. P. K. ராசலிங்கம்,
புதுவட்டகுடை.

கே: நான் நினைப்பது போல எதுவும் நடப்பதில்லையே! காரணம் என்ன?

ப: நடக்கக் கூடியதை நினைக்காததுதான்காரணம்.

ஃ

பொ. மோகனதாஸ்,
கல்முனை-3.

கே: ஓய்! குயுக்தி நான் பெண்ணல்ல பேய்' என்னும் கட்டுரை எழுதப்போகின்றேன் பத்திரிகையில் இடம் கிடைக்குமா?

ப: எழுதுமுன்பே எழுதப் போவதாக மிரட்டுகிறீரே! உடனடியாக ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதில் அந்த எழுதாத கட்டுரையைப் பிரசுரியுங்கள்!

கே: குயுக்தியாரே! நான் உம்மிடம் பேட்டிக்கு வரலாமா?

ப: பேட்டியென்றால் என்ன? உங்களின் கேள்விக்கு நான் பதிலளிக்கவேண்டும். அது தானே பேட்டி? அதற்கு தான் தபால் அட்டை இருக்கிறதே!

ஃ

பசுபதி, குடத்தனை

கே: எனது மனைவி என்னை விட்டுப் பிரிந்து தாய் தந்தையருடன் இருக்கிறாள். எங்களுக்கோ விவாகப் பதிவு இல்லை. அவள் திரும்பி வந்தால் ஏற்கும் நிலையிலும் நான் இல்லை. நான் மறு மணம் செய்யலாமா?

ப: சட்டப்படி செய்யலாம். ஆனால் சட்டத்துக்காகவே திருமணம் என்று நினைத்துவிடாதீர்.

ஃ

தங்கத்துரை, ஏறுவூர்

கே: சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தைத் தேசிய அரசாங்கம் எதிர்க்குமா?

ப: எதிர்க்கவில்லை. அடுத்த மாதம் அதனை அமுல் நடத்தப் போகிறது.

கே: 12 பிள்ளைகளுக்குத் தந்தையாகிய ஒருவர் இப்போது மனைவியை வெறுக்கிறார் என்ன செய்வது?

ப: இன்னும் ஒரு டசனைப் பெற வேறு வழிதேடுகிறாரோ?

ஃ

ஆ. விஜயரெத்தினம்,
புங்குடுதீவு-10.

கே: வீழ்ச்சி அடைந்த அரசாங்கத்தின் மந்திரிகள் சிலர் சிலதினங்களுக்குமுன் யாழ்ப்பாணத்தில் கூட்டம் நடத்தினார்களாமே! இருந்தாப் போல் இவர்கள் கவனம் ஏன் யாழ்ப்பாணத்தில் விழுந்தது?

ப: தமிழ்மக்களிடம் தங்களுக்கும் ஆதரவு உண்டு என்று பறைசாற்றுவதற்காக.

ஃ

எஸ். எம். அப்துல்காதர்,
மிருலோடை.

கே: சந்தேகம் எப்படி வருகின்றது?

ப: உள்ளத்தின் நிலையற்ற தன்மையால் வருகிறது.

கே: சந்தேகத்தை தீர்க்க வழியென்ன?

ப: திறந்தமனதுடன்கருமமாற்றுதல்—அத்துடன் மென்மேலும் சந்தேகம் கொண்டு ஏற்கனவே உள்ள சந்தேகத்தை வளர்க்கா திருத்தல். இவ்விரு முறைகளும் சந்தேகத்தை நீக்கப் பயன் படும்.

ஃ

அருள்,
எட்டியாந்தோட்டை

'இந்த நாட்டில் சர்வாதிகாரம் வேரூன்றுவதைத் தடுத்து நிறுத்திய ஒரே ஒருவர் காணி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாதான்' என்று திரு. சிவசிதம்பரம் வரவு செலவு விவாதத்தில் பேசுகையில் கூறியுள்ளார். அப்படியானால் திரு. பொன்னம்பலம் சர்வாதிகாரத்தைத் தடுத்து நிறுத்திய சனநாயக வீரர் என்ற அவரின் கூற்றை அவரேமறுத்துரைக்கிறாரோ?

ப: இது பாராளுமன்றத்தில்—அது மக்களின் மத்தியில்! அதுதான் அவர்களின் அரசியல். மக்களிடம் ஒன்றைக் கூறுவதும், பாராளுமன்றத்தில் வேறொன்றைக் கூறுவதும் திரு. பொன்னம்பலத்தின் சகாக்களுக்குக் கை வந்த கலையாயிற்றே!

ஃ

கண்ணன், யாழ்ப்பாணம்

கே: ஒரு சிங்களத் தினசரியைப் பகிஷ்கரிக்கும் ஓர் இயக்கம் தென்னிலங்கையில் விறுவிறுப்பாக நடை பெறுவதாக எனது கொழும்பு நண்பன் ஒருவன் கடிதம் எழுதியிருக்கிறான். இதில் உண்மையுண்டா குயுக்தியாரே?

ப: உண்மைதான். நாட்டில் ஆங்காங்கு அதற்கென தனித் தனி குழுக்கள் நிறுவி பகிஷ்காரத்தை விறுவிறுப்பாக நடத்துவதாக பல பகுதிகளிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இதனால் அப் பத்திரிகையின் விற்பனை வீழ்ச்சியுற்றிருப்பதாக கூறப்படுகிறது. மக்களின் நலன்களுக்கு மாறாக செய்திகளைத் திரிக்கும் பத்திரிகைகளை எப்படி பகிஷ்கரிக்க வேண்டுமென்பதை இதிலிருந்து தமிழ் மக்களும் பாடம் கற்றுக் கொள்ளலாம்.

ஃ

சி. சுதந்திரராசா, தாவடி.

கே: சிங்கள வானொலியின் தேசிய ஒலிபரப்பில் 'தேசிய கீதம்' ஒலிபரப்புவதுபோல், ஏன தமிழ் ஒலிபரப்பில் ஒலிபரப்புவதில்லை?

ப: தமிழில் தேசிய கீதம் இல்லாததால்.

கே: நான் ஒரு தமிழ்ப் படம் தயாரிக்கப் போகின்றேன் அதில் நீங்கள் நகைச்சுவை நடிகராக நடிப்பீர்களா?

ப: நான் நடிக்காவிட்டாலும் என் உருவத்தைக் கண்டாலே ரசிகர்கள் நகைக்கத் தொடங்கிவிடுவார்களே.

ந. சந்திராதேவி, மல்லாகம்

கே: சுத்தத் தமிழ் எழுதும் சுதந்திரனுர் கலைப் பூஞ்சோலைக் குறுக்கெழுத்துப் போட்டியில் 'மகுடாபிடேகத்தை' மகுடாபிஷேகம் என்று எழுதியது ஏனோ?

ப. அது கூட தமிழ் சொல் இல்லையே! 'ஷ' என்னும் வடமொழி எழுத்தை உபயோகிக்காதிருக்க 'ட' உபயோகிக்கிறமே தவிர ஒரு எழுத்தை மாற்றிய அளவில் முழுச் சொல்லும் அசல் தமிழ் சொல்லாகிவிடாது.

ஃ

எஸ். எம். அப்துல் காதர்,
மிருவோடை

கே: தங்களின் குறிக்கோள் என்ன?

ப: உங்களைச் சிந்திக்க வைக்க வேண்டுமென்பதே!

# கனக்கண்டேன் தோழி!

—ஆலையூரன்—


தோழி! அடி பெண்ணே
தொல்லையறுந்ததடி
ஆழிப் பெருக்காட்டம்
ஆர்ப்பரித்து நம்மினத்தார்
வேழப் படை சூழ
வெற்றிப் பெருமிதத்தால்
வாழிப் பாட்டிசைத்து
வந்தார் புதுமையுடன்!

எட்டுத் திசைகளிலும்
எம்மொழியில் பாட்டொலிகள்
சிட்டுப் பறவையெனச்
சிரித்துக் கதையளந்தார்
கட்டுச் சிறிதழியா(க்)
காதலுடன் களிகூர்ந்து
வட்டத்துல கூடே
வண்டானுர் என்தோழி!

சங்கம் வளர்த்த தமிழ்!
சான்றோரையீன்ற தமிழ்!
தங்கக் குறளதனைத்
தந்துதவி வைத்த தமிழ்!
சங்கு முழங்கிவர
சான்றோருயர்ந்து வர
எங்குங் களி நடனம்
இன்பங் கொள் காட்சியடி!

ஆண்டுக் கணக்காக
அல்லலுற்ற நம்மினத்தின்
தூண்டிற் புழுப்போல
துடிப் போடு வாழ்ந்தவரின்
மூண்ட எரியோடு
மூழ்கி அலுத்தவரின்
கூண்டு தெறித்தோட
கனக்கண்டேன் தோழி!





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தந்தி: தாமரை
தொலைபேசி: 3597-6522

# வகுப்புவாதத்தை நிறுத்துங்கள்

"இலங்கை அரசியலில் இரண்டு கொள்கைகளுக்கிடையில் போட்டி நடைபெறுகிறது. ஒன்று ஒரே மொழி, ஒரே இனம், ஒரே மதம் என்று கூறி சிறுபான்மையினரை அடக்கியாள்வது. மற்றது பல்வேறு இனத்தவர்களையும் அணைத்து அவர்களின் உரிமைகளை மதித்து தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்றுவது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இக் கொள்கைகள் இரண்டும் காலத்திற்கேற்ப வளர்ச்சியடைந்து வந்துள்ளன.

"செல்வா-பண்டா உடன்படிக்கை தோன்றிய நாட்களில் 'சுதந்திரக் கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி' என்று பிரச்சாரம் செய்த டாக்டர் என். எம். பெரேரா இன்று சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கொண்டு தேசிய அரசாங்கம் தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப் போகிறது என்று கூறி நாட்டில் வகுப்புவாதத்தைப் பரப்புகின்றார். இத்தகைய பிரச்சாரத்தின் மூலம் இடதுசாரிகள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தைத் தானும் நாட்டில் எதிர்பார்க்க முடியாது. இனப் பிரச்சினை தீர்ந்தாலே நாட்டில் நிலையான ஆட்சியும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும்."

# 'எம்மை அடக்கி ஆள விரும்பினால் தமிழிலே ஆளுங்கள்'

## எதிர்க்கட்சியினருக்கு கா. பொ. இ. வேண்டுகோள்

இவ்வாறு வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:

எனக்கு முன் பேசிய கௌரவ பதுளைப் பிரதிநிதி (திரு. பி. எச். பண்டார) ஐக்கிய தேசியக் கட்சிதான் இந்நாட்டிலே வகுப்புவாதத்தைப் பரப்பிய கட்சி என்றும் அவர்கள் தான் பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கையைத் தடுப்பதற்கு அதனை ஒழிப்பதற்கு ஓர் ஊர்வலத்தைத் தொடக்கினார்கள் என்றும் கூறி, தமிழர்களுக்காகப் பரிந்து பேசியதற்காக நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன். என்றாலும், அப்படிப் பேசியவர், பின்னர் தமிழ் மொழிக்கும் தமிழ் உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கம் இழந்த உரிமைகளைக் கொடுக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டி, அது துரோகமான செயல்—பெரும்பான்மை மக்களுக்கு விரோதமான செயல் என்றும் அதற்காகத் தாங்கள் இந்நாட்டின் மேடைகளிலே போராடத் தயார் என்றும் கூறினார்.

### அரசியல் மயக்கம்

இந்த மயக்கம் தான் இன்று லங்கா சுதந்திரக் கட்சியும் அவர்களுடன் சேர்ந்த இடதுசாரிக் கட்சிகளும் இந்நாட்டிலே ஆட்சியை இழந்து, தங்கள் எதிர்காலத்தையும் இழந்து நிற்பதற்குக் காரணம்.

இந்நாட்டிலே ஓர் அமைதியான அரசாங்கம் அமைய வேண்டுமானால் பொருளாதாரம் உயரத் தக்க முறையிலே ஓர் அரசாங்கம் அமைய வேண்டுமானால் இந்நாட்டிலே உள்ள எல்லா இன மக்களும் சாதி மத வேறுபாடின்றி, மொழி, இன வேறுபாடின்றி ஐக்கியமாக வேண்டுமென்ற அடிப்படை உண்மையை இன்னும் அவர்கள் உணராமல் இருக்கிறார்கள் என்பதைக் காண துன்பப்பட வேண்டியிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தான் வகுப்புவாதத்தைப் பரப்புவதற்கு உடந்தையாக இருந்தது என்று நாம் கூறினாலும்கூட, இந் நாட்டிலே சிறுபான்மைச் சமூகத்தினர் எல்லோரையும் கொண்ட, சனநாயகத்திலே பற்றுக்கொண்ட எல்லோரும் சேர்ந்த ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் மனம்மாறியிருப்பது, இந்நாட்டின் எதிர்காலம் நல்லதோர் எதிர்காலமாக இருக்கும் என்பதற்கு அறிகுறியாகும்.

### திட்டமின்மைக்கு காரணம்

இங்கே எனக்குமுன் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே மூன்று பெரிய குற்றங்களை எடுத்துக் கூறினார்கள். முதலாவதாக இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஒருவித திட்டமும் இல்லையென்று கூறினார்கள். இரண்டாவதாக, பொது மக்களிலும் பொதுத் துறையிலும் பார்க்கத் தனியார் துறைக்கு அதிகமான சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். மூன்றாவதாக, ஏழைப் பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுக்காமல் செல்வர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள்.

பொருளாதாரத் திட்டம் இல்லையென்றாலும்கூட, நான் கூறுகின்றேன், சென்ற ஒன்பது ஆண்டுகளாக இந்த அரசாங்கம் பத்தாண்டுத் திட்டம்—என்றும் மூன்றாண்டுத் திட்டமொன்றும் ஓராண்டுத் திட்டமென்றும் ஏன் ஒரு மாதத் திட்டமென்றும் பெருமளவில் பல திட்டங்களை ஆக்கியும் அவை செயல் முறையில் கொண்டு வரப்படவில்லையென்பதை எல்லோரும் அறிவர். காரணம் என்ன? கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த நாட்டிலே அமைதியான அரசியல் இருக்கவில்லை. போராட்டம்தான் நடந்து கொண்டிருந்தது. போர்க் காலத்திலே எவ்விதம் நெருக்கடி நிலைமை உண்டாகுமோ அவ்வித நெருக்கடியான ஒரு நிலைமை-போராட்ட நிலை-இலங்கையில் இருந்தது.

### இன, மத உரிமை வேண்டும்

தமிழ் மக்களின் மொழி உரிமைகளை, ஆட்சி உரிமைகளை நில உரிமைகளைப் பறிக்கின்ற ஒரு போராட்டம் நடந்தபடியால்தான் இந் நாட்டிலே எந்தவிதமான ஒரு பொருளாதாரத் திட்டமும் நிறைவேறாமல், எதிர்பார்த்த முன்னேற்றம் கைகூடாமல் மக்கள் வாழவழியின்றித் தவிக்கக்கூடிய ஒரு நிலை உண்டானது என்ற அடிப்படை உண்மையை நாம் உணர்ந்துதான் ஆக வேண்டும்.

இந்நாட்டு மக்கள் நல்ல முறையிலே வாழவழிசெய்ய வேண்டுமானால்—இந்நாட்டின் பொருளாதாரம் சிறந்து செழிக்க வேண்டுமானால்—திட்டங்கள் நிறைவேறவேண்டுமானால் இந் நாட்டிலே இன உரிமை இருக்கவேண்டும்; மத உரிமை இருக்க வேண்டும்; மக்களை மக்களாகக் கருதி திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்; மக்களிடையே வேற்றுமை பாராட்டுதல் இல்லாமற் செய்ய வேண்டும். இந்த உண்மையை உணர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் சனநாயகத்திலே பற்றுக்கொண்ட எல்லா இன மக்களும் சேர்ந்துதான் இந்தத்தேசிய அரசாங்கத்தை அமைத்திருக்கின்றார்கள்.

### அன்றும் இன்றும்

ஆனால் இடதுசாரிக் கட்சியினர் இந்த உண்மையை இன்னும் உணராமல் தாங்கள் செய்த பிழைகளை மறைக்கவும் அப்பிழைகளை மீண்டும் மீண்டும் செய்யவும் முயற்சிப்பதைப் பார்க்கும்போது அவர்கள் கடந்த கால அரசியல் சரித்திரத்தை அறிந்தும் தங்களைத் திருத்திக்கொள்ளவில்லை, தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

உண்மையிலே ஐ. தே. க. அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடன் தொடர்பு கொண்ட காலத்திலே-அதாவது 1960ம் ஆண்டிலே-அவர்கள் எங்களைத் தங்களுக்கு உதவி செய்யும்படி கேட்டார்கள். ஆனால் அப்பொழுது தமிழ் மக்களுடைய உரிமைகளையெல்லாம் கொடுக்க அவர்கள் முன்வராதபடியால் நாங்கள் அவர்களுக்கு எங்கள் ஆதரவைக் கொடுக்கவில்லை. இப்பொழுது தமிழ் மக்களுடைய உரிமைகளைத் தருவதற்கு உடன்பட்டுச் சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் நாடு முன்னேற்றமடையுமென்ற உண்மையை உணர்ந்திருக்கிறார்கள். சுதந்திரக்கட்சி கூட இந்த நாட்டிலே கடந்த ஆண்டுகளுக்கு மாத்திரமன்று, அடுத்த நாலு ஆண்டுகளிலும் கூட ஆட்சியிலிருந்திருக்கலாம், அவர்களுக்கு நாங்கள் கொடுத்த வாய்ப்பைப்பயன்படுத்தியிருந்தால்—அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. எங்களுக்கு உரிமைகளைத் தருவதாகச் சொன்னவர்கள் அவர்கள். அவர்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றியிருந்தால் தருவதாகச் சொன்ன உரிமைகளைத் தந்திருந்தால், இன்றுஇந்த நாட்டிலே அவர்கள் ஆட்சியிலிருந்திருக்கலாம்.

### வரலாறு கூறும் உண்மை

இலங்கையில் கடந்த ஒன்பது ஆண்டுகால வரலாற்றினை நாங்கள் எடுத்துப் பார்க்கும்பொழுது உண்மையான அரசியல் நிலை என்ன என்பதை அறிய இயலும். உண்மையாக எந்த ஆட்சி இங்கு நிலைத்திருக்கின்றது? ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மையினரது உதவியோடு இருந்த காலத்திலே தான் இந் நாட்டில் ஆட்சி புரிந்திருக்கின்றது. இதன் பின்னர் சிறுபான்மையினத்தினரை அடக்கிப், பெரும்பான்மையினத்தினரை மட்டும் வாழச் செய்ய வேண்டும் என்ற கொள்கையோடு ஒரு இயக்கம் தோன்றியது. அதன் முன்னோடியாகத்தான் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் தோன்றினார்கள். அந்த இயக்கத்தினுடைய போர்ப்பறை 'சிங்களம் மட்டும்' தான் என்பது. எனவே, சிறுபான்மையினத்தோடு ஒத்து வாழ்வதா என்கிற ஒரு கொள்கைக்கும், பெரும்பான்மையினத்துக்காக சிறுபான்மையினத்தை மதத் துறையிலே மொழி வழியிலே அடக்கியொடுக்கி வாழ்வதா என்கிற மற்றொரு கொள்கைக்குமிடையே இலங்கையில் போராட்டம் நிகழ்ந்திருக்கின்றது. இந்த இரண்டாவது கொள்கையாகிய மொழியை மட்டும் வைத்து, மதத்தை மட்டும் வைத்து, மக்களைப் பிரித்து, சிறுபான்மையினத்தை அடக்கியொடுக்கும் முறை இனிமேல் இலங்கையில் தலைகாட்ட முடியாது என்பதற்கு அறிகுறியாகத்தான் இன்று இத் தேசிய அரசாங்கம் உருவாகியிருக்கின்றது. எனவே, சரித்திரம் கூறுகின்ற இந்த வரலாற்றை—இங்குள்ள அரசியல் வாதிகள் உணர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### மொழித் திணைக்களம்

இங்கே பொருளாதாரத் திட்டங்கள் எதுவும் இடம் பெறவில்லை. எனக்குத் தெரியும், கடந்த ஒன்பது ஆண்டுகளாக அரசகரும மொழித் திணைக்களத்திலே சிங்களத்தை வளர்க்க அவர்கள் முயலவில்லை. எவ்வளவு தூரம் தமிழ் மொழியை அழிக்க முடியுமோ அந்தத் திருப்பணியைத் தான் அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். எவ்வளவு தூரம் தமிழை அழிக்க முடியுமோ அதனைச் செய்திருக்கிறார்களேயொழிய அவர்கள் வகுத்த பொருளாதாரத் திட்டங்கள் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. சிங்களத்தை வளர்ப்பதை, சிங்கள மக்கள் சிங்கள மொழியை நல்ல முறையில் பயன்படுத்துவதை நான் வரவேற்கின்றேன். தமிழ் மொழியில் புலமை பெற்றவனென்ற முறையிலே என்னுடைய தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கு வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முதன்மை கொடுத்தால் தான் தமிழர்கள் நன்கு வாழ முடியும் என்ற கருத்திலே நம்பிக்கை கொண்டவன் என்ற முறையிலே—சிங்கள மக்கள் சிங்கள மொழிக்கு வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முதன்மை கொடுக்க வேண்டுமென்பதை நான் வரவேற்கின்றேன். அது அவர்களுடைய கடமை என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆனால், தன்னுடைய தாய் மொழியை நல்ல முறையிலே விரும்புகின்ற ஒருவன்—தன்னுடைய தாயை நல்ல முறையிலே நேசிக்கும் ஒருவன்—மற்றவனுடைய தாயை பழித்துக் கூறுவது அழகான செயலன்று.

### தாய் மொழிப்பற்று

எப்படி உங்களுடைய தாயை, தாய் மொழியை நீங்கள் பேணுகிறீர்களோ, அதற்கு எப்படி உங்கள் வாழ்விலே முதலிடம் கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அதைத் தமிழ் மக்களும் தங்களுடைய தாய் மொழிக்குக் கொடுக்க உதவி செய்ய வேண்டியது உங்களுடைய கடமையாகும். அதுதான் நீங்கள் உங்கள் தாய் மொழியை நல்ல முறையிலே வளர்ப்பதற்குரிய வழியாகும். எனவே இன்று சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையிலுள்ள போராட்டம் இந்த நாட்டிலிருந்து அகற்றப்பட வேண்டும்,

எங்களை நீங்கள் ஆள விரும்பினாலும் அடிமைகளாக்கி ஆட்சி புரிய விரும்பினாலும், உங்களுடைய பலத்தினாலே, ஆட் தொகையினாலே அடக்கியாள விரும்பினாலும், எங்களைத் தமிழிலேயே ஆளுங்கள் என்று கேட்க எங்களுக்கு உரிமையிருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆனால் இந்த உரிமையைக் கூடத் தர இயலாமலிருந்தது மிக மனவருத்தமானது. ஆகையினாலேதான் இன்று இலங்கை இந்த நிலையிலிருக்கின்றது.

(11-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாணத்தில்— 'சிங்களச் சூரியன் உதயம்!'

## 'தவச' பத்திரிகையின் ஆனந்தத் தாண்டவம்

"சிங்களம் ஓர் எழுத்துக்கூட தெரியாத தமிழ் மக்களுக்கென ஒதுக்கப்பட்ட ஒரு மாகாணமாயிருந்த கிழக்கு மாகாணம் இப்பொழுது படிப்படியாகச் சிங்கள மாகாணமாக மாறி வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தமிழ் தெரியாமல் இந்த மாகாணத்துக்குச் சென்ருல் ஒரு வாய்த் தேநீர் கூட கிடைக்காத நிலைமை முன்பு இருந்தது. இன்று நிலைமை மாறியுள்ளது. காரணம் இன்று அந்தப் பிரதேச மக்கள் சிங்கள மொழியில் பற்றுதல் கொண்டு விரைவில் சிங்களம் படிக்கத் தொடங்கியது தான்'' என்று தவஸ 23-8-65ந் திகதி ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'இப்பொழுது இந்த மாகாணத்தில் பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் 80சத விகிதம்பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாதலின் பிற இன மக்களின் சிங்கள அறிவு விருத்தியடைந்துள்ளது.

சூழ்நிலையின் நிர்ப்பந்தம் காரணமாக கீழ் வகுப்புகளிலுள்ள மாணவர்களும் இதர பாடங்களை விட சிங்களம் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதால் ஆசிரியர்களும் உற்சாகத்துடன் போதிக்கின்றனர். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பே சிங்களம் கற்பிக்கத் தொடங்கினரெனினும் இப்பொழுது ஒவ்வொரு ஆண்டிலும் சிங்களப் பொதுத் தராதரப் பரீட்சையில் விசேட சித்தி பெறும் மாணவர்களின் தொகை சுமார் ஐம்பதாகியுள்ளது.

அலுவலகங்களில் கடமையாற்றும் உயர்தர உத்தியோகத்தர்கள் மாதம் ரூபா 10-20 என்றெல்லாம் கட்டணம் செலுத்தி சிங்கள ஆசிரியர்களிடம் விசேட போதனை பெற்று வருகின்றனர்.

சிங்கள சிறிபஸ்களைப்பகிஷ்கரித்த பிரதேசமான மட்டக்களப்பிலுள்ள டிப்போவுக்கு சிறி பஸ் பெற்றுக் கொடுக்குமாறு கோரி அங்குள்ள ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தம் சரித்திரப் புகழ்பெற்றதாகும்.

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மொழியைப் படிப்பதில் காட்டப்படும் ஆர்வம் தொடர்ந்து இருக்குமாயின் நெடுநாள் செல்ல முன்பு கிழக்குப் பிரதேசமும் சிங்களப் பகுதியாகிவிடும் அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன.'

(இச் செய்தி பற்றி 'தவஸ' 25-8-65ந் திகதி எழுதியுள்ள

## சிங்கள இதழ்களில்...


தலையங்கத்தில், இச் செய்தி சிங்களப் பற்றுள்ள அனைவரையும் மகிழ்ச்சியில் மூழ்கடித்துவிடுமென்றும், சிங்கள மொழி என்னும் சூரியன் கிழக்கு மாகாணத்தில் உதயமாகியிருப்பது கண்டு அனைவரும் ஆனந்தப்படுகின்றனரென்றும், இந்த சூரிய ஒளி வகுப்புவாதத்தைத் தூண்டும் எதிர்க் கட்சியினரின் இருண்ட மூளைக்கும் வெளிச்சத்தைக் கொடுக்குமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.)

## இ.போ.ச.வில் 50க்கு 50

'இலங்கைப்போக்குவரத்துச்சபையில் பணியாற்றும் சிங்கள டிப்போ முகாமையாளரின்தொகைக்குச் சமமான எண்ணிக்கை தமிழ் அதிகாரிகளையும் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளை இ. போ. ச. நிர்வாகக்குழு எடுத்து வருகிறது.

சிங்கள அதிகாரிகளுக்குச் சமமான தொகை தமிழ் அதிகாரிகளும் நியமிக்கப்பட வேண்டுமென்று உள்ளூர் ஆட்சி மன்ற அமைச்சர் திரு. திருச்செல்வம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே தேசியமயச்சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா மேற்கண்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.'

—ஜனதின (23-8-1965)



எதிர்வரும் 30-ந் தேதி திங்கட்கிழமை மாலை தெல்தோட்டையைச்சேர்ந்த போப்பிட்டிய என்கல்கொல்ல முஸ்லிம் மாவித்தியாலய மண்டபத்தில், ஈழத்தின் தலைசிறந்த இஸ்லாமியப்புலவரான வித்துவதீபம்—மெய்ஞ்ஞான அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் அவர்களுக்கு விழாவெடுக்கின்ருர்கள். இவ்விழாவில் ஈழத்தின் பல பாகங்களிலுமுள்ள முஸ்லிம் எழுத்தாளர்கள்-கவிஞர்கள் யாவரும்கலந்து உரையாற்றுவார்களெனத் தெரியவருகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ. சி. எஸ். கமீதும், டேனியல் அப்புகாமியும் கலந்து கொள்கின்ருர்கள். ஜே. எம். எம். அப்துல் காதிர், எம். சமீம், எம். ஏ. ரகுமான், செந்தூரன், எஸ். பொன்னுத்துரை முதலிய எழுத்தாளர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். ஆ. பி. அல்லாபிச்சை அவர்கள் தலைமையில் நடைபெறும் 'அருள்வாக்கி' என்னுங் கவியரங்கில் வழுத்தூர் ஒளியேந்தி, வி. கந்தவனர், ஈழக்குமார், லிந்தாகோ ஆகிய கவிஞர்கள் கவிதைகளை அரங்கேற்றுகின்ருர்கள்.

'அருள்வாக்கி'யின் நூற்ருண்டு விழாக்கொண்டாட்டங்களின் முன்னேடியாகவே இவ்விழா ஆரம்பமாகின்றது என இவ்விழாக்குழுத் தலைவரான எஸ். எம். ஏ. கஸன் கூறினர்.

## 'இரகசியக் கடிதம் சிக்கியது'

'திரு சி. பி. டி. சில்வா ஏழுகட்சி கூட்டரசாங்கத்தின் எம். பி. களுக்கு அனுப்பிய இரகசிய கடிதமொன்று எமது கைக்குக் கிடைத்துள்ளது.

திருமதி பண்டாரநாயக்காவின் செல்வாக்கும், பண்டாரநாயக்கா ஆட்சியில் சாதாரணமனிதன் பெற்றுள்ள விடுதலையையும் நாசமாக்குவதற்காகவே அரசாங்கம் பொதுப்பணத்தைச் செலவுசெய்து 'மக்கள் அபிவிருத்திச்சபை' என்ற பெயரில் சபைகள் நிறுவப்படுவதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி பண்டாரநாயக்காவினதும், கூட்டாட்சியினதும் செல்வாக்கு இன்னும் மக்கள் மத்தியில் இருப்பதால் அதனை மிக நுணுக்கமான முறையில் நாசமாக்குவதற்காக இந்தச் சபைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று ஏழு கட்சி கூட்டாட்சியின் எம். பி. களுக்கு இந்த இரகசியக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி எம். பி. களின் தொகுதிகளிலும் இந்தச் சபைகளின் தலைமை ஏழு கட்சி கூட்டின் கையாட்களுக்கே வழங்கப்படவிருக்கிறது.'

—'சிங்களே' (22-8-1965)

## ஆட்சிமொழி காக்கும் தொழிலாளர் முன்னணி

'ஜனதின' (23-8-65) கீழ்க்காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது.

'புதிய அரசாங்கத்தின் மந்திரிசபை அண்மையில் செய்யப்பட்ட தீர்மானத்திற்கிணங்க ஆட்சிமொழிச் சட்டம் முற்ருக குற்றுயிராக்கப்பட்டு, அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகமொழியை அமுல்செய்வது 30 ஆண்டுகளுக்குப்பின்னுல் தள்ளப்பட்டு, ஆங்கிலம் மீண்டும் ஆட்சிமொழியாவதற்கு இடம் ஏற்பட்டிருப்பதால், இவ்வாறு அரசகருமமொழிக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தைத் தவிர்த்து, அதனைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் 3,87,000 உறுப்பினர்களைக்கொண்ட 30 பிரபல தொழிற்சங்கங்கள் 20-8-1965ந் திகதி ஒன்ருக இணைந்து 'அரசகருமமொழிப் பாதுகாப்புத் தொழிற்சங்க முன்னணி' என்ற பெயரால் ஒரு தொழிற்சங்க ஸ்தாபனத்தை நிறுவியுள்ளன.

## வீரகேசரியின் 'ஜனஹித்த'

'திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா-திரு. ஜே. ஆர். ஜயவர்தன கோஷ்டியால் அண்மையில் விலைக்கு வாங்கப்பட்ட வீரகேசரி அச்சகத்தில் அச்சிடப்படும் 'அவர்களின் புதிய பத்திரிகை அடுத்த மாதத்தில் வெளியிட ஏற்பாடாகியுள்ளது.

'ஜனஹித்த' என்பதே அதன் பெயர். 'ஜாத்திய' என்ற பெயரில் பத்திரிகை வெளியிட ஏற்கனவே திட்டமிட்டிருந்தனர். அந்தப் பெயர் பின்னர் கைவிடப்பட்டது. இப்பத்திரிகை வலதுசாரிப் பிரச்சாரத்தை நடத்துவதற்காக உபயோகிக்கப்படும்.

திரு. டார்சி வித்தாச்சியை ஆசிரியராகக் கொண்டு இம்மாதிரி ஓர் ஆங்கிலப் பத்திரிகை வெளியிடுவது பற்றியும் இப்பொழுது பரிசிலனை செய்கின்றனர்.

திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா ஏரிக்கரையுடன் கொண்டுள்ள சம்பந்தம் இப்பொழுது பாதியாகக் குறைந்துவிட்டதாம். ஆகவே அவர் வேறுஇடம் தேடிச்செல்ல வேண்டியதாயிற்று.'

—மவுபிம (22-8-65)

## பயங்கரத் திட்டம்: ரூ.2,30,00,000 செலவு

'யு. என். பி-தமிழரசு அரசாங்கம் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக ரூ. 2,30,00,000 ஒதுக்கியுள்ளது' என்று 'ஜனமத்தய' (20-8-65) பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'நாட்டைப் பிரிப்பதற்குத் துறைமுகத்தை மாற்றுகிருர்கள்' என்ற தலைப்பின்கீழ் 18-8-65 'ஜனமத்தய' வெளியிட்டிருந்த செய்தியாவது:-

'யு. என். பி-தமிழரசு அரசாங்கம் நாட்டைப் பிரிப்பதற்காகத் தமிழரசுக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகமுதலாவதுநடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இந்த பயங்கரமான செயலை நிறைவேற்றுவதற்காக மன்னர் வழியாக இந்தியாவுக்குச் செல்லும் பழைய வழியை மாற்றி, காங்கேசன்துறையிலிருந்து கப்பல்மார்க்கமொன்றினைத் திறக்க அரசாங்கம் சம்மதமளித்துள்ளது.

காங்கேசந்துறை துறைமுகத்தைஅபிவிருத்திசெய்து நேராக இந்தியாவரை ஒரு புதிய கப்பல் மார்க்கம் திறக்க தமிழரசுக்கட்சி யோசனை கூறியுள்ளது. இந்த யோசனை செயல்படுத்தப்படுமாயின் அதன் விளைவு பயங்கரமானதாயிருக்கும்.

இந்த பயங்கரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவா 2 கோடி 30 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று கேட்கின்ருேம்.'

## இரகசிய வானொலி நிலையம்

'ஏழுகட்சி கூட்டரசாங்கம் பதவிக்கு வந்ததையொட்டி ஒரு புதிய இரகசிய வானொலி நிலையம் இயங்கத்தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு நாளும் காலை 6 மணியிலிருந்து 7 மணிவரை இந்த இரகசிய வானொலியால் ஒலி பரப்பப்படுவது கத்தோலிக்க நிகழ்ச்சியாகும். காலையில் பஞ்சசீலமும், பிரித்ஓதுதலும் இலங்கை வானொலியில் ஆரம்பிக்கு முன்பே தன் பிரசாரத்தைத் தொடங்கும் இரகசிய வானொலி நிலையம் 1956க்குப் பின்னர் இலங்கை வானொலியின் பௌத்த சமயத்துக்குக் கிடைத்துள்ள முதல் ஸ்தானத்தைத் திட்டமிட்டு நாசமாக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மிக நுணுக்கமான நாசவேலையாகும் என்று கூறப்படுகிறது.'

—எத்த (23-8-65)

# எம வாகனம்

## நிமிடக் கதை

இரத்தத்தைக் கண்டாலே எனக்குப் பயம். தெருவிலே அருவி போல் ஓடிய இரத்தம் என் கண்களில் ஒளியைக் குன்ற வைத்தது. கண்களை ஒரு முறை கசக்கிவிட்டு மீண்டும் ஒரு முறை அக்காட்சியைப் பார்த்தேன். தலை சுற்றியது. தடுமாறியபடி தெரு வோரத்திலிருந்த விளக்குக் கம்பத்திலே சாய்ந்து கொண்டேன்.

எவ்வளவு நேரம் நான் அவ்வாறு இருந்தேனோ தெரியாது. மென்மையான கரம் ஒன்றின் ஸ்பரிசம் பட்டதும் உணர்வு பெற்று விட்டேன். மீண்டும் என் கண்கள் அப்பக்கம் திரும்பின. அதே இரத்த வெள்ளம்.

பிரேதத்தை அப்புறப் படுத்த பிரயத்தனங்கள் நடந்து கொண்டிருந்தன. தலை சுக்குநூருகச் சிதறிப் போயிருந்தது. அடையாளமே கண்டு பிடிக்க முடியாதபடி இருந்தது அவனுடைய மேனி. அவனை முட்டி மோதிச் சின்னபின்னப் படுத்தி உயிரைக் குடித்து விட்ட எமனின் வாகனம் போல் அந்த வண்டி தெரு வோரத்தில் நின்று கொண்டிருந்தது.

விபத்தைப்பார்க்கக் கூடிய கூட்டம் என்னையும் அனுதாபத்துடன் ஒரு முறை நோட்டம் விட்டது. என் கண்கள் தாரை தாரையாக நீருகுவியைப் பெருக விட்டன.

அம்மாபல தடவைகளில் என்னிடம் கூறினுள், 'தெருவிலே அவனை அழைத்துக் கொண்டு செல்ல வேண்டாம்' என்று. நான்தான் கேட்கவேயில்லை. பிறந்த காலம் முதல், பல வருடங்களாக, வீட்டுக்குள்ளேயே கிடந்து வளர்ந்தவனை ஒரு முறையாவது வெளியுலகைக் காட்ட அழைத்துச் சென்றேன். கையோடு பலன் கிடைத்துவிட்டது.

அவன் பிறக்கும் போதே ஒருகால் ஊனமாக இருந்தமையினுல் எழுந்து நடக்க வெகுகாலம் பிடித்தது. கடந்த ஒருமாதமாகத்தான் காலைக்கெந்திக் கொண்டு சுமாராக நடக்க ஆரம்பித்தான்.

எங்கள் குடும்பத்தவர்களின் அன்புக்குப் பாத்திரமானவன் இன்று எங்களனைவரையும் துடிக்க விட்டுப்போய் விட்டான்.

வீட்டார் அறிந்தால் என்ன நடக்குமோ என்ற பயம் பீடிக்க ஆரம்பித்து விட்டது. ஒரு நொடிப் பொழுதில் பல தரப்பட்ட உணர்ச்சிகள் என்னை வாட்டி வதைத்தன. மீண்டும் பழையபடி அதே மென் கரம் என் முதுகைத் தடவியது. திரும்பிப் பார்த்தேன். ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். கல்லூரி மாணவி என்பது அவள் அலங்காரத்தினுல் புரிந்தது.

'உங்கள் நிலமை எனக்கு நன்ருகப் புரிகிறது. இது போனுல் போகட்டும் நான் வேறொன்று—இதைவிட உயர்ந்ததாக வாங்கித்தருகிறேன்.' இவைதான் அவள் என்னிடம் பரிவோடு கூறியவை. என்னுயிர்த் தோழனை நாய்க்குட்டியின் உயிரைக் குடித்த எமவாகனமான அந்த மோட்டார் வண்டிக்கு உரிமையானவள் இவள். அப்படியானுல் என் நாயின் உயிரைப் பறித்த எமன் இவளேதான் என்பது புரிந்து விட்டது. விம்மி விம்மி அழுதேன்.

அப்போதுதான் என் அக்காளும் கல்லூரி முடிந்து அந்தப் பக்கமாக நடந்து வந்தாள். நிலமையை ஒரு நொடியில் அறிந்து கொண்டாள். மோட்டார் சொந்தக் காரியும் அக்காளும் ஒரே கல்லூரி மாணவிகள் போலும். என் அருமை நாயின் உயிரைப் போக்கடித்த எனது ஜன்ம விரோதி அன்றிலிருந்து என் அக்காளின் இணைபிரியாத் தோழியாகி விடுவாள் என்று எனக்கு எப்படித் தெரியும்?

அன்றிலிருந்து என் அக்காளையும் கல்லூரிக்கு அழைத்துச் செல்லவும் கல்லூரி முடிந்து வீட்டில் அவளைக் கொண்டு வந்து விடவும் அந்த எமவாகனம் எங்கள்வீட்டுக்கு வர ஆரம்பித்து விட்டது.

—விஜயா

## கருத்துமேடை

# அகப்பை பிடிக்கும் கை ஆட்சிக்கோலேந்தும் காலமிது

செல்வி குணு நடா

விரிந்த விண்ணையும், பரந்த மண்ணையும் ஊடுருவிப் புகலாம்; வான வீதியில் ஆதித்தனேடு பவனி வரும் விண் மீன்களையும் கணக்கிடலாம்; கொடுங் குளிரை, கடும் இருளை, வெயிலைத் தாங்கலாம்; ஆழ்கடலில் ஆர்ப்பரிக்கும் அலைகளையும் எதிர்க்கலாம். ஆனுல், கோதையரின் திண்மை மிகு உள்ளத்தின் ஆழத்தை அளவிட முடியாது.

'மாதாக வந்தமாயப்பிசாசங்கள்' என மகளிர்க்குப் பட்டம் புனைந்தனர் அக்காலப் புலவர்கள். 'சேலை கட்டிய மாதரை நம்பினுல் தெருவில் திண்டாட வைப்பரே' எனப் பாடினுர்கள் பாவாணர்கள்.

அது அன்று! ஆனுல் இன்றோ...?...?

'மனித வாழ்வின் சிறப்புக்குரிய பால் பெண்பால்; பெண் பாலின்றி ஆணின் வாழ்வு மாண்பு பெருது—பெண்ணே வாழ்வின் கண' என்ற முடிவு ஏற்பட்டு விட்டது.

### எல்லாம் பெண்ணுல்

தாலாட்டும்தாய்—ஆகாரமிடும் அன்னை—இன்பததின் இலக்கணத்தை ஆதி முதல் அந்தம் வரை கற்றுத் தரும் இல்வாள்—தகைமை சான்ற தமக்கை,—தீஞ் சொல்பேசி திளைக்கச் செய்யும் தங்கை—ஓடி விளையாடும பாப்பா—இவர்களெல்லாம் பெண்பாலரன்றோ?

இவர்களெல்லாம், வாழ்க்கைமுறை தெரியாத சோம் பேறிகளாயிருந்தால்......? இல்லை, நாலு சுற்றுமதிலின் நடுவே பண்பற்ற பட்டிக் காடராக வாழ்ந்தால்......?

பாரதியார் கூறுகிருர்:
'ஆணும் பெண்ணும்
நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்
வையகம் தழைககுமே!'
என்று.

### பேதம் விலகும்

ஆணுக்குப் பெண் நிகர் என்பது எப்போது?

இருபாலரும் ஒரே கல்விக் கூடத்தில் கல்விகற்று, ஆண் — பெண் பேதமின்றி, வாழ்ந்தும், விளையாட்டுகளில் கலந்து போட்டி போடும் போதும், அதில் பொருமை கொள்ளும் போதும் வெற்றியடையும் போதும்தான்.—ஆண் உயர்ந்தவன்—பெண் உயர்ந்தவள் என்ற பேதம் அகலும் போதும் தான்.

## கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [8]

அது மட்டுமல்ல, ஆண்களும், பெண்களும், கல்விக் கூடத்தில் கூட்டாக கல்வி பயிலும் போது—அவர்களுடைய உள்ளத்தில் ஒழிந்து அவர்களை வாட்டிவதைக்கும் அச்சம்—கூச்சம் என்பன மறைந்து, சகோதரத்துவம்—அன்பு மார்க்கம் பண்பு நெறிகள் முதலியன தலைதூக்குகின்றன.

### கோலேந்தும் பெண்

அகப்பை பிடிக்கும் கைகளிலேயே ஆட்சிக் கோலேந்தும் காலமிது. இவ்வேளையில் பெண்கள் அஞ்சாது அரசாள, சகோதரத்துவ முறையில் ஆட்சி செய்ய, அவர்கள் கல்விக் கூடத்தில் பழகிய கூச்சமற்ற—அச்சமற்ற உயர்ந்த பண்பு வாய்ப்பளிக்கும். அது மட்டுமின்றி, கண்ணீர் சிந்தி ஆட்சியைப்பெருமல், அஞ்சாது ஆண்களை எதிர்த்துப்போட்டியிட்டு ஆட்சியைப் பெறும் வாய்ப்பும் கிட்டும்.

வானத்திலேறி சந்திர மண்டல வாசலைத் தொடலாமா என்று ஏங்கிய காலம் போய், மனிதன் சந்திர மண்டலத்தினுள்ளேயே குடிபுகமுயலும் காலம் இது. விண்ணையும் அளந்திட முடியுமா, என்ற காலம் போய் விண்வெளிக்கு யாத்திரை செய்யும் காலமும் வந்து விட்டது. அந்த யாத்திரையில் மேல் நாட்டு வீரரமணியொருவர் ஆண்களுடன் சென்று வெற்றியுடன் மீண்டார்.

### களங்கம்

அவ்விதமெல்லாம் மேலை நாட்டார் கூட்டமாக பல அரிய புதிய சாதனைகள் செய்த பின்னும் 'நாட்டுக்கு கூட்டுக் கல்வி உகந்ததா'? என்று கேட்கும் கேள்வி கற்றறிந்த மாந்தர்கள் வாழும் நாட்டுக்கு ஓர் களங்கமன்ரோ? சகோதரத்துவ முறையில் நாடு முன்னேற—சண்டை பூசலின்றி சமாதான வாழ்வு தழைத்தோங்க இந்நாடு அறிவிலோங்கித் திகழ-நாட்டுக்கு கூட்டுக் கல்வியே அவசியம் என்பதை யாருமே மறுக்க மாட்டார்கள் என்பதுஎனது பணிவான எண்ணமாகும்.

'நிமிர்ந்த நன்னடையும்
நேர் கொண்ட
பார்வையும்,
நிலத்தில் யார்க்கும்

## மங்கையர் சங்கம்

அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச்
செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர்
திறம்புவதில்லையாம்'...

என்ற பாரதியின் பாடலால் பெண்கள் நெறி தவறமாட்டார்கள் என்பதும், நாடு சுபீட்ச மடையும் என்பதும் வலுப்படுகிறதன்ரோ.

# முகத்தின் அழகும் அகத்தின் அழகும்

## [1] அழகென்னும் பொருள்

அழகு என்ருல் என்ன? உலகம் தோன்றிய காலம் தொடக்கம் இன்று வரை சரியான பொருள் கூற முடியாத சொற்களுள் அழகு என்னும் சொல்லும் ஒன்று. இப்பதத்துக்குச் சரியானபடி பொருள் கூற எந்தப் புலவனுலும் முடியாது.

ஒருத்தியின் அழகினை அழகான வார்த்தைகளால் ஒரு புலவன் வர்ணிக்கிருன். அழகினை வர்ணிக்க அழகான வார்த்தையையே நாமும் தேடிப்பிடிக்கிருேம். இந்த அழகு மட்டும் பொருளற்ற பொருளாக, தோன்ரு உருவாகத் தொக்கி நின்றுவிடுகிறது.

கவர்ந்திழுக்கக் கூடிய சக்தியை எந்த ஒரு பொருள் கொண்டுள்ளதோ அப்பொருளை அழகான பொருள் என்று கூறலாம். ஒரு பெண் ஏனையோரைக் கவரக் கூடிய சாயலைக் கொண்டவளாக இருப்பாளானுல் அவளை நிச்சயமாக அழகுடையவள் என்று கூறிவிடலாம். பார்ப்போர் அருவருக்கத் தக்க

'குணமணி'

முறையில் ஒருத்தியின் தோற்றம் இருக்குமேயானுல் அவள் அழகற்றவளாகிருள்.

### தொடர்புக் கருவிகள்

அவயவங்கள் ஒவ்வொன்றும் அளவுடன் அமைந்திருந்தால் அதனை இவ்வுலகம் அழகுக்கு இலக்கணமாக ஆக்கிவிடுகிறது. உறுப்புக்கள் சீராக அமைந்துவிடாத எவரையும் அழகுடையோர் பட்டியலில் இந்த உலகம் சேர்த்துவிடத் துணிய மாட்டாது.

ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளுவதற்கு உபயோகமாகும் காரணக் கருவிகள், மனித உடலில் தலையிலேதான் அமைந்துள்ளன. ஒருவரை ஒருவர் பார்க்கும் போது முதன் முதலில் முகத்தைத்தான் பார்க்கின்றனர். கண்களே முதன் முதலில் சந்திக்கின்றன. ஆகவே முதலில் கண்களின் மொழி தான் பரிமாறப்படுகிறது.

ஒருவருடைய கண் மற்றவருடைய கண்ணைப்பார்த்து அளவெடுக்கிறது. அக் கண் சொல்லும் கதையை இக் கண் ஆராய்கிறது. ஆகவே முதன்முதலில் கண்ணின் அளவு, அதன் தன்மை அக் கண்ணிலே ஊறும் கருத்து அத்தனையையும் கண்ணே ஆராய்ந்துவிடுகிறது.

பார்க்கப்படும் கண் அழகைக் காணு விட்டால், மீண்டும் அக் கண்ணைப் பார்க்கக் கூசும். ஆகவே மனிதனுக்கு முதன் முதலில் கண்தான் அழகுடையதாக விருக்க வேண்டும்.

### கண்ணழகைத் தேடும் கண்

கண்களை ஆராயும் கண் அக் கண்களின் சுற்றுடலையும்

(9-ம் பக்கம் பார்க்க)

# 5 கேள்விகள்

குடித்தனம் நடத்துவதற்கு ஏற்ற அறிவினை நம் சகோதரிகள் அனைவரும் பெற்றுள்ளனரா? இல்லவேயில்லை.

சமூகத்தில் பழகுதல், கணவனுடன் வாழுதல், குழந்தை வளர்த்தல், ஆரோக்கியத்தைக் கவனித்தல், போசாக்குள்ள உணவு சமைத்தல் ஆகிய துறைகளில் நாம் இன்னும் விருத்தியடையவில்லை.

இந்த ஐந்து துறைகளிலும் போதுமான அறிவு பெற்ருல்தான் நம் வாழ்வு சிறப்புறும்—குடும்ப வண்டி சுலபமாக ஓடும். இத்துறைகளில், சிற்சில சமயங்களில் சிக்கல் ஏற்படும் போது என்னென்ன செய்வதென்று தெரியாமல் நம் சகோதரிகள் திணறுவதுண்டு. உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை விளக்கவே 5 கேள்விகள் பகுதியை ஆரம்பித்துள்ளோம்.

குடித்தனப் பாங்கிலே ஏற்படும் சந்தேகங்களையிட்டு கேள்விகளை தாராளமாக எழுதிக் கேளுங்கள். ஒவ்வொரு வாரமும் 5 கேள்விகளுக்கு மட்டும் பதிலளிப்போம்.

சகோதரிகள் சில வேளைகளில் தங்களுடைய பெயர்களை வெளியிட விரும்பாமலிருந்தால், புனை பெயர்கள் மூலம் கேள்வி கேட்கலாம்.

சுருக்கமான பதில்களை மட்டுமே தருவதற்கேற்ற இடவசதியுள்ளமையினுல் உங்கள் கேள்விகளும் சுருக்கமாகவே இருத்தல் வேண்டும்.

கேள்வி கேட்க விரும்பும் சகோதரிகள் தங்கள் கடித உறைகளிலோ அல்லது அஞ்சல் அட்டைகளிலோ கீழே உள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

**குறிப்பு:**

ஒருவர் ஒரே தடவையில் ஒரே ஒரு கேள்வி மட்டும் தான் கேட்கலாம்.

'5 கேள்விகள்' முதற் பகுதி 5-9-65ல் ஆரம்பமாகிறது.

—செல்வி அக்கா.

**5 கேள்விகள்**
செல்வி அக்கா,
**சுதந்திரன்**
த. பெ. 1183
கொழும்பு.

# வாழ்ந்து காட்டிய தியாகசீலர்

# அமரர் இராசவரோதயம்

இரண்டாண்டுகள்; உருண்டோடி விட்டன;

நம்ப முடியவில்லை;

நேற்றுப் போலிருக்கிறது; ஆம்! அமரர் இராசவரோதயனை நாம் இழந்து ஆண்டுகள் இரண்டு ஆகிவிட்டன.

ஆனால்; அவரின் எண்ணங்கள் — போராட்டங்கள் இன்று கை கூடக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருவதை—அவர் தனது வாழ்வை எப்பணிக்கு அர்ப்பணித்தாரோ, அப்பணி—அவ் உரிமைகள் சிறிது சிறிதாக பெறக்கூடிய ஓர் நல்ல சூழ்நிலை உருவாகிவருவது; அவரின் முயற்சிகள்—தியாகங்கள் வீண்போகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அமரர் இராசவரோதயம் அவர்கள் திருகோணமலையைப் பொறுத்த மட்டில் ஓர் சிரஞ்சீவி.

கோணேசர் கோவிலிலே உள்ள கொட்டிலிலே உட்கார்ந்து கொண்டு செய்யும் சமயத்தொண்டு; முற்றவெளியிலே தலைக்குக் கை கொடுத்துக் கொண்டு படுத்திருந்து மக்களுடன் சமமாக பழகும்—எளிமை; எல்லோரையும் அணைத்து— ஆதரிக்கும் பண்பு—எத்தனை வருடங்கள் சென்றாலும் மறக்க முடியாதது.

### முதல் வெற்றி

1952-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி சார்பில் முதல் முதல் அமரர் இராசவரோதயம் தேர்தலில் வெற்றியடைந்து ஈழத்து தமிழ் மக்கள் அனைவருடைய உள்ளங்களையும் கொள்ளைகொண்டார்.

ஈழத்து தமிழ் மக்களின் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்ட அந்த தலைவன் யார்? கேள்வி எழுந்தது பொதுமக்களின் இதயத்தில்—திரும்பிப்பார்த்தனர்.

சிவந்த நிறம்; கம்பீரமான தோற்றம்; ஆழ்ந்த அறிவை எடுத்துக்காட்டும் அகன்ற நெற்றி; அமைதி தவழும் முகம்; உரிமைக்குப் போராடும் ஆற்றல்; நேர்மைக்கு வாதிடும் உள்ளம்; அன்பை வாரி வழங்கும் விழிகள்—இத்தனையும்சேர்ந்த ஒரு கூட்டுத் தொகுப்பாகவே நின்று கொண்டிருந்தார் அமரர் இராசவரோதயம்.

'தலைவன் என்றஎண்ணமே எனது உள்ளத்தில் ஏழாதிருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக'



டத்தோடு செய்யமாட்டார். அமைதியாக பொறுமையாக விடாமுயற்சியோடு, இன்னும் சொல்லப்போனால் 'ஒரு வித அடக்கமான வெறியோடு' செயல் புரிவார்.

ஆனால் வெளியிலிருந்து பார்ப்பவர்கள் இவர் ஏதோ 'சோம்பேறி' 'அசட்டையானவர்' என்று தான் எண்ணுவார்கள்.

ஒரு தடவை இவரை எதிர்த்து தேர்தலில் நின்றவர் ஆர்பாட்டமாக பிரசாரம் செய்தார்; எல்லோரும் அவருடைய பக்கம்தான் வெற்றி என நம்ப ஆரம்பித்தார்கள். ஆனால் இவரோ விடாமுயற்சியோடு செயலாற்றினர், வெற்றி பெற்றார்.

### மக்கள் தொண்டன்

அமரர் இராசவரோதயம் அவர்கள் அரசியலில் மட்டும் மக்களிடம் மதிப்பை பெற்றவரல்ல அரசியலுக்கு வருமுன்பேமக்களுக்காகஉழைத்தார் — சமயத்திற்காக

**சு. ம. மாணிக்கராசா பா. உ.**

என அவரது உளம்வேண்டிக் கொண்டேயிருந்தது.

### அமைதியான தோற்றம்

அடர்ந்த மயிருள்ள அவரின் புருவத்தை பார்த்தவர்கள், அவருடைய தீட்சண்யமானகண்களை உற்றுப்பார்த்தவர்கள் யாவரும் அவரை வெகுஎளிதாகஎடைபோட்டு விட மாட்டார்கள். அதே போல் அவரும் எளிதில் எந்த முடிவுக்கும் வந்து விடமாட்டார். நாற்சந்தியைக் கடக்கும் போது நான்கு புறங்களையும் பார்த்துவிட்டு முன்னேறும் நிதான புத்தியுள்ளவரைப் போல், எதையும் ஒரு தடவைக்கு நான்கு தடவை ஆராய்ந்து, செயலில் இறங்குவார். எதையும் ஆர்பாட்

உழைத்தார் — சமுகத்திர்க்காகதொண்டுகள் செய்தார். இதன் மூலம் அவர்போதிய மதிப்பையும் — அன்பையும் மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

இவர் பாராளுமன்றத்தில் அதிகமாக பேசமாட்டார்; இதற்காக இவரை நாம் பேசத்தெரியாதவரன்றோ— விசயம் தெரியாதவரன்றோ நினைக்க முடியாது. இவர் சிறிதளவு பேசினாலும் ஆழ்ந்த கருத்தை அள்ளி வீசுவார். இவரது பேச்சைப் பற்றி டாக்டர் என். எம். பெரேரா கூறியதாவது 'பாராளுமன்றத்தில் இவரது சொற்பொழிவுகள் குறைவு, ஆனால் ஒவ்வொரு முறையும் இவர் பேசிய பொழுது அப்பேச்சு

(14-ம் பக்கம் பார்க்க)



## பறந்தே விட்டாய்

—நிலவின்தாசன்—

அலையான நின்கேசம் எங்கேயப்பா
அன்புலக இன்னமொழி எங்கேயப்பா
கலைமானின் இடையோடிக் கன்னலானும்
கவிபாடும் நிலைதனுக்கு அழைத்தேவிட்டாய்
மலையளவில் வாரியிறை கரங்களெங்கே
வசப்படுத்தும் பணிபுரியும் ஆற்றலெங்கே
தலைமகனே திருமலைக்குத் தமிழின்தேவே
தவிதவிக்க எமைவிட்டுப் பறந்தேவிட்டாய்

தமிழ்த்தாயின் கண்ணீரைத் துடைக்கக்கையைச்
சற்றுயர்த்த அதைவந்து பணித்தான்காலன்
அமிழ்தினிய குரல்மொழியும் மழலைச்செல்வர்
ஆழ்கடலில் சென்றுளமீன் பிடிக்குந்தோழர்
உமைபாகன் வணங்கிவரு சைவர் முஸ்லிம்
உலகைவெறு புத்தர்தனை வணங்கும் மார்க்கம்
என்தந்தை ஏசுபிரானின் மக்கள்
எவர்வெறுத்தார் எமைவிட்டுப் பறந்தே
வீட்டாய்

# தீண்டாமை ஒழிப்பில் தீரமுடன் ஈடுபட்டார்

## அமரர் நினைவு நாளை யொட்டி மூதூர் முதல்வர் செய்தி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடியைத் தனியொரு மனிதனாகத் திருமலையில் ஏற்றி வைத்த திரு. இராசவரோதயம் ஈற்றில் திருமலைவாழ் மக்கள் அனைவரையும் அக் கொடியின் கீழ் அணி திரட்டிய பெருமைக்குரியவர். வட-கிழக்கு மாகாணத்துக்கு ஒரு இணைப்புப் பாலமாக வாழ்ந்த திரு. இராசவரோதயம் தமது இறுதி யாத்திரையிலும் அப்பணியைச் செய்துள்ளார். தீண்டாமையை ஒழிக்க உழைத்த அந்தந் தியாகச் செம்மல் தாம் சரியெனக் கண்டதைச் சாதிக்கத் தயங்க மாட்டார்' என்று அமரர் இராசவரோதயம் அவர்களின் நினைவு தினத்தை யொட்டி வெளியிட்டுள்ள செய்தியொன்றில் மூதூர் முதல்வர் ஜனுப் முகம்மதலி குறிப்பிட்டுள்ளார்.

ஜனுப் முகம்மதலி வெளியிட்டுள்ள செய்தியின் விபரம் வருமாறு:

சிக்கலான பிரச்சினைகள் பலவற்றினுலும் கட்சி மாச்சரியங்களினுலும் பின்னப்பட்டுக் கிடந்த திருமலையைத் தமிழரசுக் கோட்டையாக்கியவர் அமரர் இராசவரோதயம் அவர்களேயாகும். வட, கிழக்கு மாகாண மக்கள் கட்சியின் பெருமையை உணராது கண்மூடிகளாக இருந்த காலத்திலேயே கட்சியின் கொடியைத் தனியொருவனாகத் திருமலையிலே பட்டொளி வீசிப் பறக்க விட்டவர் அவர்.

அன்பிலே உயர்ந்தவராய், பண்பின் உறைவிடமாய், மாற்றாரும் மதிக்கும்மாண்பு மிக்கவராய் வாழ்ந்த அவரது மறைவு தமிழ் பேசு மினத்துக்கு ஈடு செய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். சாதி, மத, இன பாகுபாடின்றி அனைவரும் சமம் என்ற சம நோக்குடன் வாழ்ந்த அவரைப் போன்ற தியாக புருடர் ஒருவரைப் —பலதரப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்

(14-ம் பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

**வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்**

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஆகஸ்ட் மாதம் 29-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# போட்டித் தொழிற் சங்கம்

அரசியல் அரங்கத்திலும் தொழிற்சங்க இயக்கத்திலும் 'சீர்குலைவுவாதிகள்' சிலர் உண்டு. அவர்கள் அரசியல், தொழிற்சங்க இயக்கங்களைச் சீர்குலைப்பதில் கை தேர்ந்தவர்கள். அதற்கான உபாயங்கள் பல கற்றவர்கள். பிறரின் சாதனையைச் சிர்குலைப்பதையே ஒரு சாதனையாகக்கருதுகிறவர்கள்,

இச் சீர்குலைவின் அடிப்படை சுயநலமே. அஃது இரு அம்சங்களைக்கொண்டது. ஓர் இயக்கத்தைச் சீர்குலைப்பதின் மூலம் பிறரின் செல்வாக்கைக் குறைக்கலாம்—பிறருக்குஏற்படும் நன்மையைத் தடுக்கலாம். அதே சமயத்தில் தனது செல்வாக்கையும் உயர்த்தலாம். தனக்கு வேறு பல நன்மைகளையும் தேடிக்கொள்ளலாம்.

இத்தகையசீர்குலைவுவாதிகள் எந்த இனத்திலும்உண்டு. எந்த இயக்கத்திலும் உண்டு. தமிழ்பேசும் மக்கள் மத்தியிலும் இத்தகையோர் சிலர் இருக்கின்றனர். அரசியலில் பல பித்தலாட்டங்களைச் செய்து, செப்படிவித்தை காட்டி சமயத்துக்கு ஏற்றபடி தந்திரமாகப்பேசி பிறரின் சாதனைகளைத் தங்களின் சாதனைகளாகக் காட்டி மாய்மாலப்பேச்சில் மக்களைமயக்கி, தகடுதத்தங்கள் செய்வதில் கைதேர்ந்த பொன்னம்பலம் கட்சியினர் தமிழ்பேசும் மக்களின் அரசியல் இயக்கத்தைச் சீர்குலைக்க அன்றும் முயற்சிசெய்தனர்—இன்றும் முயற்சிசெய்கின்றனர். 'ஐக்கியம்' என்ற போர்வையின் கீழ் சிர்தலைவு வேலைகளை நடத்துவதே அவர்கள் கையாளும் உபாயம்.

இந்தச் சீர்குலைவுவாதிகள் தங்களின் கைவரிசையைத் தொழிற்சங்கத் துறையிலும் காட்டத் தொடங்கியுள்ளனர். மொழிவழித் தொழிற்சங்கங்கள் பல இன்னல்களிடையே இன்று வளர்ந்தோங்கி நிற்கின்றன. தமிழ்பேசும் மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைப் பெறுவதற்கும் இச்சங்கங்கள்பக்கபலமாக நிற்கின்றன. இதனைப்பார்க்கப் பார்க்க சீர்குலைவுவாதிகளின் உள்ளத்தில் பொறுமைத் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. ஆகவே மொழிவழித் தொழிற் சங்க இயக்கத்தையும் சீர்குலைத்து விடுவதென உறுதிபூண்டு நாசவேலையில் இறங்கியுள்ளனர்.

இம்முறை அவர்கள் கையாண்டுள்ள உபாயம் போட்டித் தொழிற்சங்க மொன்றினை நிறுவுவதே. இதன் விபரங்களை 'சுதந்திரன்' அரசியல் விமர்சகர் இவ்விதழில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆழ்ந்த ஓர் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே 'தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸ்' என்ற பெயரில் ஒரு போட்டிச் சங்கத்தை பொன்னம்பலம் கட்சியினர் நிறுவியுள்ளனர்.

'தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் ஐக்கியத்தைச் சிதைத்து, அதன் மூலம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைப் பிளவுபடுத்தி விட்டால், அச்சங்கம் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் மாவட்ட சபை அமைப்பு போன்ற தமிழ் பேசும் மக்களின் முக்கிய கோரிக்கைகளைக் குற்றுயிராக்கிவிடலாம். இவ்வாறு அக்கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்வதின் மூலம் தமிழரசுக் கட்சிக்குப் பலத்த அடி கொடுக்கலாம்?—இதுதான் போட்டித் தொழிற் சங்கம் நிறுவியதின் ஒரே நோக்கமாகும்.

இச்சங்கத்தின் அமைப்புக் கூட்டத்திலேயே திரு. பொன்னம்பலத்தின் வாய் எப்படியோ அந்தரங்கத்தை அம்பலப்படுத்தி விட்டது. அவர் முதற்கூட்டத்திலேயே மாவட்டசபைத் திட்டத்தைச் சாடியுள்ளார். அது பற்றி அரசாங்க ஊழியர்களையும் எச்சரித்திருக்கிறார். இப்பேச்சிலிருந்தே போட்டிச் சங்கத்தின் நோக்கம் தெளிவாகிறதல்லவா?

தொழிற் சங்கங்களைப் பிளவு படுத்துகிறவர்கள் ஊழியர்களின் விரோதிகள். அவர்கள் தொழிற்சங்க இயக்கத்துக்கே துரோகம் செய்பவர்கள். தங்களின் சுயநலநோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே போட்டிச் சங்கங்கள் நிறுவுகிறார்கள். இவற்றை ஊழியர்களும், தொழிலாளர்களும் உணரவேண்டும். இத்தகைய ஆபத்துகள் பல அடிக்கடி தொழிற் சங்கங்களுக்கு ஏற்படுவதுண்டு. ஊழியர்கள் விழிப்புடனிருந்து இந்த 'ஐந்தாம் படை' வேலைகளை முறியடித்து தங்களின் தொழிற சங்கங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஊழியர்கள் தங்களின் ஐக்கியத்தைப் பாதுகாத்துக் கொண்டாலன்றி பல்வேறு வேடங்கள் தாங்கி வரும் தொழிற் சங்கத் துரோகிகள் தொழிற்சங்க ஒற்றுமைக்கு உலை வைத்துவிடுவார்கள். ஊழியர்களின் ஐக்கிய அணியில் வெடிப்பை ஏற்படுத்தவரும் இச்சீர்குலைவுவாதிகளை விரட்டி அடித்து, எந்த நாசவேலையாலும் தகர்க்க முடியாத எஃகு கோட்டையாகத் தங்களின் தொழிற் சங்க அணியை பலப்படுத்திக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழ் பேசும் ஊழியரதும் தவிர்க்க முடியாத கடமையாகும்.

# இலாபத்தில் பங்கு

கூட்டுத்தாபனங்களிலும், தனியார் துறையிலும் சிப்பந்திகளுக்கு இலாபத்தின் ஒருபகுதியை வழங்குவதற்கான சட்டம் இயற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அதற்கான சிபார்சுகளைச் செய்ய தொழில் மந்திரி ஒரு கமிஷனையும் நிறுவியுள்ளார்.

இலாபத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு வழங்குவதென்பதின் ஒரே அடிப்படைப் பொருள் அந்த நிறுவனத்தில் தொழிலாளர்களும் பங்குதாரர்கள் (சொந்தக்காரர்கள்) என்பதே. இலாபத்தில் பங்கு வழங்கியவுடனே அவர்களும் நிறுவனத்தில் உரிமையாளர்களாகிவிடுகின்றனர். இது பொதுவுடமைக்கு நேர்வழி காட்டுவதாகும். மேலும் இது ஒரு மார்க்ஸீய திட்டமென்பதையும் தொழில் மந்திரி மறந்துவிடக்கூடாது.

அத்துடன், இத்திட்டம் சட்டமானால், இன்று இலாபம் காட்டும் தனியார் துறை நிறுவனங்கள் பல திடீரென நட்டத்தில் நடைபெறத் தொடங்கிவிடும். இதனால் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வரி பெருமளவு குறைந்து விடும், இன்றும் அனேக தொழில், வர்த்தகஸ்தாபனங்கள் தங்களுக்குக்கிடைக்கும் இலட்சக்கணக்கான இலாபத்தை ஆயிரக்கணக்கான நட்டமாக மாற்றிக்காட்டிக் கொண்டிருக்கின்றன. அதற்காக அனேக நிறுவனங்கள் இருவிதமான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கின்றன. இது பகிரங்க இரகசியமாகும்.

உதாரணமாக, ஒரு நிறுவனம் தாழ்ந்த பகுதியில் நீர்ப்பசையுள்ள ஒரு காணியை விலைக்குவாங்கியது. அதற்குமண் கொண்டுவந்து போட்டு நிரப்புவதற்காக வருடந்தோறும் ரூ. 20,000 வரை செலவாகியதென கணக்கு எழுதியது. இப்படிப்பல வருடங்கள் கணக்கெழுதப்பட்டது. இறுதியில் பார்த்தால், அந்தக்காணியில் ஒரு பிடிமண்கூட கொண்டு வந்து போடப்படவில்லை என்ற விடயம் அம்பலமாயிற்று. இப்படி இலாபத்தை நட்டமாகக் காட்டும் பல தில்லுமல்லுகள் நடைபெறுகின்றன.

ஆகவே இலாபத்தில் பங்கு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று சட்டம் செய்த அடுத்த வருடமே சுமார் 75% தனியார் துறை நிறுவனங்கள் நட்டக்கணக்கு காட்டுவதில் அக்கறை காட்டத் தொடங்கிவிடும். பின்னர், அந்த நட்டத்தில்தான் தொழிலாளர்களுக்கு பங்கு வழங்க வேண்டும்.

அரசாங்க கூட்டுத்தாபனங்களின் நிலையும் இதற்குக் குறைந்ததன்று. பெரும் பாலான கூட்டுத்தாபனங்கள் இன்று நட்டத்தில் நடை பெறுகின்றன. நட்டத்தில் நடைபெறும் கூட்டுத்தாபனங்களின ஊழியர்களுக்கு இலாபத்தைப் பங்கிட்டுக் கொடுப்பது எப்படி?

ஆகவே இத்தகைய சட்டத்தால் தொழிலாளர்கள் 10% பேர்கூட நன்மை பெறமுடியாது. இது செயல் முறையில் பயனற்ற திட்டமாகும். இதனைக் கைவிட்டு வருடந்தோறும் தொழிலாளர்களுக்குப் 'போனஸ்' வழங்க வேண்டுமென சட்டம் இயற்றுவதே சிறப்பாகும். இன்று 'போனஸ்' வழங்குவது நிறுவனங்களின் நல்லெண்ணத்துக்கு விடப்பட்டுள்ளது. இது சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஒருமாதச் சம்பளமோ, இருமாதச் சம்பளமோ வருடக் கடைசியில் சிப்பந்திகளுக்குப் 'போனஸாக' கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். நிறுவனத்துக்கு இலாபம் கிடைத்திருக்குமாயின், இலாபத்துக் கேற்ப விகிதாசாரப்படி 'போனஸ்' தொகை உயர்த்தப்பட வேண்டும். இதற்கான வசதிகள் சட்டத்தில் செய்யப்பட வேண்டும். இதுவே செயல் படுத்தக் கூடியதிட்டம். அதை விட்டு 'இலாபத்தில் பங்கு' போன்ற மார்க்சிய திட்டங்களை அமுல் நடத்த முயற்சி செய்வது ஒரு ஜனநாயக அரசாங்கத்துக்குப் பல சங்கடங்களை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

# 'வேண்டாம் இந்த நாசவேலை'

## தனி நபர் விருப்பத்துக்கு தமிழ் ஊழியரை கூறுபோடுவதா?

இடது சாரிக்கட்சிகளின் ஆதிக்கத்திலிருந்த தேசியத் தொழிற் சங்கங்கள் வகுப்புவாத ரீதியிற் செயற்படத் தொடங்கியதும், தமிழ் ஊழியர்கள்கட்சி வேறுபாடற்ற முறையில் அச்சங்கங்களிலிருந்து வெளியேறி மொழிவழித்தொழிற் சங்கங்களை அமைத்தார்கள். ஒவ்வொரு துறைக்கும் மொழி வழித்தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கிடையில் மொழி வழித் தொழிற்சங்க சம்மேளனமும் நிறுவப்பட்டுவிட்டது.

### சாதனை

தொழிற் சங்கத்துறையில் மிகப்பலம் வாய்ந்த ஒரு சில தொழிற் சங்கங்களுள் இம் மொழிவழித் தொழிற் சங்கங்கமும் ஒன்றாகும். மொழி வழித் தொழிற் சங்கங்கள் கடந்த ஐந்து ஆண்டு காலத்துள் நடாத்திய போராட்டங்கள் பல. இந்நாட்டின் வரலாற்றில் தனியிடம் பெற்றுள்ள கோடீசுவரன் வழக்குப்போன்ற பல தொழிற் சங்கப் போராட்டங்களில் தமிழ் ஊழியர்கள் தங்கள் பதவியிழப்பையும் துச்சமென மதித்து நடந்திருக்கிறார்கள்.

மொழி வழித் தொழிற் சங்கங்கள் கட்சிச்சார்பற்ற முறையிலேயே இன்றுவரை இயங்கிவருகின்றன.பலதரப்பட்ட அரசியல் அபிப்பிராயம் கொண்டவர்களும் இச் சங்கத்தில் உறுப்புரிமைபெற்றுள்ளார்கள். ஆனால் தமிழ் ஊழியர்கள் மொழி வழி பிரிந்து கட்டுப்பாடான முறையில் ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென்பதில் இவர்களுக்குள் இரண்டுபட்ட கருத்துக்கிடையாது.

### வேதனை

இத்தனை நாரம் ஒன்றுபட்டு நின்று கட்டுப்பாடாக இயங்கும் தமிழ் ஊழியர்களைக் கட்சி அடிப்படையில் பிரித்து சின்னபின்னப் படுத்த ஒருசில சுயநலமிகள் இப்பொழுது முயன்று வருகிறார்கள். இம் முயற்சியின் ஆரம்பமே கடந்தவாரம் கொழும்பு தேயிலைப்பிரச்சார சபைமண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமாகும்.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

'தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸ்' என்ற பெயரில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இச்சங்கம் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் ஆலோசனையுடனும் ஆதரவுடனுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கட்சிச் சார்பற்ற முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுது வினைஞர் சங்கம் போன்ற மொழி வழித் தொழிற் சங்கங்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்துவதே இப்புதிய சங்கத்தின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழர் ஐக்கியமுன்னணிக்காக உழைக்கிறேன் என்று கூறும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இன்று கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்டு நிற்கும் தமிழ் ஊழியர்களை கட்சி அடிப்படையில் பிரிக்க முற்பட்டிருக்கிறார்.

### என்ன உரிமை?

தமிழ் அரசாங்க ஊழியருக்காகப் பாடுபடுவதற்கே இந்தச் சங்கம் ஆரம்பிக்கப் படுவதாகவும், தமிழ் ஊழியர்களின் உரிமைகளைக்காக்க உழைப்பேன் என்றும் திரு. பொன்னம்பலம் இச்சங்கத்தின் ஆரம்பக் கட்டத்தில் பேசியிருக்கிறார். திரு. பொன்னம்பலத்தின் பேச்சில் யாரும் உறுதி பெறத்தேவையில்லை ஆனால் அரசாங்க ஊழியர்களைப் பற்றிப்பேச திரு. பொன்னம்பலத்திற்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கிறோம்.

கடந்த ஐந்துஆண்டுகளாக தமிழ் அரசாங்க ஊழியர்கள் பட்ட இன்னல்களும் இடர்ப்பாடுகளும் கொஞ்சமல்ல. பதவி உயர்வை இழந்தார்கள். சம்பள உயர்வை இழந்தார்கள். சுற்றில் பலர் பதவியையும் இழந்தார்கள். தமிழ் அரச ஊழியர்கள் இத்தனை இன்னல்களையும் அனுபவிக்கும் பொழுது திரு. பொன்னம்பலம் என்ன செய்தார்.

### புரியவில்லையா?

திறைசேரி சுற்று நிருபத்தையும் சிங்களச் சட்டத்தையும் எதிர்த்து திரு. கோடீசுவரன் சட்ட நடவடிக்கை எடுத்தார். அந்த நேரத்தில் பிரபலசட்டவாதியான திரு. பொன்னம்பலம் கியூ. சி. என்ன செய்தார்?

### எச்சரிக்கின்றோம்

இத்தனை இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் தமிழ் ஊழியர்கள் அனுபவிக்கும் பொழுது மூலையில் முக்காடு போட்டிருந்தவர்கள் இன்று தொழிற் சங்கம் அமைக்க முற்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் இன்றைய நிலை இன்னலையும் இடர்ப்பாடுகளையும் கடந்த நிலை. முழு உரிமைகளும் கிடைத்து விடவில்லையென்றாலும், வேலையிழப்புப் போன்ற ஆபத்துக்கள் தோன்றுவதற்கு இடமில்லை. சுருங்கக் கூறின் சற்று சுமுகமான ஒரு நிலைக்கு தமிழ் அரசு ஊழியர்கள் வந்துள்ளார்கள்.

இந்த நிலையில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கும் ஒரு தொழிற் சங்கம் வேண்டுமாம். அவரின் ஆசையை நிறைவேற்ற ஒரு தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸ்!

தனிமனிதனின் ஆசாபாசங்களுக்காக தமிழ் ஊழியர்களைப் பங்கு போட முடியாது. இன்றிருக்கும் ஒற்றுமை குலைந்தால் நாளை வரும் ஆபத்தை எதிர்த்து வெற்றி கொள்ளவும் முடியாது. எனவே 'வேண்டாம் இந்த நாச வேலை' என்று திரு. பொன்னம்பலத்தை எச்சரிக்கின்றோம்.

# சமஷ்டிக் கோரிக்கை கைவிடப் படவில்லை

## பாராளுமன்றத்தில் இராசமாணிக்கம்

**இந்நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களை ஒழித்துக்கட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளைகடந்த அரசாங்கம் மேற்கொண்டது. சிறுபான்மை இனத்தவர்களுக்கு நிரந்தர உரிமைகளை வழங்கவல்லது சமஷ்டி ஆட்சிமுறை என்று கொள்ளப்பட்டதனுல் சமஷ்டி முறைக்காக நாம் பாடுபட்டோம். இன்று ஏற்பட்டுள்ள தேசிய அரசாங்கம் எமது பிரச்சினைகளை ஓரளவு தீர்த்துவைக்கும் எனப் பட்டமையினுல் ஒத்துழைப்பை நல்கிறேம். பலன் எதிர்மாறுகவிருக்குமானுல் சரியான வேளையில் சரியான நடவடிக்கை எடுக்க நாம் தயங்கமாட்டோம்.**

வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது பட்டிருப்பு பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் கருத்துரைவழங்கியபோது மேற்கண்டவாறு கூறினுர். முல்கிரிகல உறுப்பினரான திரு. ஜோர்ஜ் ராஜபக்ச, 'தமிழரசுக்கட்சிதேசிய அரசாங்கத்தில் இணைந்தமையினுல் அவர்களுடைய சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டனர்' என்று கூறியமைக்கு ஆப்பிடுவதாகவே திரு. இராசமாணிக்கத்தின் பேச்சு அமைந்தது.



திரு. இராசமாணிக்கத்தின் பேச்சில் ஒரு சிறுபகுதியைமட்டும், விகற்பமானதொரு மகுடமிட்டு, ஒருஆங்கிலத் தினசரி பிரசுரித்திருந்தது. இதனுல் பல வாசகர்கள் தப்பபிப்பிராயம் கொள்ளநேர்ந்தது. பாராளுமன்ற உத்தியோக அறிக்கையான 'ஹன்சார்ட்'டிலிருந்து (தொகுதி 61-இல 4-பகுதி 2 20-10-1965: 831-835) திரு. இராசமாணிக்கத்தின் பேச்சின் சாரத்தை மொழிபெயர்த்துத் தந்துள்ளோம்:

'நாட்டின் ஒற்றுமைக்காக உழைப்பதாகக் கூறிக்கெள்ளும் தேசிய அரசாங்கத்தில் உறுப்புரிமை பெற்றுள்ட்ட நாங்கள் இன்னும் சமஷ்டிவாதிகள் என்று ஏன் கூறிக்கொண்டிருக்க வேண்டும் என்று முல்கிரிகல உறப்பினர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ச ஒரு வினைவை விடுத்திருக்கிருர். இவ்வினுவுக்கு விடை அளிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தன்னுடைய அறியாமையினுலோ அல்லது வேண்டுமென்றே, எம்மை நாட்டைப்பிரிக்க முயலுபவர்கள் என்று அவர் குறிப்பிட்டார். சமஷ்டிக்கூட்டாட்சிஅமைப்பை நாட்டைத் துண்டாடும் முறை என்று அவர் கருதுவாரேயானுல் நிச்சயமாக அரசியல் அடிப்படை எதையுமே புரியாதவர் என்றே கருத வேண்டியிருக்கிறது. தன்னுடைய அறியாமையை எம்மிடம் வெளிப்படுத்தியமைக்காக அவர் மீது அனுதாபப்படுகிறேன்.

### வேற்றுமையில் ஒற்றுமை

சமஷ்டி என்பது பிரிவினையாகாது. ஒற்றுமையை நிலைநிறுத்தும் ஒப்பரிய சாதனம் சமஷ்டி என்று முதலில் வலியுறுத்த விரும்புகிறேன். ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஒற்றை ஆட்சிமுறை உதவாதெனக் கண்டால் சமஷ்டி அரசியல் அமைப்பே சிறந்த ஔடதமாகும். பிரிவினையில் ஒற்றுமை காண்பதே சமஷ்டி காட்டும்மார்க்கம். பேசும் மொழியால், இனத்தால் பிரிவுபட்டவெவ்வேறு சாகியத்தார்தங்களுக்குள்ளே பொதுவெனக் காணப்பட்ட வற்றுக்கு ஒற்றுமையுடன் உழைப்பதுவே சமஷ்டி முறையின் அடிப்படையாகும்.

இந்நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும் பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகளை மெதுவாக, ஆனுல் திட்டமிட்டு அபகரிக்கத் தொடங்கினர். இவற்றை மீண்டும் மீண்டும் விபரிக்கவேண்டியதில்லை.

நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் மூலம்தங்கள் உரிமைகளைப் பறிகொடுத்து, இரண்டாந்தரப் பிரஜைகளாகி வருவதை உணர்ந்ததும், தங்கள் நலன்களைப் பாதுகாக்க இன்றுள்ள ஒற்றை ஆட்சித் திட்டம் உதவாது என்பதனை சிறுபான்மை இனத்தவர்கள் உணரத் தலைப்பட்டனர். இந்த உணர்வே சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்துவதற்கான ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க தூண்டுதலை அளித்தது. இது பிழையான செயலாகுமா? 1956ம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதும் நிலைமை மோசமடைந்தது. பாரபட்சமும் வகுப்புவாதமும் தலைவிரித்தாடத் தலைப்பட்டன.

இந்நாட்டில் வளர்ந்து வரும் இனப்பாகுபாடுகளைத் தகர்த்தெறிய சமஷ்டிஆட்சிமுறையே சிறந்தது என்பதனை 1956ம் ஆண்டில் நாம் வலியுறுத்திஞேம். சிறுபான்மை இனத்தைப் பாதுகாக்க வல்லது சமஷ்டியே என்றும், இவ்வாட்சிமுறையினுலேயே சிறுபான்மையினர் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழமுடியும்என்றும் உரிமைகள்யாவும் பெற்று மதிப்புடன் சிறக்கமுடியும் என்றும் நாம் கூறிவந்தோம். எங்கள் அவதானம் சரியென்றே வெகுவிரைவில் நிரூபணமானது.

மக்கள் ஐக்கிய முன்னணி-சுதந்திரக்கட்சி ஆகிய கட்சிகளின் ஆட்சிகளில் தொடர்ந்து ஒன்பதுவருடங்கள் தவித்தோம். பல தடவைகளில் நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளைக் கொடுத்தனர். பல சந்தர்ப்பங்களில் எங்கள்உதவிகளை யாசித்துப் பெற்றனர். ஆனுல் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற அக்கட்சிகள் கிஞ்சிற்றும் நினைக்கவில்லை. அவர்களுடைய உதாசீனம் எங்கள் கோரிக்கைகளுக்கு உரமூட்டியது. இந்நாட்டில் சிறுபான்மை இனத்தவர்கள் உயிர் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி ஒன்றே சிறந்த மார்க்கம் என்பது மீண்டும் வலிவு பெற்றது.

கடந்த ஒன்பது வருடங்களும் சிறுபான்மை இனத்தவர்கள் கொடூரத்தனமாக நடாத்தப் பட்டனர். இக்காலங்களில் சிறுபான்மையோர் அற்பத்தனமாக நடாத்தப்பட்டதோடல்லாமல், அவர்களுடைய உரிமைகளும் உதாசீனம் செய்யப்பட்டன.

### இனக்கொலைத் திட்டங்கள்

தமிழ் பேசும் இனத்தையே கருவறுத்து இனக்கொலை செய்யவும் திட்டங்கள் தீட்டப்பட்டன. இதனுலேதான் நாங்கள் திடமுடன் கடந்த ஆட்சியை எதிர்க்கத் துணிந்தோம். உங்களை ஒழித்துக்கட்ட நாம் எடுத்த முயற்சி வீண்போகவில்லை என்பதனுல் இன்று மகிழ்ச்சியடைகிறேம்.

பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைந்தது. இதனை விரிந்த அடிப்படையில் அமைக்க திரு. டட்லி சேனநாயக்க அறை கூவல் விடுத்தார். அவருடன் நாங்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்தியபோது, அவருடைய திட்டத்தின்படி தேசிய சுபீட்சத்துக்காக ஒத்துழைத்தால் சிறுபான்மை இனத்தவர்கள் நன்மை பெற வாய்ப்புண்டு எனப்பட்டது. இந்த வேளையில், கடந்த ஒன்பது வருடங்களாக நாம் வலியுறுத்தி வந்த சமஷ்டிக் கோரிக்கையில் தற்காலீகமாகத் தளர்வு ஏற்படுத்தவும் துணிந்தோம். சிறுபான்மை இனத்தவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் தேசிய அரசாங்கம் செயற்படுமா என்பதை அவதானித்து வருகிறேம். தேசிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்ந்து வருகிறேம். எமது பரிசோதனையின் முடிவு எங்கள் நிலைகளை மாற்றி அமைக்கவும் கூடும். அது வரை நாம் பொறுத்திருக்கிறேம்.

சமஷ்டி ஆட்சிதான் இந்நாட்டுக்கு கந்தது எனப்படும் போது அதற்காகவே நாம் போரிடுவோம் என்று முல்கிரிகல உறுப்பினருக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். எங்கள் நோக்கம் வெற்றிபெறும்வரை எமது போராட்டம் ஓயாது சரியான வேளையில் சரியானவற்றைச் செய்ய நாம் தயங்கப் போவதில்லை.

## முகத்தின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிக்கிறது. புருவங்கள், கண்ணிமைகள் முதலியனவற்றிலும், பார்க்கும் கண் அழகினைத் தேடுகிறது. ஆகவே கண்களைச் சுற்றியுள்ள படலங்கள் அழகு வரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துக் கொள்ளுகின்றன.

பேசப்படும் வார்த்தைகள் வாயிலிருந்து வருபவை. ஆதலினுல் அடுத்து அழகு வரிசையை அலங்கரிக்க வருவது வாயாகும் வாயின் அமைப்பும் அழகுடன் மிளிர வேண்டும். இப்படியே முகத்திலிருக்கும் ஒவ்வொரு அவயவத்தையும் கண்கள் ஆராய்ந்து அழகினை நிர்யிக்கின்றன.

முகத்தின் ஆராய்ச்சி முடிவடைந்ததுமே ஏனைய அவயவங்களை ஆராய முன்ஞேடுகின்றன கண்கள். முகம் பொலிவோடும் கவர்ச்சியோடும் காணப்பட்டால் தான் ஏனைய அவயவங்களை ஆராய நாட்டம் ஏற்படுகிறது.

அழகின் பிரதான இருப்பிடமாக விளங்குவது முகம் என்பதை அறிந்தோம். இம் முகத்துக்கு அழகைத் தருவது யாது?

அடுத்த வாரம் ஆராய்வோம்

## விநாயகர் நகருலா

நீர்கொழும்பு சித்தி விநாயகப்பெருமான் நாற்பது வருடங்களின் பின்னர் நகரவீதிகளில் பவனி வரவிருக்கும் செய்தி கேட்டு சைவப்பெருமக்கள் ஆனந்தப்படுகின்றனர்.

பண்டுதொட்டு வருடாவருடம் ஆவணி உற்சவத்தின்போது நகருலா புறப்படும் விநாயகப் பெருமான் கடந்த 40 வருடங்களாக நகர்ப்புற வீதிகளில் வலம் வரவில்லை. இம்மாதம் 30ம் திகதி மாலை 5 மணிக்கு ஆலயத்திலிருந்து அடியார்புடைசூழ, காவடி, கரக ஆட்டங்களுடன், மேளதாள வாத்தியங்கள் முழங்க புறப்படும் திருஉலா இரவு 11 மணியளவில் நீர்கொழும்பு மைதானத்தை வந்தடையும் என்றும், அங்கே வாணவேடிக்கைகள் நிகழும் என்றும் தெரியவருகிறது.

நீர்கொழும்பில் வாழும் சகல இனத்தவர்களும்-சகல மதத்தவர்களும் இத் திருவிழாவிலே, எவ்வகைப் பாகுபாடுமின்றிக் கலந்து கொள்ளுவார்கள் என்று கூறப்படுகிறது.

## இ. த. அ. க. கொழும்புக் கிளை

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 29-ம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு-3, 16, அல்பிரட் கவுசு தோட்டத்தில் உள்ள பணிமனையில் நடைபெறும்


**சர்வகலாசாலை போதனு கழகம்**
**பகல் - இராப் பாடசாலை**

- பாலர் வகுப்பு தொடக்கம் உயர்தரம் வரை
- ஆங்கிலம் • சிங்களம்
- தமிழ் பாஷை உள்பட

சுருக்கெழுத்து, தட்டெழுத்து முதலிய பாடங்கள் கற்பிக்கப்படும். எவருக்கும் சேரலாம்.

**அதிபர், (U. T. I.)**
540, மருதானை ரேட்.
தொலைபேசி : 91699

**கணவன் பொருளீட்ட**
**காற் சிலம்பினை**
**களிப்புடன் தந்திட்ட**
**கண்ணகியைப்போல்...**
**உங்களது**
**வாழ்வு**
**சிறப்புற்ருேங்க**
**யானும்**
**மார்க்கமொன்றினை**
**மனமுவந்தளித்திடுவேன்!**
என் உதவியால்:

பயனடைந்தோர் தொகை பல்லாயிரம்!

**வர்த்தகம் நலன் பெற—வருமானம் பலம் பெற—வாழ்க்கைத் துறைகள் யாவும் வளம் பெற......**
**விரும்புகின்றவர்கள்**
இன்றே
எனக்கொரு கடிதமெழுதுங்கள்.
எனது ஆலோசனையை இலவசமாகப் பெறுங்கள்!

**பி. எம். திசாநாயக்க**
மாந்திரிக கலாநிதி
**கண்டி ரேட், கம்பளை. போன்: 454**




**“நான் உன்னையும் வெச்சுக்கிட்டு, இன்னெரு பொண்ணையும் கட்டிக்கிட்டு...” வார்த்தையை முடிக்குமுன், என் வான்கோழி வள்ளிமயில் பதறிய பதற்றம்!**

**என் மனைவிக்கு மானவுணர்வு நிறைய உண்டு.**

**“நான் என்ன பொய்யாவா சொல்லுகிறேன்! எங்களுக்கும் வயிறு மட்டுமல்ல, மானம் என்றும் ஒண்ணிருக்கே!”**

இலங்கை அரசாங்கத்தின் தனிச்சிங்கள 'ஆபீஸ்' ஒன்றில் எனக்கொரு குமாஸ்தாவேலை. வேண்டாப் பெண்டாட்டியைக் கட்டிக் கொண்டு 'ஏன்டா நமக்கிந்த விதி' என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பவனை விட மோசமாயிருந்தது என் நிலைமை. 'தனக்குத் தெரியாததனிச்சிங்களத்தை'க் கட்டிக்கொண்டு எவன்தான், எந்த ஒரு தமிழன்தான் கஸ்டப்படுவான். இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் இன்றைக்குத்தான் உறுதிபெற்றது. ஆமாம் கோழைகளின் மனம்இலேசாகத்துணிந்து விடுவதில்லை. துணிந்துவிட்டாலும் ஒருமுடிவுகாணும் வரை உறங்கி விடுவதும் இல்லை. என் கோழை உள்ளம் உறுதிகொள்வதற்கு நாட்கள் இவ்வளவாகி விட்டன. இன்றைக்கு இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும். கட்டவேண்டும்—என்ன கட்டவேண்டும். சட்டியே விட்டேன். மனவேகம் தணியவில்லை. கனவேகத்தில் கடுதாசி ஒன்றில் ஏதோ இரண்டு வார்த்தைகளை எழுதிக் கையொப்பத்தையும் இட்டுக் காரியாலய அதிகாரியிடம் கொடுத்துவிட்டு, ஆபீஸ் நேரம் முடியவும் அப்படியே அலுவலகத்தை விட்டு வெளியேறி விட்டேன்.

நான் செய்த காரியத்தை என் மனைவியிடம் சொன்னல் என்னகோபங் கொள்வாளோ? பத்தினித் தெய்வம்பத்திரகாளியாகி விட்டால்...அது அத்தனை மோசமாயிராது. சிங்களப் 'பெண்ணை'க் கட்டிக் கொண்டு ஆபீசில் கிடந்து நான் படப்போகும் அவஸ்தையைவிட, தமிழ் பெண்ணன என் 'தர்ம பத்தினி' எனக்குக் கொடுக்கும் உபத்திரவம் அவ்வளவு மோசமாயிருக்காது.

'ஆபிசில்' இருந்து வீடு வந்து சேர்ந்தவுடன் என் அன்பு மனைவி கொடுத்த அருமையான தேனீரைப் பருகிவிட்டு, அப்படியே முன்கோலில் போடப்பட்டிருந்த ஒரு சோபாவில் அமர்ந்து முடுக்கிவிட்டேன் வானொலிப் பெட்டியை.

இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் இனம் புரியாத ஏதோ ஒரு பாஷையில், 'சர்...கிர்......ர்...புர்...ர்' என்றுஏதோ ஒருவிதமான இனிய கீதங்கள் இசையெழுப்பிக் கொண்டிருந்தன.

'என்னங்கஇதெல்லாம்? ஒரே இரைச்சலாகக் காதைப் பிளந்திண்டு இருக்கு. நீங்களும் உங்க 'றேடியோப்' பெட்டியும்' என்றிவ்வாறு கூறி இரைந்துகொண்டே வந்துவிட்டாள் என் மனைவி.

'ஆமா, நீ சொல்றதும் சரியேதான். என்றாலும் நீ பாடும் 'கரைச்சல் கீதங்களிலும் பார்க்க இது பாடும் 'இரைச்சல் கீதங்கள்' என் காதுகளுக்கு இனிமையாக இருக்குதேன்னுதான்...'

'போதும் நீங்க சும்மாயிருங்க. அப்புறம் நான் பொல்லாதவளாயிடுவேன், கேலிக்குமட்டும் ஒண்ணும் கொறச்சல் இல்லே.'

'முன்பெல்லாம் நல்ல பொண்ணுய்த்தான் இருந்தியாக்கும். இப்ப மட்டும் பொல்லாதவளாகிறதுக்கு. எப்பவும் நீ பொல்லாதவள் பொல்லாதவள் தானே' என்று வாயாலே சொன்னல், பெண்ணுருவோடு நிற்கும் என் 'தர்ம பத்தினி' பேயுருக் கொண்டுவிடுவாளே என்றஞ்சி, மானசிகமாகத்திட்டிக்கொண்டு மௌனமாகவே இருந்துவிட்டேன்.

'வெடு'க்கென்றுசென்று வானெலிப் பெட்டியை மூடிவிட்டு, என்முன் வந்து நின்ற 'வணங்காமுடி' வள்ளிமயில்—அதுதான் என் 'வான்கோழிக்கு' வைத்திருந்த திருநாமம், மீண்டும் தனது தொகுப்புரையைக் கூறத் தொடங்கினுள். கூண்டில் நின்ற குற்றவாளிபோல நானும் கேட்டுக்கொண்டு இருந்தேன். தீர்ப்புத்தான்-அதுதான் கடவுள் தீர்ப்பு என்னமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தது என் மனம்.

'என்னங்க, அடுத்த வீட்டு அங்கயற்கண்ணி கணவருங்கூட சிங்களத்திலே ஜே. எஸ். சி. பாஸ் செய்து, இப்போ 'கிளாஸ் ரூ' வாகப் பதவி உயர்வும் கெடச்சு, கை நிறைச் சம்பளம் வாங்கிண்டுவந்து மாதா மாதம் அவர் மனைவிக்கிட்டே கொடுக்கிருரு. அவளும் நகை நட்டு புடவை அது இதின்னு வாங்கி நெறைச்சிண்டு ஆடம்பரமாகக் குடும்பம் நடத்துருள். நீங்க என்னடான்னு, எனக்குச் சிங்களமே வேணும் ணிட்டு இப்படியே இருக்கீங்களே. அப்புறம் எப்படித்தான் குடும்பத்தைச் சீராக ஓட்டுறதிங்கிறேன்?

எனக்குக் 'குபீர்' என்றிருந்தது உள்ளுக்குள். இப்போதய நிலையில் இதை வெளியே காட்டிக்கொள்ளலாமா?

'ஓம்,...ஓம்...!... 'காற்சட்டை போட்ட மாப்பிள்ளையைத்தான் எம் மவளுக்குக் கட்டி வைக்கனும்'னு, ஒத்தக்காலிலே நின்னு ஒன்னைப் புடிச்சு என் தலையிலே கட்டிவிட்டார் ஒங்கப்பன். இப்போ நீ எனனடான்னு அதுகூடப் பிடிக்கேலன்னு, இந்தக்களிசானையும் கழட்டி விசிப்புட்டுக் கம்பாயத்தைக் கட்டிக்கிட்டு அழுக்காமை ஓட்டுச்சிப்பு ஒண்ணையும் தலையில மாட்டிக்கச் சொல்றயாக்கும்.'

ஏதோ கொஞ்சம் 'சீரியசாக'ச் சொலலி வைத்தேன்.

'அட...டா...டா...டா, ஐயோ...ஐயோ, நான் ஒன்றும் ஒங்களைப்போயி கோமாளி வேஷத்துக்கு உடுப்புப் போடச் சொல்லலே. ஏதோ சிங்களத்தைப் படிச்சா கொஞ்சம் சம்பளம் கூடுதலாக் கெடைக்குமேன்னு தான் சொன்னேன்.' வாயைச் சப்பினுள் என்மனையாட்டி வள்ளிமயில். நானும் விட்டுக் கொடுக்கவில்லை.

'ஏண்டி அம்மா தாயே! எனக்குச் சம்பளம் வேணுமா, இல்லைச் சிங்களம் வேணுமான்னு கேக்கிறேன். சம்பளம் நெறையக் கெடைக்கனும் எங்கிறதுக்காகச் 'சிங்களத்துக்கு அடிமையாகுன்னு சொல்றயாக்கும். நீ ஏன் சொல்லமாட்டே. சொல்லுவே சொல்லுவே, நல்லாய்ச் சொல்வே ஏம்மா தாயே! ஒனக்கு அடிமையாகிண்டு நான் படுற அவஸ்தையெல்லாம் போதாதின்னு இப்படியும் வேறே......'

'போதும்...பேசாம இருங்க. அடிமையாயிருக்காராம் அடிமையாங் அமா, வெள்ளைக்காரன் ஆட்சியிலே 'இங்கிலீசை'ப் படிச்ச ஒங்களுக்கு சிங்களவன் ஆட்சியிலே சிங்களத்தைப் படிக்கிறதுக்கு என்னன்னு நான் கேக்கிறேன்.'

'பதருத, கொஞ்சம் பொறுதியாயிரு. வள்ளிமயிலு...'சிங்களவன் ஆட்சியிலே'ன்னு ஒரு வார்த்தை சொன்னியே, அங்கதான் பெரிய பிழை இருக்கு, வெள்ளைக்காரன் ஆட்சிக் கதையெல்லாம் வேறே இப்போ சிங்களவர்களுக்கு மட்டுமில்ல, நம்ப எல்லோருக்கும்தான் சுதந்திரம்னு ஒண்ணுண்டு. ஒரு சுதந்திரமான மனிதன் இன்னெரு சுதந்திரமான மனிதனுக்குக் கட்டுப்பட்டு நடப்பானு? அவனுக்கு அடிமையாய் இருப்பானு? ஒரு சின்ன உதாரணம்பாரு. நான் ஒன்னையும் வெச்சுக்கிட்டு இன்னெரு பொண்ணையும் கட்டிக்கிட்டு...

என்றிவ்வாறு சொல்லி முடிப்பதற்கு முன்ன தாவே ஆவேசம் வந்துவிட்டது என்மனைவிக்கு.

'என்ன? என்ன? என்ன சொன்னீங்க?...இன்னுமொரு பொண்ணையும்...'

'கட்டிக்கிறேன்னு ஒரு கதைக்குச் சொல்ல ஆரம்பிச்சேன். முன்னமேயே உதாரணத்துக்கு என்று சொல்லி 'ஒரு பச்சை விளக்கை'ப் போட்டு வெச்சேனே. நீ அதைக் கவனிக்காம பாம்பு கடிச்சவா மாதிரிப் பதறிக்கிறியே.'

'சரி...சரி... சொல்லித் தொலையுங்க.'

'அமா, அப்படி இன்னெரு பொண்ணையும் கட்டிக்கிறேன்னு வெச்சுக்கோ. அப்புறம் அவள் வந்து 'நான் சொல்றபடியெல்லாம் நீ சுடனும், அப்படி இல்லேன்னு ஒன்னைக் கழுத்திலே புடிச்சு வெளியே தள்ளிப்புடுவேன்' அப்படீன்னு அதிகாரம் பண்ணினு,'அடிமை வேலை செய்'ன்னு 'ஓடர்' போட்டாக்கா நீ ஒத்துக்குவியா?'

'நல்லாய்ச் சொன்னீங்க போங்க, அதெப்படி ஒத்துக்குவே. அப்படியெல்லாம் வாழுறதைவிட கழுத்திலே சுருக்குப் போட்டுச் செத்துக்கிட மாட்டேனு என்ன?'

'ஆகா!...பாத்தியா! ஒன் மானம், ரோசம் எத்தினை பெரிசாயிருக்கு, மானத்துக்காகஉசிரையே விடறதுக்குத் துணிஞ்சிட்டியே. ஒனக்கு இப்படி இருந்திச்சின்னு நம்ப தமிழ்த்தாய் இன்னுமொரு பொண்ணுக்கு— சிங்கள மொழிக்கு அடிமையாயிருக்க விரும்புவாளா?'

'அதெப்படி விரும்புவாள்?'

'அப்படிவிரும்பாத ஒரு தமிழ்த்தாயை நாம கொண்டுபோய் அடிமையாக்கிடலாமா?'

'நீங்கெல்லாம் என்ன நல்லாய் யோசிச்சிண்டு தான் பேசிறியளாங்கிறேன். எந்தப் பயலாவது தன் சொந்தத்தாய்கு அடிமை விலங்குபோடுவானு என்ன?'

'ஆமா ஆடுறமாட்டை அடிக்கறக்கணும் பாடுற மாட்டைப் பபடிக் கறக்கணும் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள் என்று என் நெஞ்சுக்குள் சொல்லிக் கொண்டு;

'அப்புறம் நீதானே அடிமை விலங்கை மாட்டு மாட்டுன்னு என்னை அலட்டிக்கிட்டே கெடக்கிற.'

'என்ன சொல்றீங்க? இப்படியெல்லாம் நான் எப்ப சொன்னேன்?'

'எப்ப சொன்னேங்கிறியா வெக்கம் இல்லாம். இப்பகூடச் சொன்னியே, சம்பளம் கூடவரும் சிங்களம் படியுங்கன்னு. தமிழ் மொழிக்கு உரிய இடம் கிடைக்கும் வரைக்கும் சிங்கள மொழியைப் படிக்கலாமா? சிங்களத்துக்குப் பணியலாமா?'

'ஆமா...ஆமா...தப்பு என்னுடையதுதான். இனிமேல் ஓங்க உத்தியோகம் போனலுஞ்சரி, எங்க உயிர் போனலுஞ்சரி, தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து கெடைக்கிற வரைக்கும் உங்களைப் போயிச் சிங்களம் படிக்கும்படி மறந்து கூட ஒரு வார்த்தை சொல்லமாட்டேன், இது சத்தியம்!' என்றுகூறி என் தலையிலையடித்து உறுதி கூறினுள்.

என் மனைவியின் மான உணர்வு கண்டு என் உள்ளம் உவகை கொள்ளச் செய்தது.

'உத்தியோகம் போய்ச்சுதிவீன் நீ உண்மையாகவே,

(11-ம் பக்கம் பார்க்க)



# ‘சிங்களச் சட்டத்தையும் மாற்றலாம் எமது உரிமைக்கு அது தடையாக இருந்தால்’

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறுபான்மையினர் சிறப்புடன் வாழ அனைவரதுஒத்துழைப்பும் அவசியம்

இலங்கை அரசியலிலே இரண்டு கொள்கைகளுக் கிடையில் போட்டி நடைபெறுகிறது. இதில் ஒரு கொள்கை இந்த நாட்டில் ஒரே மொழி ஒரே மதம் என்ற அடிப்படையில் ஒரு ஏகாதிபத்தியத்தை அமைத்து இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களை அடக்கி ஆளும் நோக்கம் கொண்டதாகும். இந்தநாட்டிலுள்ள பல்வேறு மொழி பேசுபவர்களையும் அணைத்து, சகல மதங்களையும் கௌரவித்து, எல்லா மக்களையும் ஒன்று சேர்த்து நாட்டிலும் அரசியலிலும் ஒரு தேசிய ஐக்கியத்தை உருவாக்க வேண்டுமென்பதே அடுத்த கொள்கையாகும்.

இந்த நாட்டில் 1953ம் ஆண்டு தொடக்கம் இந்த இரு கொள்கைகளுக்குமிடையில் போட்டி இருந்து கொண்டே இருக்கிறது. இலங்கைசுதந்திரம்அடைந்த காலந்தொடக்கம் இன்று வரை இந்த இரு கொள்கைகளும் எப்படி வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன என்பதையும் இந்தக் கொள்கைகளை ஆதரித்த அரசியற் கட்சிகள் எப்படி அரசியலில் வெற்றிபெற்றன, அல்லது தோல்வியடைந்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

### ஐ. தே. க. வின் தோல்வி

கௌரவஎட்டியாந்தோட்டைப் பிரதிநிதி (டாக்டர் என். எம். பெரேரா) அவர்கள் 1955ம் ஆண்டிலே தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று கோரி கொழும்பு நகரசபை மண்டபத்திலே நடத்தப்பட்ட கூட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர்தான், குறிப்பாக அன்று பிரதமராகவிருந்த சர். ஜோன் கொத்தலாவலை அவர்கள்தான் குழப்பினார்கள் என்று இச்சபையிலே குற்றஞ் சாட்டினார்கள். 1956ம் ஆண்டளவிலேகளனியில் நடைபெற்ற மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியினர் சிங்களம் மட்டும் என்று தமது கொள்கையை மாற்றிக்கொண்டார்கள்.

இந்த நாட்டில் சிங்களத்திற்கும் தமிழுக்கும் அரசகரும மொழி அந்தஸ்துக் கொடுத்து அவர்கள் பத்துப் பன்னிரண்டு வருடமாகக் கடைப்பிடித்து வந்த கொள்கையிலிருந்து அவர்கள் தங்களை மாற்றிக்கொண்டார்கள். சிறுபான்மை மக்களது மொழிக்கும் மதத்திற்கும் பாதுகாவலாளிகளாக விளங்கிய ஒரு கட்சியினர் அக்கொள்கைகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு ஒரு மொழி என்ற கொள்கைக்குள் தம்மை உட்படுத்திக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து உலகில் எந்த ஒரு கட்சியும் அடைந்திராத ஒரு தோல்வியை 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலே ஐக்கிய தேசியக்கட்சி அடைந்து, எட்டுப் பிரதிநிதிகளுடன் இப்பாராளுமன்றத்திற்குவந்தது. தனதுஉயர்ந்த மேம்பாடானகொள்கையை அது மாற்றியதிலிருந்து அது இந்த நாட்டில் வீழ்ச்சியடைந்தது.

### ஆக்கியவனே அழித்தான்

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து 1960ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு பொதுத் தேர்தல்இந்தநாட்டில் நடைபெற்றது. இந்தத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியினரும் சுதந்திரக் கட்சியினரும் ஓரளவுக்குச் சமமான பிரதிநிதித்துவத்துடன் விளங்கினர். ஆனல் ஐக்கிய தேசியக்கட்சி கூடிய பிரதிநிதித்துவம் பெற்ற கட்சியாக விளங்கியபடியால் அதற்கு அரசாங்கம் அமைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனல் ஆட்சி நடத்துவதற்குத் தேவையான பெரும் பான்மைப் பலம் அதற்குக் கிட்டவில்லை. அப்பொழுது பிரதமராகவிருந்த திருவாளர் டட்லி சேனநாயக்கா அவர்கள் தமிழ்ப் பிரதிநிதிகளது ஒத்துழைப்பைக் கோரினர். அவர் தமிழ் மக்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக் கொடுக்க விரும்பியிருக்கலாம். ஆனல் அப்போதைய சூழ்நிலை அவரது விருப்பத்திற்குச் சரியாக அமைந்திருக்கவில்லை என்றே நான் கூறுவேன். ஏனெனில் திருவாளர் டட்லி சேனநாயக்கா அவர்கள் பெருந்தன்மை வாய்ந்த ஒரு கனவான். அவர் சுதந்திரக் கட்சியினரைப்போலத் தமிழ்ப் பிரதிநிதிகளை ஏமாற்றவிரும்பாத காரணத்தால் தன்னல் நிறைவேற்ற முடியாதவாக் குறுதிகளைத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கஅவர் முன்வரவில்லை.இந்தப்பெருந்தன்மை அவருக்குரியது. ஆனல் அன்று ஒரு ஒற்றுமையான ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சியினர் தவறிவிட்டார்கள்.

### இடதுசாரிகளின் இடக்குவாதம்

1965ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மிகப் பலம் வாய்ந்த கட்சியாக தனது முன்னைய கொள்கைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு தேசிய அரசாங்கத்தை இந்த நாட்டில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்—இன்று தேசிய அரசாங்கத்தை அமைத்து இருக்கின்றது.

இன்னும் அரசியல் வரலாறு படிப்பிக்கின்ற பாடத்தை இடதுசாரிக்கட்சியினர் நன்குணரவேண்டும். இன்று பொருளாதாரத் துறையிலே போட்டி நடக்கவில்லை. தனிப்பட்ட ஒரு மொழி, தனிப்பட்ட ஒரு இனம், தனிப்பட்ட ஒரு சமயம் ஏகாதிபத்தியம் நடத்துவதா, அல்லது இந்நாட்டில் வாழும் எல்லா இனத்தினரும் சேர்ந்து இந்நாட்டு அரசியலிலே பங்கு கொண்டு வாழ்வதா என்பதுதான் போட்டி.

ஆனல் இப்போட்டியிலே குத்துக்கரணம் அடித்தவர்கள் இடதுசாரிக் கட்சியினர் தான். 1955ம் ஆண்டிலே ஐக்கிய தேசியக் கட்சியினர் தான், ‘தாங்கள் தமிழ் மொழிக்குசமத்துவங்கேட்டபோது தங்களைக் குழப்பினர்கள்’ என்று எதிர்க்கட்சியினர் சொன்னர்கள். இன்று தமிழ்மொழிக்கு உரிமை கொடுக்கப்படுகின்ற சமயத்திலே அதை இடதுசாரிக்கட்சியினர்தான் குழப்புகின்ற நிலையில் இருக்கிருர்கள். அது மட்டுமல்ல, அந்தக் காலத்திலே தமிழரசுக்கட்சி காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்தபோது, ‘சுதந்திரக் கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி’ என்று மேடைகள் தோறும் முழங்கிய எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி இன்று அந்தச் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்திருப்பதை நாங்கள் காண்கிறோம். எனவே, வகுப்புவாதக் கட்சிகள் என்று எந்தக் கட்சியை வர்ணித்தார்களோ அக்கட்சியுடன் சேர்ந்துகொண்டு இன்று, ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம், இப்பொழுது ஆட்சிக்கு வந்திருக்கின்ற புதிய அரசாங்கம் தமிழுக்கு உரிமை கொடுக்கப் போகின்றபோது அதைக் கெடுப்பதற்காக வகுப்புவாதத்தைப் பரப்புகின்ற நிலையிலே போய்க்கொண்டிருப்பவர்கள் அந்த இடதுசாரிக் கட்சியினர் தான்.

எனக்கு முன் பேசிய சில இடதுசாரி அங்கத்தவர்கள் நாங்கள் சிறுபான்மை இனத்தினரைக் காப்பாற்றுகிறோம் என்று சொன்னர்கள், சிறுபான்மை இனத்ததினரைக் காப்பாற்றுவதென்றல், அவர்களுடைய மொழியை அழித்துவிட்டு எவ்வாறு இந்தஇனத்தைக் காப்பாற்ற முடியுமென்று நான் கேட்க விரும்புகிறேன்? இன்று இந்நாட்டிலே ஒரு நிலையான ஆட்சி நிலவுவதை, நாம் நமது நாட்டைப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றப் பயன்படுத்த முனைய வேண்டும். ஒரு மொழி, ஒரு இனம் ஒரு சமயம் என்ற கொள்கையை விட்டு எல்லாரும் இந்நாட்டிலே சமமானவர்கள், இந்நாட்டு முன்னேற்றத்தில் அனைவரும் பங்கு கொள்ளவேண்டும் என்ற கொள்கையை எந்தக் கட்சி கைக்கொள்ளுகின்றதோ — இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி இக்கொள்கையைத்தான் கைக்கொள்ளுவதனல்—அக்கட்சியினல் தான் அரசாங்கம் நிர்வாகிக்கப்படுவது வரவேற்கத்தக்கது. ஆகவே, பொருளாதாரத் துறையில் சில கொள்கைகளை வைத்துக்கொண்டு இடதுசாரிக் கட்சியினர்,இன ஒற்றுமையைப்பற்றிய தங்களுடைய கொள்கைகளைக் குலைத்துவிட்டு இனத்துவேசிகளாக மாறிவிட்டார்கள், இவர்கள் இந்நாடு சுபீட்சமடையப் பாடுபடும் தேசிய அரசாங்கத்தைஉடைப்பதற்குப் பயன்படுத்தும் கருவி என்ன? தமிழருக்கு மொழி உரிமை கொடுக்கக் கூடாதென்பதுதான். நான் தமிழ் மக்கள் சார்பிலும், சிங்கள மக்கள் சார்பிலும், ஏனைய சிறுபான்மையோர் சார்பிலும் இந்த இடது சாரியினரை, தேசிய அரசாங்கத்தோடு முழுமனத்துடன், பெருமனத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

### பிரச்சினைதீர உதவுக

மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் எப்படி யெப்படி இந்நாட்டு மக்கள் கட்சிகளை ஆதரிப்பார்கள் என்பது சொல்ல முடியாது. ஆகையால் இம்மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தை நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடம் விட்டுக் கொடுக்கக்கூடாது என்று சிறுமனங்கொள்ளாமல், இந்த மொழிப்பிரச்சினையை நாங்கள் தீர்க்கிறோம், நீங்கள் தீர்க்கக் கூடாது என்று நிற்காமல், இந்தப் போலிக் காரணத்தைவிட்டுவிட்டு, சிறுபான்மையினருடைய தமிழ் மொழி உரிமையை வழங்குவதற்கு அவர்களும் பெருமனத்தோடு இந்தத் தேசிய அரசாங்கத்துக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் இடது சாரியினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மொழியை ஒரு கருவியாகக்கொண்டு எப்படி சமசமாசக் கட்சியினர் இந்தத் தேசிய அரசாங்கத்தைக் குலைக்கப் போகிருர்கள் என்பதற்கு அவர்களுடைய பேச்சு நன்ருக இருக்கிறது. திரு. கொல்வின் ஆர். டி. சில்வா திருகோணமலையில் பேசும்போது குறிப்பிட்ட சில வார்த்தைகளை நான் இங்கு வாசிக்க விரும்புகிறேன்.

‘தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்ருது ஏமாற்றும் தேசிய அரசாங்கத்தை விட்டு, தமிழ் மக்கள் எங்களோடு தங்கள் உரிமைகளைப் பெற முன்வரவேண்டும்.’

### இனப்பிரச்சினை தீர்ந்தால் நாடு முன்னேறும்

அது மட்டுமல்ல, சிங்களம் மட்டும் சட்டத்தைத் திருத்தாமல் தமிழை வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் ஆட்சி மொழியாக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். சட்ட வல்லுநரான அவர் எப்படிக் கூறினர். சிறுபான்மையோருடைய மொழிஉரிமையைத் தருவதற்கு சிங்களம் மட்டும் சட்டத்தை நாங்கள் திருத்த வேண்டுமென்று கூறவில்லை. ஆனல், அச்சட்டத்தை திருத்துவதனல்தான் இந நாட்டுச் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களோடு சமாதானமாக வாழ்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுமென்று எண்ணினல் அதனைத் திருத்துவதில் ஒரு குறையுமில்லை. ஏனென்றல் சட்டங்கள் மக்களுக்காக ஆக்கப்படுகின்றனவேஅன்றி மக்கள சட்டத்துக்காக ஆக்கப்படவில்லை. இந்தியாவிலே ஆக்கப்பட்டுள்ள மொழிச் சட்டம் இன்று திருத்தப்பட இருக்கின்றதென்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சிறுபான்மையினருக்கு இந்த நாட்டிலே தமிழ் மொழி உரிமையைத் தருவதற்காக இந்தத் தேசிய அரசாங்கத்தோடு எல்லோரும், குறிப்பாக எதிர்க்கட்சியினர் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினை தீர்ந்த பின்னர் தான் இந்நாட்டிலே பொருளாதாரத் துறையிலே தாங்கள் முன்னேறவும், கட்சிகள் வளரவும் அடிப்படையாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டு கொள்ளுகிறேன்.

---

# கவரி மான்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கவலைப்படமாட்டியா? நெசமாய்த்தான் சொல்றியா?’

‘நான் என்ன பொய்யா கவரி சொல்லுறேன். எங்களுக்கும் வயிறு மட்டுமில்லே, மானம் என்றும் ஒண்ணிருக்கு, உத்தியோகம் போய்ச்சுதின்னு, உழுதுண்டு வாழ்ந்திண்டுப் போறது. ஒங்களுக்கு ஒடம்பு சரியில்லையா என்ன?’

இதைக் கேட்டவுடன் என்மனமெல்லாம் குளிர்ந்தது வாடிய பயிர் மீது வான்மழை பொழிந்தால் போல கூடிய ஆனந்தம் கொண்டேன். என் மனைவிக்கிருக்கும் மான உணர்வு, மொழி உரிமை வேட்கை எல்லாம் மூடப்பட்டுக கிடந்த மூடுபனி விலகியது கண்டு பூரிப்படைந்தேன். உடனே என சட்டைப்பைக்குள் கிடந்த ஒரு காகிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

‘என்னங்க இது?’

‘சிங்களம் படிக்காவிட்டால் உத்தியோகத்தை விட்டு விலகு’ என்று கழுத்திலே புடிச்சுத் தள்ளுறவரைக்கும் பொறுத்திருக்காம,

‘சிங்களம் படிக்க முடியாது உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிக் கொள்கிறேன்’ என்று மேலதிகாரிக்கு ஒரு காயிதம் எழுதி மேலதிகாரியின் கையிலே கொடுத்திட்டேன் அதன் நகல் தான் இது. நமக்கு மானந்தான் பெரிது அல்லவா?’

என்மனைவி ஏதோ ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டவள் போன்று காணப்பட்டாள் முகத்திலே புன்சிரிப்புத்தவழ கண்களில் இருந்து இரு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் பனித்துதிர்ந்தன. அவளுக்குத் தோன்றிய உணாவு மான உணர்வு, அவள் கண்கள் உகுத்தது ஆனந்தக் கண்ணீர் வேறு சந்தேகமே இல்லை,

மறத்தமிழ் மங்கைக்கு மானந்தான் பெரிது.

---

# மக்கள் வங்கியில் கடன் பெற நிபந்தனை தளரும்

மக்கள் வங்கிகளிலிருந்து கடன் பெறுபவர்களுக்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டிருந்த சில நிபந்தனைகளை நீக்குவதற்கு வங்கித்தலைமைப் பீடம் சம்மதமளித்திருப்பதாகத் தெரிகிறது. தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் முயற்சியினல் கிராமப் புறங்களிலுள்ள பலர் இனிமேல் சிரமம் இன்றி கடன் பெற வாய்ப்புக் கிடைக்கலாம்.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி உட்பட ஏதாவது வங்கி ஒன்றில் தொடர்ந்து ஆறு மாதகாலம் பணம் சேமித்து வைத்தோ அல்லது அத்தகைய தொடர்பு கொண்டோ இருந்தவர்கள் மட்டும் இதுவரை கடன் பெற வாய்ப்பிருந்தது. திரு. செல்வநாயகம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நிபந்தனையை வங்கி அதிகாரிகள் நீக்கிவிட ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# கலைவாணர் தற்கொலை செய்து கொண்டார்

## சினிமா உலகத்தில் ஏற்பட்ட பரபரப்பு



### நுழைவாயில்

திரைப்படம் பாராத மனிதர்கள் இன்று எவரும் கிடையாது. இன்றைய உலகில் சினிமாதான் ஒரு அரிய பொழுதுபோக்குச்சாதனம். மேலை நாடுகளில் தொலைக் காட்சி (டெலிவிஷன்) விருத்தியடைந்திருப்பதனால் சினிமாவுக்குரிய அந்தஸ்து ஓரளவு குறைந்துள்ளது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சினிமாவுக்கு இணையான பொழுது போக்கு அம்சம் எதுவுமே இல்லை.

சினிமா மக்களை பெரிதும் கவர்ந்திழுக்கும் சக்திவாய்ந்ததாக விருப்பதனால் இத்துறையில் சம்பந்தப்பட்டவர்களும் மக்களின் கவனத்தை அதிகமாக ஈர்த்துக் கொள்ளுகின்றனர். திரைப்படத்தை உருவாக்க முனைபவர்களை விட திரையில் தோன்றி நடிப்பவர்களே மக்கள் மனத்தில் இடம் பிடித்துக் கொண்டு விடுகின்றனர்.

தமிழ்த் திரை உலகைப் பொறுத்தவரை முதன் முதலில் மக்கள் மனதில் நிலையான இடத்தைக் கைப்பற்றியவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆவார். நகைச்சுவையுடன் நல்ல கருத்துக்களை மக்களுக்கு ஊட்டியவர் அவர். சமூகச் சீர்திருத்தப் பணிக்கு திரையை ஒரு சிறந்த சாதனமாக்கியவரும் அவரே. தமது வருவாயின் பெரும் பகுதியை தர்மகாரியங்களுக்காகக் கொடுத்து வள்ளல் என்ற பெயர் பெற்றுத் திகழ்ந்தவர் கலைவாணர்.

கலை உலகத் தலைமகனான கலைவாணருடன் நாம் கொண்ட தொடர்பைத் தொடக்கமாகக் கொண்டு, தமிழ்த் திரைப்பட உலகில் புகுதற்கு வாசகர்களாகிய உங்களை அழைக்கிறோம்.

திரைப்பட நடிகர்கள் திரையில் புரியும் தீரவீர அதிபராக்கிரமச் செயல்களைப் பார்த்தும் அவர்களைப்பற்றி பத்திரிகைகள் கூறும் புகழுரைகள்-இகழுரைகள் முதலியவற்றை வைத்தும் இரசிகப் பெருமக்கள் தத்தமக்கு ஏற்றபடி நடிகர்களைத் தரம்பிரித்துக் கொள்ளுகின்றனர். இதனால் இரசிகர்களிடத்தில் அடிபிடி மோதல்கள் தொடங்குகின்றன. சில சமயங்களில் கொலைகளும் நடந்திருக்கின்றன.

இரசிகர்களை இவ்வாறு ஆட்டிப் படைக்கும் சினிமா உலகப் பிரமுகர்களின் உண்மையான உருவங்களை—வாழ்க்கை முறை, குணதிசயங்கள்—எடுத்துக் கூறவே இக்கட்டுரையினை எழுத ஆரம்பிக்கிறோம்.

ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் சினிமா உலகத்தை ஒட்டி வாழும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது. தமிழ் சினிமா நட்சத்திரங்கள் பலர் தமிழ் நாட்டு அரசியலுடன் சம்பந்தப்பட்டிருப்பவர்கள். நமக்கும் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களின் பரிச்சியமும் கிடைத்தது. தமிழ் நாட்டுக் கலைஞர்களையும் அரசியற் தலைவர்களையும் நன்கு ஆராய்ந்தறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தமையினால் நாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, ஒரு புதிய கோணத்திலிருந்து, அவர்களை இக்கட்டுரைகளின் மூலம் படம் பிடித்துக் காட்ட முனைகிறோம்.

வாசகர்களாகிய உங்களுக்குப் பிடித்தமான கலைஞர்களையும், அரசியற் தலைவர்களையும் பற்றிய உண்மைகளை தெரிவிக்கும் போது எதுவிதமான பாரபட்சமுமின்றியே எழுதுவோம் என்று உறுதி கூறுகிறோம். தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எவரையும் தனிப்பட்ட வகையில் புண்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டவை எனக்கருத வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு கட்டுரைத் தொடரை ஆரம்பிக்கிறோம்.

### 'நிலையான இடம்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பிறந்த ஊரான நாகர்கோயிலில் அவருக்கு ஒரு வரவேற்பு வைபவம் நடைபெற்றது. நாகர்கோயில் நகரசபையினரே வரவேற்பை ஏற்பாடு செய்திருந்தனர். கலைவாணர் முன்னதாகவே வரவேற்பு நிகழும் இடத்துக்கு வந்து தமது பால்ய நண்பர்கள் மத்தியில் தரையிலே இருந்தார்.

விழா ஏற்பாடு செய்தவர்கள் ஓடோடியும் வந்து கலைவாணரை அழைத்து மேடையில் வந்து இருக்கும்படி கோரினார்கள். அப்போது கலைவாணர் 'ஐயா அதெல்லாம் நிலையான இடம் இல்லையே! இதோ இருக்கிறது இந்தப் பூமி தான் நிலையான இடம். ஒருவன் எவ்வளவு தூரம் ஆகாயத்தில் பறந்தாலும் கடைசியிலேஇங்கேதானே வந்தாகவேணும்' என்று தரையைத் தொட்டுக் காட்டி எல்லோரையும் மெய்மறக்கவைத்தார்.

அங்கம்

ஒன்று




கலைவாணர் இறந்து விட்டார் என்ற செய்தி கேட்டு தமிழகம் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகமே கவலைக் கடலில் மூழ்ந்தது. மஞ்சள் காமாலை நோயினால் பீடிக்கப்பட்ட கலைவாணர் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 1957ம் ஆண்டு ஆகஸ்ட் 30ம் திகதி கலைவாணர் உயிர் பிரிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னை தியாகராய நகரிலுள்ள கலைவாணரின் இல்லமான மதுரபவனத்தில் கலைவாணரின் உயிரற்ற உடலுக்கு கலைஞர்களும் இரசிகர்களும், கலைவாணரால் உயர்வடைந்தவர்களும், அவருடைய உற்றார் உறவினர்களும் கூடி கண்ணீர் மாலைகளைச் சூடினர். உருக்கமான அக்காட்சியைக்கண்டவர்கள் தம் வாழ்நாளில் என்றும் மறக்கவே மாட்டாகள். அன்று சென்னையில் கூடிய மக்கள் கூட்டத்துக்கு ஒப்புவமை கூறத்தக்க திரள் இதுவரை சேரவில்லை என்றால் மிகையாகாது. மக்களின் நெருக்கத்தைத் தாங்காத மதுரபவனத்துமதிலே சாய்ந்துவிட்டது.

சிரிக்க வைத்து சிந்திக்க வைத்த சீர்திருத்த மன்னன், சிரித்தவர்களை அழவைத்துவிட்டு சிரித்தபடியே காடேகினான். கலைவாணர் பிரிந்து இன்று எட்டு ஆண்டுகளாகி விட்டன.

கலைவாணர் இயற்கைக் காரணங்களால் இறக்கவில்லை—தம்மைத் தாமே சாகடித்துக் கொண்டார் என்று இன்று குரல் கொடுக்க நாம் துணிந்துள்ளோம்.

கலைவாணர் இறக்கும் போது நாம் நமது நாடாகிய இலங்கையிலேயே தான் இருந்தோம். எனினும் 'கலைவாணர் தற்கொலை செய்து கொண்டார்' என்று நாம் கூறுவதற்கு போதுமான ஆதாரங்கள் எம்மிடம் சிக்கியுள்ளன. தமிழகத்தில் இக்கருத்தினை நாம் 'நடிகன் குரல்' மூலம் வெளியிட்ட போது, முன்னணி நடிகர்கள் மத்தியில் வீசியபுயல் இருக்கிறதே—அதனை இன்று நினைத்தாலும் பயமுண்டாகிறது.

#### நாம் கொடுத்த வாக்கு

கலைவாணர் மறைந்து ஒரு வருடத்தின் பின்னர்—1958ம் ஆண்டு ஜூலை மாதம் 19ம் திகதி—சென்னை மாநகரை அடைகிறோம். ஐந்து வருடங்களின் முன்னர் கலைவாணருக்கு நாம் கொடுத்த வாக்கை மீறியே தான் நம் தமிழகத்தின் தலைநகரில் கால் வைக்கிறோம்.

1953ம் ஆண்டு கலைவாணர் தமது கலைக்குழுவுடன்இலங்கை வந்திருந்தார். தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றின் ஆங்கில உதவி ஆசிரியனாகப் பணிபுரிந்த நாம் கலைவாணரின் 'மெய்காப்பாளர்' பதவியைப் பெற்று, அவருடன் இலங்கையின் பல பாகங்களையும் வலம் வந்தோம். மலைநாட்டின் மிக முக்கியமான நகரங்களுக்கெல்லாம் கலைக்குழு சென்ற போது, கலைவாணர், மதுரம் அம்மையார் ஆகிய இருவரும் பிரயாணம் செய்த அதே வண்டியின் முன் இருக்கையில் நாம் இருந்து கொண்டோம். இதனால் அக்கலைக் குடும்பத்தின் உறுப்பினனைப் போலாகி விட்டோம். கலைவாணருடன் பலதரப்பட்ட கருத்துக்களையும் பரிமாறி, பெறற்கரிய பேறுகளைப் பெற்றோம்.



கலை உலகப் பேச்சுக்கள் எழும். சினிமாத்துறையில் ஒரு 'பைத்தியம்' நமக்கும் சிறு பராயத்திலேயே இருந்தமையினால், சினிமாக் கலையைப் பற்றிப் பேச்செழும் போது நாமும் நமது கருத்துக்களை கலைவாணரிடம் மோதவிடுவோம். நமது சினிமாப் 'பைத்திய'த்தை ஓரளவு எடைபோட்ட கலைவாணர் 'தம்பி நீங்க சென்னைக்கே வந்துடுங்க. சினிமாலைனிலே இம்பிட்டு தெரிஞ்சு வச்சிக்கிட்டிருக்க உங்களுக்கு அங்கே நல்ல சான்ஸ் கிடைக்கும்,' என்று கூறினார். நாம் புழகாங்கிதம் அடைந்தோம். விரைவில் தமிழகம் வருவதாக நாம் கலைவாணரிடம் வாக்களித்தோம்.

'தம்பி சென்னை வந்ததும் நேரே நம்ம வீட்டுக்கு வந்திடுங்க. அப்புறம் நானே உங்களைக் கலைத்துறையில் விட்டு பயிற்றுவிக்கிறேன்' என்று அவர் கூறினார். அத்துடன் மட்டுமல்லாமல் நமது குழுவிலிருந்த கலைஞர்களான

எழுதுவது:

**'ஈழத்தரசன்'**

காக்கா ராதாகிருஷ்ணன், வி. கே. ராமசாமி, சி. எஸ். பாண்டியன், குலதெய்வம் ராஜகோபால், எஸ். ஜே. காந்தா முதலானோருக்கும் நம்மையிட்டுப் பலப்பல கூறினார். மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலைய அதிபராக அன்றிருந்த திரு. எஸ். அம்பலவாணரிடமும் (இன்று இரத்மலானை இந்துக் கல்லூரி அதிபர்) விரைவில் எம்மைத் தமிழகம் அனுப்பி வைக்கும்படி கோரினார்.

கலைவாணருடன் சேர்ந்து கலை வாழ்வில் ஈடுபட நமக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவருக்கு அளித்த வாக்குப்படி அவருடைய இல்லத்துக்கு, கலைவாணர் உயிருடன் இருந்த போது, நாம் செல்லமுடியவில்லை. அவர் இல்லாத அவருடைய இல்லத்துக்கு 1958ம் ஆண்டு ஆகஸ்ட் 29ம் திகதிதான் நாம் போய்ச்சேருகிறோம்.

'அம்மா இருக்கும் போது வந்து சிறப்படைய வேண்டிய நீங்கள் இன்றுதான் வருகிறீர்களா?' என்று மதுரம் அம்மையார் கண்ணீர் உகுத்து நம்மை வரவேற்றார்கள். மதுரம் அம்மையார் கலைவாணரை 'அம்மா' என்றுதான் அழைப்பது வழக்கம். கலை உலகத்துக்கே அன்னை போன்ற கலைவாணரை மதுரம் அம்மையாரே தாய்க்குச் சமமாகக் கருதியதில் தப்பு என்ன இருக்க முடியும்?

(13-ம் பக்கம் பார்க்க)



ஹுபேட் கௌலட்டின் கரங்களிலே பந்து போல் பாய்ந்து ஏறிக்கொண்ட பதுமையான ஜில் சென்ட் ஜோன்சை விடுவிக்க எல்சா லாஞ்செஸ்டர் முயல்கிறார்? ஆனால் ஜில் உல்லாசமாகவன்றோ காணப்படுகிறார். சிரிப்பூட்டும் இக் கட்டத்தை கொழும்பு மெஜஸ்டிக் திரையில் ஓடும் எம். ஜி. எம். 'தேன்மதி விடுதி' (HONEY MOON HOTEL) படத்தில்காணலாம்.

# சினிமாப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

## 7464 விடைகளில் 6162 சரியானவை

ஏவகுசா, நீதிக்குப் பின் பாசம் இலவச குறுக்கெழுத்துப் போட்டியில் மொத்தம் 7464 விடைகள் எமக்குக் கிடைத்தன. இவற்றுள் ஆக 1302 விடைகள் பிழையானவை. சரியாக எழுதி அனுப்பிய 6162 விடைத்தாள்களில் பரிசுக்குரியனவையாக ஆக ஆறு கூப்பன்களே தெரிவு செய்யப்பட்டன.

சினிமாஸ் லிமிடெட் அதிபர்களுள் ஒருவரான திரு.எம். இராமேஸ்வரம் அவர்களே பரிசுக்குரிய விடைக் கூப்பன்களைப் பொறுக்கி எடுத்தார்.

### பரிசு பெறுவோர் விபரம்:—

**1-வது பரிசு:**

6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.

பெறுபவர்:

**திரு. தி. சண்முகராசா,**
பொலீஸ் நிலையத்தடி, சுன்ஞகம்.

**2-வது பரிசு:**

4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.

பெறுபவர்:

**திரு. இ. நல்லையா,**
4-ம் குறிச்சி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி.

**3-வது பரிசு:**

3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.

பெறுபவர்:

**திரு. வே. தாமோதரம்பிள்ளை,**
வவுனியா வடக்கு சமாசம், மாங்குளம்.

**ஆறுதல் பரிசுகள்:**

2 மேல் வகுப்பு டிக்கட்டுகள் விதம் 3 பரிசுகள்.

**திரு.சி. தெய்வேந்திரன்,**
55, பஜார் வீதி, பதுளை.

**திரு. எஸ் யோகநாதன்,**
168, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**திரு. சோ. கதிர்காமநாதன்,**
41 பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.

இப்போட்டியில் கலந்துகொண்ட சகலருக்கும், ஒத்துழைப்பு நல்கியோருக்கும், பரிசுகள் வழங்கிய சினிமாஸ் நிறுவனத்தினருக்கும் சுதந்திரன் சார்பில் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்ரும்.

**பரிசு பெறுவோருக்கு உரிய காலத்தில் பரிசு டிக்கட்டுகள் அனுப்பி வைக்கப்படும்.**

பலநேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டுமொரு முறை சரியான விடைகளைப் பிரசுரித்துள்ளோம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ரா | 2 ம | ச் | 3 ச | ந் | தி | 4 ர | 5 ன் |
| 6 க | கு | | ரோ | | | 7 கு | ண |
| 8 வா | டா | | 9 ஜா | ன | 10 கி | | ம |
| | பி | | தே | | 11 மி | 12 தி | கு |
| 13 வ | ஷே | | வி | | ல் | ரு | க் |
| ர | க | 14 லை | | | வா | மூ | ல |
| 15 க | ம் | ப | ன் | | | க | இ |
| வி | | 16 அ | ற் | பு | த | ம் | |

**எமது அடுத்த புதுமுறை**
**இலவச சினிமா போட்டி**
**விரைவில் ஆரம்பமாகும்**

---

சினிமாஸ் அளிக்கும்

## அன்பு பிலிம்ஸ் கை கொடுத்த தெய்வம்

பற்றிய

### எமது விமர்சனம்

'ஐ பட்டதெல்லாம் பொன்னுகும் என்று கூறுவார்களே! இது டைரக்டர், கதை வசன கர்த்தா-கே. எஸ். கோபாலகிருஷ்ணனுக்கு வெகுபொருத்தமானதாகும். அவருடைய கருத்திலே விளைந்து அறுவடையாகும் திரைப்படங்கள் அத்தனையும் மேற்படி பழமொழியை மெய்ப்படுத்தி விடுகின்றன.

கோபாலகிருஷ்ணனின் தயாரிப்புகள் யாவும் மிகவும் உயர்ந்த படங்களே. அவற்றுள், நாம் பார்த்தவைகளில் 'கை கொடுத்த தெய்வம்' சகல துறைகளிலும் உயர்ந்தே விளங்குகிறது என்று நாம் கூறினுல் அதில்-தவறு இருக்கிறது என்று எவரும் கூற முடியாது என்றே கொள்ளுகிறோம். அதிகமான திருப்பங்களற்ற ஒரு சிறு கதையினை உயர்ந்த திரைச் சித்திரமாக்கி விட்டிருக்கிறார்.

கோகிலா ஒரு வெள்ளை உள்ளம் படைத்த வெகுளிப் பெண். சகுந்தலா அவள் தங்கை. செல்வந்தரான மகாதேவனின் செல்வ மக்கள் இவர்கள். வரதன் என்ற கொடியவன் கோகிலாவின் வெகுளித்தனத்தை ஆதாரமாக வைத்து தன்னை அவளுடன் சோடி சேர்த்துக்கதை கட்டி விடுகிறான். தங்கைக்குண்டான கெட்டபெயர்தமயன் ரவியை வடநாட்டிலுள்ள அமிர்த சரசுக்கு துரத்தி விடுகிறது.

அங்கே ரகுவின் சினேகம் கிட்டுகிறது. இருவரும் இணைபிரியா நண்பர்களாகி விடுகின்றனர். ரவி லதாவை மணக்கிருன். ரகு தன் பிறந்தகமான தமிழகத்துக்கு பெண்பார்க்கப் போகிருன். கோகிலாதான் அவனுக்கு ஏற்பாடானபெண். அவளின் நிரபராதத்தன்மையை அவன் புரிந்து மணக்க இச்சைப்படும் போது நண்பன் ரவி குறுக்கிடுகிருன். அமிர்



தம் போன்றவளானுலும் தான் சந்தேகிக்கும் தன் தங்கையை தன் நண்பனுக்குத்தர ரவி மறுக்கிருன். பார்ப்போர் உள்ளத்தைப் பதறவைக்கும் முடிவுடன் கதை முடிகிறது.

ரகு—சிவாஜி கணேசன், ரவி-ராஜேந்திரன், கோகிலா—சாவித்திரி, லதா — கே. ஆர். விஜயா, சகுந்தலா—புஷ்பலதா,—மகாதேவன்,—ரங்கராவ், இவர்கள் தான் இப்படத்தின் ஜீவநாடிகள். ஒருவரை மிஞ்சி மற்றொருவர் நடிப்பின் சிகரத்தை எட்டிப் பிடிக்க உயர்ந்து கொண்டே போகின்றனர். ஆகவே இத்தனைபேரில் யார் சிறப்பாக நடித்துள்ளார் என்பதை எவரும் கூறிவிடமுடியாது.

லதாவையும் ரகுவையும் ஒரு கூட்டம் சந்தேகிக்கிறது. அந்தநேரத்தில் சிவாஜி துடித்தெழுந்து அக்கூட்டத்தைச் சாடுகிருரே! அவ்விடத்தில் சிவாஜி நடிக்கவேயில்லை, உணர்ச்சிமலையாகவே தோன்றுகிருர். தன் வெகுளித்தனத்தைச் சுட்டிக் காட்ட, தங்கையையே 'லூஸ்' என்று கூறுகிருரே சாவித்திரி-இந்த இடம்...... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

பாரதியின் தேசிய ஒற்றுமைப் பாடலான 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' பாடல் எப்போதும் காதுகளில் ரீங்காரிக்கும். மேலும் நாம் நமது கருத்தைக் கூறமுடியாது. நீங்களே பார்த்து விட்டு தீர்ப்பளியுங்கள்.

—நாதன்

---

சிலோன் தியேட்டர்ஸ்
அளிக்கும்

**'சிற்பியின் செல்வன்'**

விமர்சனம்
அடுத்தவாரம்

---

## கலைவாணர்.....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

**நினைவு நாள்**

அடுத்தநாள் கலைவாணரின் நினைவு தினம் மதுரபவனத்தில் காருக்குறுச்சி அருணுசலத்தின் நாதசுர இசையுடன் ஆரம்பமாகியது. கலை உலகத்தார் அனைவரும் அங்கே குழுமியிருந்தனர். மதுரம் அம்மையாரின் அழைப்பின் பேரில் நாமும் அங்கே சென்ருேம்.

அட்டவணைப்படி நிகழ்ச்சிகள் நடை பெற்றன. மதிய உணவின் போது எம். கே. ராதா எஸ். எஸ். ராஜேந்திரன் ஆகிய இருவருக்கும் இடையில் உள்ள காலியான இடத்தில் நம்மை டைரக்டர் என். எஸ். ராம்தாஸ் அமர்த்துகிருர். ராதா அவர்கள் ஏற்கனவே நமக்கு அறிமுகமாகி விட்டவர். அவர் நம்மிடம் பேச்சுக் கொடுத்த தோடல்லாமல், ராஜேந்திரன் அவர்களுக்கும் நம்மை அறிமுகம் செய்து வைக்கிருர். 'இவர் தாஞ அவர்' என்று ராஜேந்திரன் கேட்ட தொனியிலிருந்து இங்கும் இன்னுெமொரு வம்பு முளைவிடுகிறதோ என்று நமக்குச் சற்று கிலி பிடித்துவிட்டது.

இன்னும் ஒரு வம்பு என்று கூறுவதனுல் ஏற்கனவே வேரோர் வம்பிலே நாம் மாட்டிக்கொண்டிருப்போம் என்று வாசகர்கள் குறிப்பறிந்து விடுவார்கள். அந்த வம்பினையிட்டு நாம் எதையும் ஒளித்து விடவில்லை. கூறி விடுகிறோம்.

கலைவாணர் நினைவு தினத்தை முன்னிட்டு, தென்னிந்திய நடிகர் சங்கம் வெளியிடும் மாத இதழான 'நடிகன் குரல்' ஆகஸ்ட் 30-ம் திகதி விசேடமலர் ஒன்றினை வெளியிட்டது.இம்மலரிலே இடம் பெறுவதற்காக 'ஈழத்தில் என். எஸ். கே' என்ற மகுடமிட்ட எமது கட்டுரையையும் அனுப்பிவைக்கிறோம். இக்கட்டுரை 'நடிகன்குரல்' ஆசிரியராக விருந்த திரு. டி. கே. சண்முகத்திடம் முதலில் சென்றது.

நமது கட்டுரையில் உள்ள ஒரு பந்தி கலைஞர் சண்முகத்தைத்துணுக்குற வைத்திருக்க வேண்டும். அல்லா விட்டால் அக்கட்டுரையைத் தூக்கிக்கொண்டு கலைஞர் சண்முகம் 'நடிகன் குரல்' பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றிருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆரைத்தேடி ஏன் ஓடவேண்டும்?

**எம். ஜி. ஆர். வீட்டில் ரணசிகிச்சை**

புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும், கலைஞர் டி. கே. சண்முகமும், எம். கே. ராதாவும் புரட்சி நடிகருடைய இல்லத்தில் வைத்து எமது கட்டுரையைப் புரட்டிப் புரட்டிப் படித்தனர். வித்துவான் வே. இலட்சுமணன் அவர்களும் அப்போதைய நடிகர் சங்கச் செயலாளர் ஆர்.எம்.சோமசுந்தரமும் தலையிட்டு நமது கட்டுரைக்கு ஓரளவு ரணசிகிச்சைசெய்து உயிர்ப்பிச்சை பெற்றுக்கொடுத்தனர். ஆகவே குறைப்பிரசவமான குழந்தை போன்று கட்டுரை வெளியானது.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். முதலான கலையுலக முதல்வர்களை நமது சின்னஞ்சிறிய கட்டுரை சிந்தனையில் ஆழ்த்திய காரணம் என்ன என்பதை எமக்கு அறியவே முடியவில்லை. கட்டுரை அச்சுவாகனம் ஏறப் புறப்பட்ட மறுநாள் திரு.சோமசுந்தரம் எம்மை அணுகி கட்டுரையில் பிரச்னைக்குரிய பந்தியைப் பற்றிச் சில குறுக்கு விசாரணைகளை நடாத்தினர். நாம் அவருக்குக் கொடுத்த காரணங்களை விடவேறு ஏதாவது அந்தரங்கக் கருத்துக்கள் உள்ளதோ என்பதை பல கோணங்களிலிருந்து நம்மிடம் வினவினார். ஆனுல் எதுவிதமான உட்கருத்தையும் நாம் கூறமுடியவில்லை.

'கலைவாணர் இயற்கைக் காரணங்களால் இறக்கவில்லை. தற்கொலையே செய்துகொண்டார்' என்று நாம் அக்கட்டுரையில் கூறியிருந்தோம். இச்செய்தியே கலைஉலகப் பிரமுகர்களை கதிகலங்கடித்து விட்டது.

வளரும்

# திருமலைத் தீரர் எழுதிய த. அ. க. வரலாறு

## நூல்வடிவில் உருப்பெற தமிழரசார் உதவுவார்களா?

காலைப் பொழுது நேரம் 8-45 தூயவெள்ளை வேட்டி உடுத்து கயங்காத சட்டை போட்டு கையில் குடைக் கோவைகளோடு, 188, சுங்கவீதி வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு அசைந்தாடி வந்து வீட்டுவளவுப் படலையைத் திறந்து கொண்டு ஆரோக்கணித்துக் கொள்கிறுரே? அந்த மனிதர் யார்!

மாலைப்பொழுது, நேரம் 5 மணி திருகோணமலை முற்றவெளி மைதானத்தில் சாவகாசமாக இடது கையால் மெல்ல தலையைத் தாங்கிக் கொண்டு 'கிழ' நண்பர்கள் புடைசூழ அனந்தசயனம் செய்கிறதே? அந்த உருவம் யாருடையது?

திருமலைத் தொகுதியின் ஏகப்பிரதிநிதியாக, முடிசூடா மன்னனுக-1952ம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரைக்கும்-விளங்கிய திருமலை தந்த மாமலைஇராசவரோதயம் அவர்களே மேலே எழுப்பப்பட்ட வினுக்களுக்கு விடையாக இருப்பவர்.

ஒரு முழுநாள் பொழுதில் வெவ்வேறு நேரத்தில் மேலே வர்ணித்த காட்சியை நித்தம் காணலாம்.

காலையென்ருல் திருமலை கூட்டுறவு சமாசத்திலும், மாலையென்ருல் முற்றவெளி மைதானத்திலும், வேறு இடங்களில் தேடியலையாது, கண்ணை மூடிக் கொண்டு போய் ஆளைக் கண்டு பிடித்துவிடலாம்.

### எதிலும் ஒழுங்கு முறை

திரு. இராசவரோதயம் அவர்களது அன்ருட வாழ்க்கையில் மிக நுணுக்கமாக வரையறுக்கப்பட்ட ஒழுங்கைக் காணலாம். ஆதவன் கிழக்கே உதயமாகி மேற்கே மறைய ஒருவேளை மறந்து விடக்கூடும். ஆனல் இராசவரோதயம் அவர்களது அன்ருட வாழ்க்கை ஒழுங்கு கடிகாரத்தின் முட்கள் நகருவது போல் ஓடிக்கொண்டிருக்கும். இரண்டு முழு ஆண்டுகள் அவருக்கு மிக அணிமையில் அவரது வீட்டு வளவுக்குள் குடியிருந்து கவனித்துவிட்டு இத் 'தீர்ப்பை' வழங்குகிறேன்.

திரு. இராசவரோதயம் அவர்களுக்கும் 'அவசரம்' என்ற வார்த்தைக்கும் வெகு தூரம். படிப்பது, குளிப்பது, உண்பது எல்லாம் சாவகாசமாகவே நடைபெறும்.

1952ம் ஆண்டில் திருமலைத் தொகுதிக்கு த. அரசுக் கட்சிசார்பாக ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்கு கட்சியின் தலைமைப்பீடம் திருமலையை சல்லடை போட்டு அரித்த பொழுது அதில் எஞ்சிநின்றவர் திரு. இராசவரோதயம் அவர்களே. கட்சி அவர்மீது வைத்த நம்பிக்கையை கடைசிவரை காப்பாற்றிய பெருமை அவருக்குண்டு. கூடுவிட்டு கூடுபாய்கிற அரசியல்வாதிகள் நிரம்பிய இக் காலத்தில் திரு. இராசவரோதயம் அவர்களது அரசியல் பண்பாடு போற்றத்தக்கது. திரு. இராசவரோதயம் அவர்களுடைய இக் கட்சிப்பற்றை தந்தை செல்வநாயகம் அவர்களே பாராட்டிப் பேசியதை கேட்டிருக்கிறேன். அன்றும் சரி, இன்றும் சரி, திரு. இராசவரோதயம் அவர்களைப் போன்ற ஒரு நேர்மையாளரை— நல்லவரைக் காண்பது கடினம்.

### பாரி பரம்பரை

அரசியல் துறையில் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையிலும் திரு. இராசவரோதயம் அவர்கள் தங்கமான மனிதர்.

ஒன்றுக்கும் வழியில்லையென்று சொல்லி அவரிடம் பண உதவிக்கு ஒரு நாளைக்கு ஒரு மனிதராவது அவரது வீட்டு வாசலில் நிற்பார். அப்படி வருபவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும் -வரோதயர் வெறுங்கையுடன் தங்களை வெளியில் அனுப்பமாட்டாரென்று, காரணம் திரு. வரோதயரும் 'இல்லை'யென்று சொல்லத் தெரியாதவர். அது மட்டுமல்ல தனது நிதிநிலமையை அறிந்து கட்டுமட்டாகக் கொடுக்கவும் தெரியாதவர். சட்டைப் பைக்குள் கையை விட்டால் அதில் அகப்படுகிற தாளைப் பார்க்காமலே கொடுத்துவிடுவார். அது ஐந்து ரூபாவாகவும் இருக்கும் ஐம்பது ரூபாவாவாகவும் இருக்கும்.

பாராளுமன்ற தொடர்க் கூட்டத்துக்கு திரு. இராசவரோதயம் கொழும்புக்கு வந்து முகாமிட்டால், கையில் கொண்டுவந்த காசைத் தொலைத்து'விட்டு ரெயில் பிரயாணத்துக்கு செலவுத் தொகை கேட்கும் அவரது தொகுதி ஆட்களைக் காணலாம். அவர்களுக்கு வசதியாக இவரும் தனது இருப்பிடத்தை கோட்டை புகையிரதநிலையத்துக்கு முன்னுல் உள்ள 'கொலோனியல் ஓட்டலில்' வைத்துக்கொண்டிருந்தார்!

### பாராளுமன்றத்தில் வரோதையர்

பாராளுமன்றத் தொடர் கூட்டம் என்றவுடன் ஞாபகம் வருகிறது சின்ன வகுப்பிலே படிக்கிற பள்ளிப் பிள்ளை மாதிரி ஒழுங்காக பாராளுமன்றத் கூட்டங்களுக்கு போய் வருவார். பாராளுமன்றத்தில் தமிழ் அரசுக் கட்சியின் ஏகப்பிரதிநிதியாக எதிர்கட்சி ஆசனத்தில் கல்லுப்போல அமர்ந்திருப்பார். மதிய உணவு—அல்லது மாலை தேநீர் இடைவேளைக்கு சபை ஒத்திவைக்கப்படும் பொழுதுதான் எழும்புவார். இடையில் எழும்பி அடிக்கடி வெளியில் போவதும் வருவதுமாக இருக்கமாட்டார்.

இப்போதுள்ள த. அரசுக் கட்சிப் பிரதிநிதிகளில் திரு. இராசவரோதயம் அவர்கள் போல் பொறுப்போடு பாராளுமன்றத்துக்கு வருபவர்களோ—அல்லது வந்த பின் தங்கள் அசனத்தில் பொறுமையோடு இருப்பவர்களோ கிடையாது. இதற்கு விதிவிலக்கு தந்தை செல்வநாயகமும், திருமலைப் பிரதிநிதி திரு. மாணிக்கராசாவும்.

### 'இராசவரவேற்பு'

திரு. இராசவரோதயம் அவர்கள் பாராளுமன்றத்துக்கு திருமலையிலிருந்து புறப்படுவதும் திருமலைக்கு வந்துசேருவதும் அவரது வீட்டாரைப் பொறுத்தளவில் பெரிய நிகழ்ச்சி. வீடு கலகலப்பாகக் காணப்பட்டால் திரு. இராசவரோதயம் கொழும்புக்கு புறப்படுகிருர் அல்லது கொழும்பிலிருந்து திரும்புகிருர் என்று தீர்க்கதரிசனம் சொல்லிவிடலாம்.

கொழும்புக்கு புறப்படுவதற்கு அறிகுறி திரு. இராசவரோதயம் அவர்கள் வேட்டிக்குப் பதில் கால் சட்டை 'புஷ்சேட்டுடன்' சோபாவில் அமர்ந்திருப்பது.

கொழும்பிலிருந்து திரும்புவதற்கு அறிகுறி அதிகாலை 4 மணிக்கு வீட்டுக் குசினியில் பாத்திரங்கள் உருளும் ஓசையும், தேங்காய் திருவல் சப்தமும், மூக்கைத் துளைக்கும் பலகார மணமும்!

ஒவ்வொரு முறையும் வரோதயர் கொழும்பிலிருந்து திரும்பும் பொழுதும் இந்த 'இராச' உபசரிப்பும் வரவேற்பும் இருக்கவேசெய்யும். ஒருநாள் பார்த்தாவது

### தாமரைமணாளர்

அவரது வீட்டார் அமர்க்களப்படாமல் இருந்தது கிடையாது. இராசவரோதயர் தானே எனவே அவருக்கு 'இராச' வரவேற்பு இருப்பது இயற்கையென்று எங்களுக்குள் நாங்கள் விமரிசனம் செய்துகொள்வதுண்டு.

### திருமதி வரோதயர்

திரு. இராசவரோதயம் அவர்களுக்கு இப்படியெல்லாம் 'இராச' வரவேற்புக் கிடைக்கிற இரகசியத்துக்கு விடை அவருக்கு வாய்த்த இல்லத்தரசியார்தான்.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்ற புரட்சிக் கவிஞரது வாய் மொழிக்கு இலக்கியமாக விளங்கியது இராசவரோதயம் குடும்பம். சாட்டுக்குக்கூட இருவருக்கும் இடையில் கோபமோ, தாபமோ ஏற்பட்டது கிடையாது. தங்கள் பிள்ளைகளைக் கூட ஒரு நாள் பார்த்து வைததுகிடையாது. எல்லோரும் குறிப்பறிந்து நடந்தார்கள். சுருக்கமாகச் சொன்னுல் மற்றவர்களுக்கு இக் குடும்பம் ஒருநல்ல எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது.

திரு. இராசவரோதயம் அவர்கள் நிறையப் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கமுடையவர். புத்தகங்களென்ருல் எல்லாவிதமான—முற்போக்கு பிற்போக்கு, நற்போக்கு—புத்தகங்களையும் வாசிப்பார். அவரது புத்தக அலுமாரியில் புராணங்களும் இருக்கும், அண்ணுவின் 'புராண மதங்களும்' இருக்கும். வேறுவிதமாகச் சொன்னுல் 'முன்னைப் பரம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்து மப் பெற்றியனுய்' விளங்கினுர்.

### கறுப்பும் சிவப்பும்

ஒரு முறை வழக்கம்போல பெப்ரவரி 4 சுதந்திரதினத்தை திருமலை த. அ கட்சிக் கிளை துக்கதினமாகக்கொண்டாடியது. அந்தத்தினத்தில் கருப்புப் பட்டி தயாரித்து அதை வீடு வீடாகக்கொண்டு போய் கொடுத்து உண்டியலில் பணமும்சேர்ப்பதென்று முடிவாகியிருந்தது. எங்களில் சிலர் கருப்புப் பட்டிக்குப் பதில் கருப்பும்-சிவப்பும் போட்ட பட்டி அடித்துவிட்டோம். அதைப்பார்த்த பொழுது வரோதயர் அவர்களுக்கு கருப்பு—சிவப்புநிறங்களின் தாற்பரியம் உடனே விளங்கிவிட்டது. 'ஒரு கல்லிலே இரண்டு மாங்காய் விழுத்திவிட்டீர்கள்' என்று சிரித்துக் கொண்டே சொன்னுர்.

திருமலை மாவட்டத்தில் 'சாதித் தடிப்பு' யாழ்ப்பாணத்தில் காணப்படுவது போல் இல்லை. இருந்தாலும் உள்ளூர் குட்டித்தலைவர்களிடம் இந்த நோய் உள்ளூர குமைந்து கொண்டிருக்கும். நகரசபைத் தலைவர் தேர்தல் வரும்பொழுது வெளியிலும் இது தலைகாட்டத் தொடங்கும். மேடையில் சமத்துவம் பற்றி முழக்கியவர்களும் அந்த நேரம் பார்த்து 'அது மாம்......அது எப்படி அந்தப் பகுதி ஆளை, சேர்மன் ஆக்குவது. ஊர்விடுமா?' என்று வேதாந்தம் பேசுவார்கள்.

### இறுதிப்பணி

ஆனல் திரு. இராசவரோதயம் அவர்களைப் பொறுத்தளவில் அவர்எந்தச்சந்தர்ப்பத்திலும் சாதிவித்தியாசம் பாராட்டியதே கிடையாது. அவருக்குச் சொந்தமான முத்துக்குமாரசுவாமி கோவிலின் திருக்கதவுகள் தீண்டாதாருக்கு தில்லைச் சிதம்பரத்தின் திருகதவுகளோ, நல்லூர் கந்தனின் திருக்கதவுகளோ திறந்துவிடப்படுவதற்கு முன்பே திறந்து விடப்பட்டன. அரசியல் துறையிலும் மூதூர் தொகுதிக்கு அமரர் ஏகாம்பரத்தை பலருடை எதிர்புக்கு மத்தியில் நிறுத்திய பெருமை அவருக்குண்டு.

திரு. இராசவரோதயம் போன்ற நல்லவரை—உத்தமரை நாம் எப்போதோ ஒரு முறை அபூர்வமாகச் சந்திக்கிறோம். திருமலை தந்த மாமலை விட்டுப்போனபணி நிறைய இருக்கிறது.

அவரது கடைசிக்காலத்தில் தமிழ் அரசுக்கட்சியின் சிறப்புமிக்க வரலாற்றைவிரிவாக எழுதிவிட்டுச் சென்றிருக்கிறர். கட்சியைப்பற்றி அவரது கருத்துரைகளை இந்தத் தலைமுறை, குறிப்பாக வாலிபர்கள் அறியும் வண்ணம் அவை நூல் வடிவில் கொண்டுவர கட்சித் தலைமைப் பீடம் முயற்சிக்க வேண்டும். அவரது நினைவாக நாம் செய்யக் கூடிய மிகச் சிறந்த பணி இதுவாகும்.

## வாழ்ந்து காட்டிய..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆழ்ந்த சிந்தனையின் பின் ஆற்றிய சொற்பொழிவென்பதை உணரலாம்!

### பலதுறைப் பணிகள்

இவர் அரசியல் துறையிலும்—சைவசமய திருபணியிலும்—சமூகத் தொண்டிலும் அயராது உழைத்த ஒரு உத்தமர்.

திருகோணேஸ்வரர் கோவிலின் புணருத்தாரணத்தில் முன் னின்றுழைத்து, அக் கோவிலைப் புணருத்தாரணம் செய்து வைத்தார். இப் பெரும் பணிக்கு ஈழவாழ் சைவ அன்பர்கள் இவருக்கு கடமைப் பாடுடையவராவர்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனது கோவிலையே திறந்துவிட்ட சீரிய சீர்திருத்தவாதி அதற்காக பாராளுமன்றத்திலே சட்டம் இயற்றுவதற்கும் முக்கிய கருத்தாவாக இருந்தார். அரசியலில் இருந்தாலும் சமூக சீர்திருத்தத்தைக் கைவிடாது, அத்துறையிலும்அயராதுஉழைத்த பெருமை அமரர் இராசவரோதயத்தையே சாரும்.

அமரர் இராசவரோதயம் அவர்கள் அரசியல்வாதியாகவும்—சமயத்தொண்டனுகவும்—சமூகத் தொண்டனுகவும்- கூட்டுறவாளனுகவும்- கோயில் தர்மகத்தாவாகவும்—சீர்திருத்த வாதியாகவும் வாழ்ந்து; இப்படித்தான் வாழவேண்டும் எனவாழந்து காட்டிய தியாகசீலர்.

அன்னுரின் 2வது நினைவு தினத்தில் அன்னுர் விட்டுச் சென்ற திருப்பணிகளையும்—கடமைகளையும் தொடர்ந்து சிறப்புற செய்வோம் என சங்கல்பம் எடுப்போமாக.

## தீண்டாமை ....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

புப் பெற்ற—நான் என்றுமே கண்டதில்லை.

தீண்டாமை என்ற சொல்லை உச்சரிக்கவே திகிலடைய வேண்டியிருந்த அந்தக் காலத்திலே 'தீண்டாமையை ஒழித்தே தீருவேன்' என்றுகுரல்கொடுத்த தியாகச் செம்மல் அவர். சரியெனக் கண்டதைத் தயங்காமல் கூறுபவர்.

வடக்கு மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் இணைப்புப் பாலமாக விளங்கிய இராசவரோதயம் அவர்கள் தனது வாழ்க்கையின் கடைசி அந்தியாயத்தை யாழ்ப்பாணத்திலேயே முடித்துக் கொண்டதன் மூலம் அதனை நம் கண் முன்னே நிரூபித்துக் காட்டிவிட்டார்.

மறைந்த அம் மாவீரரது பெருமையை எண்ணிக் காலமெல்லாம் கண்ணீர் சிந்திக்கொண்டும், மேடைகளிலே அவர் பெருமையைப் பேசிக்கொண்டும், பத்திரிகைகளிலே எழுதிக் கொண்டும் இருப்பதை விட, உண்மையிலேயே நாம் செய்யக் கூடியது ஒன்றுண்டு. அமரர் இராசவரோதயம் அவர்கள் எந்தெந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டாரோ அவை ஈடேறப் பணி புரிவதே மறைந்த அத் தியாகிக்கு நாங்கள் எழுப்பக் கூடிய நிலையான ஞாபகச் சின்னமாகும்.

## 'தெய்வமகன்' அறிமுகவிழா

பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. நாவேந்தன் அவர்களின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'தெய்வமகன்' என்னும் நூலின் அறிமுகவிழா 29ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறும்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்கள் அறிமுக விழாவினைத் தொடக்கி வைப்பார். எரிபொருள் கூட்டரவுத் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை விழாவுக்குத் தலைமை தாங்குவார். வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் நூலினை அறிமுகம் செய்து வைப்பார். ஏ. வி. பி. கோமஸ் பி. ஏ., ஏ. பி. செல்லையா பி. எஸ்சி உட்படப் பலர் நூலினை விமர்சனம் செய்வார்கள்.




# வகுப்பில் நடந்தது...

அன்று எமது பாடசாலைக்கு கல்விப் பரிசோதகர் வருவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தமையால் மாணவர்கள் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வகுப்பறைகளில் அமர்ந்திருந்தார்கள். ஆசிரியர் பூவியியல் கற்பித்துக் கொண்டிருந்த சமயம் வந்து நின்ற மோட்டாரிலிருந்து இறங்கிய பிரமாண்டமான பரிசோதகரின் தோற்றம் எல்லோருக்கும் அச்சத்தைத் தோற்றுவித்தது.

முற்பகுதியில் இருந்த எங்களுடைய மூன்றும் பிரிவிற்குள் பரிசோதகர் நுழைந்தார். வணக்கம் செலுத்திய நம்மை அமரும்படி பணித்துவிட்டு தானும் அமர்ந்தார். முற்பகுதியில் அமர்ந்திருந்த பாலுவை எழுந்து நிற்கும்படி கூறிவிட்டு 'உலகத்தைப் படைத்தது யார்?', சொல் என்ருர். பயத்திஞல் எங்களை நோக்கி விழித்த பாலுவை ஆசிரியர் முறைத்துப் பார்த்துவிட்டு 'டேஎன்னைப் பார்த்துச் சொல்லடா' என்ருர். அவன் 'நீங்கதான் சார்' என்று கூறிஞன். ஆசிரியருடைய கண்கள் கோபத்திஞல் மின்னின. கைப்பிரம்பு ஆடியது. பாலு! யோசித்துச்சொல் என்று உறுமினர்.

பாவம் பாலு அவனுடைய சரீரம் லேசாக நடுங்கியது. அவன் ஆசிரியரையும் பரிசோதகரையும் மாறிமாறிப் பார்த்தான். பரிசோதகரின் கம்பீரமான உடற்கட்டும் கட்டு மீசையும் உத்தியோக உடைகளும் அவரைப்பெரிய மனிதராகக் காட்டியது. இந்தப்பெரிய உலகத்தைப் படைத்தது இவராகத்தான் இருக்கும் என்று எண்ணி 'பரிசோதகர் சார்' என்று அவரைச்சுட்டிக்காட்டிஞன், வகுப்பறையில் ஒரே சிரிப்பு.

ஆசிரியர் ஆத்திரத்தில் உதடு துடிக்க 'முட்டாள் என்ன சொன்ஞய்' என்று கைப்பிரம்பை ஓங்கிக் கொண்டு பாலுவை நெருங்கிஞர். பரிசோதகரோ ஆசிரியரைத் தடுத்து விட்டு பாலு நிதானமாய் ஆராய்ந்து. சொல்லப்பா?' என்ருர் நாங்களும் பாலுவின் வாயசைவை நோக்கியவாறே இருந்தோம். பாலுவுக்கு ஆசிரியரின் ஆத்திரமான நிலை பயத்தைக் கொடுத்தது உலகத்தைப் படைத்தது. இவ்வளவு குற்றமா? நான்தான் உலகத்தைப் படைத்திருக்க வேண்டும். அதுதான் ஆசிரியர் என்மேல் ஒரே கோபமாயிருக்கிருர் என்று எண்ணிய பாலு 'சார் நான்தான் சார் உலகத்தைப் படைச்சவன். தெரியாமற் செய்து விட்டேன் மன்னிச்சுக்குங்க சார்' என்று கண்ணீருடன் அழுதழுது கூறிஞன். கோபத்துடன் நின்ற ஆசிரியருட்பட பரிசோதகர் மாணவர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

**தாமரையாள்**

## உங்கள் உளச் செவிக்கு

செட்டிநகர் மதியரசு

1. ஈருருளியைக் கண்டு பிடித்தவர் யார்?
2. பவுண்டன் பேனவை கண்டுபிடித்தவர் யார்?
3. மூன்று வல்லரசுகளின் அணுஆயுதப் பரீட்சைத் தடை ஒப்பந்தம் எப்போது கைச்சாத்திடப் பட்டது?
4. உருசிய வானவெளி வீரநங்கையின் பெயரென்ன?
5. இலங்கையில்மேதினம் முதன் முறையாக அரசாங்க விடுதலை நாளாக ஆக்கப்பட்டது எப்போது?
6. தோட்டத் துரைமார் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கையர் யார்?
7. இலங்கையின் முதலாவது தாதுகோபுரத்தைக் கட்டியவன் யார்?
8, பொலநறுவையிலுள்ள தொப்பவிவாக்குளத்தைக் கட்டியவன் யார்?
9. யாருடைய ஆட்சியின் போது புத்தருடைய புனிதப்பல் இலங்கைக்கு முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டது?
10. உலகிலுள்ள மிக நீண்ட பாலம் எது?
11. விக்ரோறியா நீர் வீழ்ச்சியின் உயரமென்ன?
12. சுவஸ்கால்வாயின் நீளம் என்ன?
13. உயரப்பாய்ச்சல் போட்டியில் புதிய உலக சாதனையை ஏற்படுத்திய பெண்மணி யார்?
14. உலகில் உயர்ந்த சிகரமெது?
15. நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்தவர் யார்.

விடைகள் :

1. மைக்மில்லன்
2. வால்ட்மன்
3. 7.8.1963ல்
4. செல்வி வலன்டிஞ டெரஸ்கோவா
5. 1956-ல்
6. செனட்டர் தோமஸ் அமரசூரியா
7. தேவநம்பியதீசன்
8, உப்பதீசன்
9. மேகவண்ணன்
10. ரேபாலம்
11. ஏறக்குறைய 400 அடி
12. ஏறக்குறைய 100 மைல்
13. சீனப்பெண் செங்—பெங்—டெங்
14. எவரஸ்ட்
15. சான்கொலன்




## பரிசுப் போட்டி

**போட்டி 1.**

விமர்சனப் போட்டி: 'ஆறுகால்மடம்' தொடர் கதையின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி மதிப்பிடுதல். இதில் கதை, எழுத்து, நடை, கதாபாத்திரங்கள், சம்பவங்கள், வருணனைகள் முதலியவற்றின் தன்மைகளை விபரிக்கலாம்.

**போட்டி 2**

'ஆறுகால் மடம்' தொடர் கதையில் உமக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? ஏன் அக் கதாப் பாத்திரம் மட்டும் உமக்குப் பிடித்தது?

**உங்கள் கவனத்திற்கு:**

★ வளர்மதி வாசகர்கள் அனைவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

★ இரு போட்டிகளிலும் ஒருவர் ஒரே பெயருடன் கலந்து கொள்ளலாம். ஆனால், புல்ஸ்காப்' தாளின் இரு பக்கங்களுக்கு மேல் எழுதக் கூடாது; தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதல் வேண்டும்.

★ ஒவ்வொரு போட்டிக்கும் மும்மூன்று புத்தகப் பரிசில்கள் உண்டு.

★ இப்போட்டிகள் பற்றி எத்தகைய கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. மாமாவின் தீர்ப்பே முடிவானது.

★ போட்டியிற் பங்கு பற்றுபவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி ஆகிய தகவல்களை தனியே ஒரு தாளில் எழுதி கட்டுரைகளுடன் இணைக்க வேண்டும்.

★ 31-8-65ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கட்டுரைகள் பரிசிலனைக்கு எடுக்கப்பட மாட்டாது.

★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்பும் கட்டுரைகள் மட்டுமே பரிசிலனைக்கு எடுக்கப்படும்.

'வளர்மதி மாமா'
மே/பா சுதந்திரன்
த. பெ. எண், 1183
கொழும்பு.

# இனிது இனிது

**இராஜம் புஷ்பவனம்**

நித்திரை வராமையினலே—நான்
நிலவெழில் பருகச்சென்றேன்
சித்திரப் பதுமையன்ஞள்—என்
சிந்தையைப் பதித்துநின்ருள்

இனிதேஉன் தோற்றமென்றேன்—அவள்
எனைநோக்கிப் புன்னகைத்தாள்.
இனிதிலும் இனிதுஉண்டே—அதை
அறிவாயோ தோழி என்ருள்

பக்தியே இனிது என்றேன்—அது
பக்தருக்குத்தானே என்ருள்
முக்தியே இனிது என்றேன்—அது
முடிவிலே தானே என்ருள்

செல்வமே யினிது என்றேன்-அது
செல்வர்க்கன்றே என்ருள்
கல்வியே யினிது என்றேன்-அது
கற்றுணர்வார்க்கே என்ருள்

குழலோசை இனிது என்றேன்-அது
கோகுலத்தார்க்கே என்ருள்
மழலைதான் இனிது என்றேன்-அது
மாதாபிதாவிற் கென்ருள்.

இனிது ஏகாந்தம் என்றேன-அது
எங்களுக்கல்ல என்ருள்
கனிச்சுவை இனிது என்றேன்-அது
களிப்பினிற்றிளைப் போர்க் கென்ருள்.

காதலே இனிது என்றேன்-அது
காதலர்க்கன்றே என்ருள்
வாதமே இனிது என்றேன்-அது
வல்லராம் புலவர்க் கென்ருள்.

பாடலே இனிது என்றேன்-அது
பாவலர்க்கன்றே என்ருள்
ஆடலே இனிது என்றேன்-அது
ஆடவல்லார்க்கே என்ருள்

விருந்தோம்பல் இனிது என்றேன்-அது
விரும்பிடு வோர்க்கே என்ருள்.
பெருங்கொடை இனிது என்றேன்-அது
பெரிய உளதார்க் கென்ருள்

அமிழ்தமே இனிது என்றேன்-அது
அமரர்க்கன்றே என்ருள்
தமிழ்தான் இனிது என்றேன்-அவள்
தலைதாழ்த்தி எழுந்து நின்ருள்

இனிதிலும் இனிதொன்றுண்டோ?
சொல்லுவாய்
ஏந்திழையாளே என்றேன்
இனிதிலும் இனிது இன்தமிழே-உனக்
கேனிந்த ஐயம் என்ருள்

என்றவள் எழுந்து நின்ருள்-என்முன்
நின்றவள் மறைந்துவிட்டாள்
என்மனதிலே நிறைந்து நின்ற-என்னருந்
தமிழ்த்தாயும் புன்னகைத்தாள்.

# தமிழே எங்கள் விழியாகும்

**"கலையரசன்"**

தமிழே எங்கள் விழியாகும்-அது
தன்னிகர் இல்லா மொழியாகும்
அமுதே அதன் சுவையாகும்-இவ்
அவனியில் அழியாத்திருவாகும்

அகம்புறம் கலையாய் கண்டவளாம்-தமிழ்
அழியா ஒலியாய் நிற்பவளாம்
தகவுறும் பல்கலை ஓம்பி நின்றே-உலகில்
தமிழ் விளக்கேற்றி நடந்தவளாம்

இயல் இசை நாடகம் முத்தமிழாம்-கலை
இணைந்திட வந்திடும் செந்தமிழாம்
தருமத்தின் பாதையில் அடிஎடுத்து-வெற்றித்
தாயென வந்திட்ட செந்தமிழாம்

தமிழே எங்கள் மொழியாகும்-அது
தருமத் தலைவன் வழியாகும்
தமிழே எங்கள் ஒளியாகும்-இது
தமிழ்க்குலம் காக்கும் விழியாகும்

## மகத்தான 5வது வாரம்!
## கிங்ஸ்லி
மற்றும்
**சினிமாஸ் திரைகளில்**

பாசத்தைக் கடந்து நீதியைத் துலக்கி
நேர்மையை நிலை நிறுத்தும் உயர்ந்த சித்திரம்!



எம். ஜி. ஆர்., சரோஜாதேவி, அசோகன்,
ராதா, நம்பியார், ரங்கராவ், கண்ணம்பா
நடித்த

# நீதிக்குப் பின் பாசம்

---

## பிளாஸா—கெப்பிட்டல்
**விஜயா மொடேர்ன் வசந்தா**
[மட்டக்களப்பு] [பண்டாரவளை] [புசல்லாவ]
2வது வாரமாக
**ராஜா** யாழ்ப்பாணம்

பாகுபாட்டால்
மனிதனைப்
பேதம் செய்
யும் மடமையை
உடைத்தெறி
யும் ஒப்பற்ற
காவியம்!



விஜயபுரி வீரன்
ஆனந்தன்
அசோகன்
சந்திரகாந்தா
நாகேஷ்
ஷீலா
பாண்டி-
செல்வராஜ்
கண்ணன்
நடித்த

# நானும் மனிதன் தான்

---

இப்பொழுது நடைபெறுகிறது!
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**கிங்ஸ்லி**
முதலான சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது!

★ நட்புக்கு
இலக்கணம்
★ பாசத்துக்கு
எடுத்துக்காட்டு
★ பரிவுக்கு
உரைகல்
★ பண்புக்குக்
கண்ணாடி



ஜனாதிபதி விருது
பெற்று தமிழகத்தில்
வெற்றிக் கொடி
நாட்டிய

# கை கொடுத்த தெய்வம்

சிவாஜி கணேசன், சாவித்திரி, ரங்கராவ்,
ராஜேந்திரன், கே. ஆர். விஜயா,
புஷ்பலதா, எம். ஆர். ராதா
நடித்தது

---

★ ★ ★ ஏ. எல். எஸ். புரட்சித் தயாரிப்பின் ★ ★ ★
## 4வது வெற்றி முரசு கொட்டும் வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **ஈரோஸ்** (பாமன்கடை) **ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருமலை) **லிபேர்டி** (ஹட்டன்) **லிபேர்டி** (பதுளை) **ஆனந்தா** (கம்பளை)

★ நடிப்பிலே புரட்சி! ★ கதையிலே புரட்சி! ★ முடிவிலே புரட்சி!
வயது வந்த—வயது வராத ஒவ்வொரு பெண்ணும் பார்க்க வேண்டிய படம்!







**டைரக்ஷன் : பீம்சிங்**
**இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி**

# சாந்தி

**பாடல்கள்: கண்ணதாசன்**
**கதை : சோலைமலை**

சிவாஜி கணேசன்—விஜயகுமாரி—எஸ். எஸ். ராஜேந்திரன்—தேவிகா—எம். ஆர். ராதா—நாகையா—நாகேஷ்—மனோரமா நடித்தது
"யார் அந்த நிலவு......? ஏன் இந்தக் கனவு"......?

---

## கலை துலங்கும் 2வது வாரம்!

**செல்லமஹால்** (கொழும்பு) **வின்சர்** (யாழ்ப்பாணம்) **இம்பீரியல்** (மட்டக்களப்பு) **நெல்சன்** (திருகோணமலை)

சிற்பக் கலைக்காக தன் குடும்பத்தையே தத்தம் செய்யும்
தூய கலைஞனின் தித்திப்பான காவியம்

**கல்யாண்குமார்-சரோஜாதேவி-நாகையா**
**கிரிஜா-புஷ்பவல்லி-உதயகுமார்**
முதலியோர் நடித்த

# சிற்பியின் செல்வன்

[ஈஸ்ட்மென் கலர்]



**எதிர்பாருங்கள்!**
ஜெமினி கணேசன், தேவிகா,
மனோகர், முத்துராமன், ரங்கராவ்
பாலாஜி
நடித்த
ஜெமினியின் உன்னத சித்திரம்
## வாழ்க்கைப் படகு

**எதிர்பாருங்கள்!**
சிவாஜி கணேசன், சரோஜாதேவி,
சௌகார் ஜானகி, நாகேஷ்
தோன்றும்
சிவாஜி கணேசன் அளிக்கும்
வர்ண ஓவியம்
## புதிய பறவை

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1965-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.